கல்கி



KALKI 25-8-1957 30 நயா பைசா

உங்கள் கேசத்தை அதிக கருமையுடனும் பகட்டுடனும் வைக்க குளிர்ச்சியான வெண்ணிற **ப்ரில்க்ரீம்** உபயோகியுங்கள்



சுபாஷ் குப்தே
புகழ்பெற்ற இந்திய கிரிக்கெட் பௌலரான இவர், வெற்றிபெறும் மற்றவர்களைப்போல் கேசத்தை அதிக பளபளப்புடனும் கருமையுடனும் வைப்பதற்கு எப்பொழுதும் ப்ரில்க்ரீம் உபயோகிக்கிறார்.



* ப்ரில்க்ரீமின் சுத்தமான க்ரீமாக்கப்பட்ட எண்ணைகள் உங்கள் கேசத்தின் இயற்கை கருமை நிறத்தை சோபிக்கச் செய்கின்றன. சுத்தமான வெண்ணிற ப்ரில்க்ரீமை உங்கள் தலையில் தினந்தோறும் அழுத்தித் தேயுங்கள். பொடுகுகள் ஏற்படுவதை இது தடுத்து உங்கள் கேசத்தை சுத்தமாயும் ஆரோக்கியத்துடனும் வைக்கிறது.

* சிறிதளவு ப்ரில்க்ரீம் நீடித்த உபயோகத்திற்கு வருகிறது! இன்றே ஒரு ப்ரில்க்ரீம் ஜாடியை வாங்கி எவ்வளவு காலம் அது நீடித்த உபயோகத்திற்கு வருகிறதென்று பாருங்கள்.

வாழ்க்கையில் வெற்றிபெற்றவர்கள்

ப்ரில்க்ரீம் BRYLCREEM

உபயோகிக்கிறார்கள்

குருப் லாபரட்டரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; சம்பவங்களும் கற்பனையே.

உங்கள் வருங்காலம் உங்கள் கையில் உள்ளது

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் நீங்கள் உயிருடன் இருக்கும்பொழுதும் மிகுந்த பலனளிக்கும். உங்கள் வாழ்நாளில், ஆயுள் இன்ஷ்யூரன்ஸின் அனுகூலங்களை நீங்கள் பெறலாம். அதற்கு சிறந்த சாதனம் என்டௌமெண்ட் பாலிஸி.

என்டௌமெண்ட் பாலிஸி என்பது ஹோல் லைப் பாலிஸியிலிருந்து மாறுபட்டது. ஏனெனில் ஹோல் லைப் பாலிஸியின்படி, இன்ஷ்யூர் செய்தவரின் மரணத்திற்குப் பின்பே பாலிஸித் தொகை பைசல் செய்யப்படும். ஆனால் என்டௌமெண்ட் பாலிஸியின்படி நீங்கள் குறிப்பிட்ட வருஷங்களுக்கு பிரீமியங்கள் செலுத்த ஒப்பந்தம் செய்கிறீர்கள். அதன் முடிவில் முழுத் தொகையும் உங்களுக்கு வழங்கப்படும். (ஒரு சமயம் இந்த காலவரைக்குள் மரணம் சம்பவித்தால், அஸைன் செய்யப்பட்டவர்களுக்கோ அல்லது நாமினிக்கோ, தானாகவே பாலிஸியின் முழுத்தொகையும் வழங்கப்படும்.)



தங்களுடைய அந்திகாலத்திற்கோ, அல்லது பிராவிடண்ட் பண்ட் தொகையுடன் வருமானமாக சேர்த்துக்கொள்வதற்கோ விரும்பும் நடுத்தர சம்பாத்தியமுள்ளவர்களுக்கு என்டௌமெண்ட் பாலிஸி மிகவும் சிறந்தது. குழந்தைகள் படிப்பு, கலியாணம், அல்லது வேறு எவ்வித பண நெருக்கடிகளை வருங்காலத்தில் எதிர்பார்த்து அதற்குத் தேவையான பணத்தின் அவசியத்தை உணருபவர்களுக்கும் இது மிகவும் உபயோகமானது.

என்டௌமெண்ட் பாலிஸி உங்களுக்கென்றே ஏற்பட்டுள்ளது. முழு விபரங்களுக்கு ஒரு ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டை விசாரியுங்கள். அவர் உங்கள் தேவைகளுக்குகந்த என்டௌமெண்ட் வர்க்கத்திலுள்ள இதர பாலிஸிகளின் விபரங்களை எடுத்துரைப்பார்.

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

ASP/LIC-19



மலர் 17 இதழ் 4

தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிட்டடி பாப்பா - பாரதியார்

ஹேவிளம்பி ஆவணி 9

நமது ஜனநாயகம்

பாரத நாட்டின் பத்தாவது சுதந்திரத் திருநாளைச் சென்றவாரம் கொண்டாடினோம். சென்னை மாநகரில் பொதுமக்களுக்கு இலவச சினிமாக் காட்சிகளும் நாடகக் காட்சிகளும் காண்பித்து நாடு அடைந்த சுதந்திரத்தைச் சென்னை சர்க்கார் குதூகலமாகக் கொண்டாடினார்கள். பலப் பல ஸ்தாபனங்கள் பாரதத் தாயின் மணிக்கொடி ஏற்றி வணக்கம் செலுத்திக் கொண்டாடின. இப்படிக் கொண்டாடிய ஸ்தாபனங்களில் சென்னை பர்மா ஷெல் காரியாலயத்தினரை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்!

பர்மா ஷெல் ஸ்தாபனத்தார் சுதந்திரவிழா கொண்டாட்டத்துக்கு, தலைவர் ராஜாஜியை அழைத்திருந்தார்கள். ராஜாஜி தாம் நேரில் வர இயலாததால் தமது கருத்துக்களை எழுதியனுப்பியிருந்தார். ராஜாஜி அவர்கள், இன்றையச் சூழ்நிலையை மனத்தில் கொண்டு தேசத்தின் எதிர்கால அரசியல் நிர்வாகம் எப்படி அமையவேண்டும் என்பதை மிகத் தெளிவாக விளக்கியிருந்தார். அது இந்தச் சுதந்திரதின விழாவுக்கு ஏற்ற அரும் பரிசாக விளங்குகிறது!

* * * *

பாரதநாட்டு மக்கள் எல்லோரும் ஏகமனதாக ஒப்புக் கொண்ட ஆட்சி முறை ஜனநாயக ஆட்சி முறையாகும்.

ஜனநாயக ஆட்சிமுறை என்றால் அதில் இரண்டு கட்சிகள் இருக்க வேண்டும்; ஒன்று ஆளும் கட்சி, மற்றொன்று எதிர்க்கட்சி.


ஜனநாயக ஆட்சி முறைக்கு இரண்டு கட்சிகள் இன்றியமையாத இலக்கணம் என்பதை ராஜாஜி தமக்கே உரிய ஒரு ஹாஸ்ய உதாரணம் மூலம் விளக்குகிறார்.

கழுதையின் மேல் சுமையை ஒரே மூட்டையாக ஏற்றி ஓட்ட முடியாது. அதையே இரண்டு மூட்டைகளாகக் கட்டி அதன் முதுகின் இரண்டு பக்கங்களிலும் தொங்க விட்டால், சுலபமாகச் சுமந்து கொண்டு செல்கிறது. அதுபோல் ஜனநாய ஆட்சிக்கு இரண்டு கட்சிகள் வேண்டும். அப்பொழுதுதான் ஆட்சியும் செவ்வனே நடைபெறும்.

ஒவ்வொரு பொருளையும் அதன் சுய உருவத்தில் சரியாகப் புரிந்து கொள்ளுவதற்கு, இரண்டு கண்கள் வேண்டும். எந்த ஒலியையும் சரியாகக் கேட்க இரண்டு காதுகள் வேண்டும். இவ்வாறு இயற்கை இரண்டு இரண்டாகவே அளித்திருக்கிறது. அதேபோல், எந்த விஷயத்தையும் அதன் சரியான நிலையில் வைத்துப் புரிந்து கொள்வதற்கு அரசாங்கத்துக்கு இரண்டு கட்சிகள் வேண்டும்.

ஒரு கட்சி ஒரு சீர்திருத்தத்தினால் ஏற்படக் கூடிய பயன்களையெல்லாம் எடுத்துச் சொன்னால், இன்னொரு கட்சி அந்த மாறுதலினால் ஏற்படக்கூடிய கெடுதல்களையும், தீமைகளையும் எடுத்துச் சொல்ல வாய்ப்பு இருக்கும். இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்து, எது பயன் விளைவிக்கும் என்று அறிந்து, அந்த அளவுக்குச் சீர்திருத்தம் செய்ய வேண்டும். மாறுதலினால் பயன் அதிகமாக விளையுமா, நஷ்டமும் குழப்பமும் அதிகமாக விளையுமா என்று சீர்தூக்கிப் பார்த்து, அரசாங்கம் நடைபெறும்.

"ஜனநாயக ஆட்சி மிகச் சீரிய முறையில் நடைபெறும் பிரிட்டனில், பார்லிமெண்டரி முறை தோன்றிய நாள் முதல் இன்றுவரையில் இரண்டு கட்சிகள் திறம்படத் தொழிற்பட்டு வந்திருக்கின்றன.



கேரள ராஜ்ய கம்யூனிஸ்ட் சர்க்கார் கொண்டு வந்துள்ள 'கல்வி மசோதா' இளம் மாணவர் களுக்குக் கம்யூனிஸ்ட் கொள்கைகளைப் புகுத்தும் திட்டம் என்ற கண்டனம் எங்கும் கேட்கிறது.

இதனாலேயே பிரிட்டிஷ் மக்கள் தங்கள் ஆட்சிமுறையைப் பெரிதும் விரும்புகின்றனர்; கௌரவிக்கின்றனர்!

இப்பொழுது நமது நாட்டில் சென்ற பத்து வருஷங்களாகக் காங்கிரஸ் ஆட்சி நடந்து வந்திருக்கிறது.

காங்கிரஸ் அறுபது வருஷங்கள் மக்களுக்கு உழைத்த ஸ்தாபனம். நாட்டின் விடுதலைக்குப் போராடிய ஸ்தாபனம். ஆகவேதான் நாட்டில் வேறு கட்சி உருவாக முடியவில்லை.

மேலும் காங்கிரஸ் கட்சி ஆளும்கட்சியாகத் தொழிற்பட நேர்ந்ததும் சோஷலிஸ்ட் கட்சியும் கம்யூனிஸ்டு கட்சியும் சொல்லிவந்த சீர்திருத்தங்களைத் தானே செய்ய முற்பட்டது.

உதாரணமாக சோஷலிஸ்ட் கட்சியும், கம்யூனிஸ்டு கட்சியும், தொழில் ஸ்தாபனங்களைத் தேச உடைமையாக்கும் கொள்கை கொண்டவை. இந்தக் கொள்கையைக் காங்கிரஸ் ஆளும் கட்சியாகப் பரிணமிக்க நேர்ந்ததால் மேற்கொள்ளும்படியாயிற்று. இன்ஷூரன்ஸ் போன்ற ஸ்தாபனங்களைச் சர்க்காரே ஏற்றுக் கொள்ள நேர்ந்தது.

இப்படிக் காங்கிரஸ் இடது சாரிக் கட்சியாக வேலை செய்வதால், இத்தனை நாளும் இடதுசாரிக் கட்சிகளாக இருந்த சோஷலிஸ்ட் கட்சிகளும், கம்யூனிஸ்ட் கட்சியும் காங்கிரஸுக்கு எதிர்க் கட்சியாக இருந்து 'காங்கிரஸ் செய்ததைவிட இன்னும் அதிக சீர்திருத்தங்கள் செய்கிறோம்' என்று கூறுகின்றனர். ஆனால் மக்கள் அவற்றை விரும்பவில்லை; விரும்பப் போவதுமில்லை. இந்தக் கட்சிகள் சர்க்கார் ஆட்சிக்குச் சமநிறை சரிநிகர் எதிர்க்கட்சியாக அமைவதற்கு இடமில்லை.

பின் இந்த நிலையில் காங்கிரஸுக்கு எதிர்க் கட்சி ஒன்று எப்படி உருவாக முடியும் என்று கேட்கலாம்.

நாட்டில் ஒவ்வொரு சீர்திருத்தம் செய்யும் போதும், அதனால் பயன் அடைபவர்களும் உண்டு, கஷ்டம் அடைபவர்களும் உண்டு. ஒவ்வொரு மாறுதலிலும், துன்பம் என்பது இல்லாமல் இராது. இது இயற்கை நியதி.

ஆளும் கட்சியினர் தங்களுக்கு நல்ல எதிர்க் கட்சியில்லாத காரணத்தால் சென்ற பத்தாண்டு காலத்தில் சமுதாயத்தில் பலப் பல மாறுதல்கள் செய்திருக்கின்றனர். இந்த மாறுதல்களினால் ஏற்படக் கூடிய கஷ்டங்களையும் நஷ்டங்களையும் எடுத்துச் சொல்பவர்கள் இல்லாததினால் வெகுதுரிதவேகத்தில் போதிய யோசனையின்றிக் காங்கிரஸ் சென்று கொண்டிருக்கிறது. காங்கிரஸ் சர்க்கார் சீர்திருத்தம் என்ற பெயரினால் செய்யும் மாறுதல்களினால் நாட்டில் பல கஷ்ட நஷ்டங்களை அனுபவிப்பவர்கள் ஏராளமான பேர்கள் இருக்கின்றனர். இவர்கள் எல்லாரும் ஒன்றுகூடி ஒருமுகமாகக் காங்கிரஸின் போக்கினால் ஏற்படக் கூடிய நஷ்டங்களை எடுத்துச் சொல்ல வேண்டும். நீண்ட நெடுநாட்களாக அனுபவத்தில் நல்லது என்று கண்ட வழக்கத்தை அடியோடு மாற்றிவிடக்கூடிய சட்டங்களினால் ஏற்படும் தீய விளைவுகளை எடுத்துச் சொல்வதால் பழிக்கப்படுவோமோ என்று எண்ணிச் சும்மா இருப்பது அறிவுடைமையாகாது.

இப்படியே நிலைமை நீடித்தால் சீக்கிரமே காங்கிரஸ் எதேச்சாதிகாரக் கட்சியாக மாறிவிடும்; எதிர்க்கட்சி சரியான அந்தஸ்துடன்



ருஷ்யாவில் குருசேவின் செல்வாக்கு நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது!

இருந்தால்தான் இவ்வாறு நடக்காது. இதை நமது ஆளும் கட்சித் தலைவர்களும் ஒப்புக் கொள்கிறார்கள். காங்கிரஸுக்குத் தகுந்த நல்ல எதிர்க்கட்சி வேண்டும் என்பதையும் உணர்ந்திருக்கின்றனர். நல்ல எதிர்க்கட்சி ஏற்பட்டால்தான் பாரதநாட்டில் நல்லபடியாக ஜனநாயகம் தொழிற்படும் என்று காங்கிரஸ் தலைவர்களே கருதுகின்றனர். ஆனால் அந்த எதிர்க்கட்சியை அவர்களால் உண்டாக்க முடியுமா? அதிருப்தி கொண்ட மக்கள்தான் உண்டாக்க முடியும்!

நாட்டில் நல்ல எதிர்க்கட்சி உருவாவதற்கு நல்ல சூழ்நிலை நிலவுகிறது. பெருவாரியான மக்கள் ஆளும் வர்க்கத்தினரிடம் அதிருப்தி கொண்டிருக்கின்றனர். இருப்பினும் அவர்கள் ஒன்றுசேர்ந்து கட்சியமைக்கப் பயப்படுகின்றனர். காரணம் அவர்கள் அன்றாட வாழ்வுக்கு அரசாங்கத்தை எதிர்நோக்கியே வாழ வேண்டியிருக்கிறது. சர்க்காரிடம் இந்தச் சலுகைக்கும் அந்தச் சலுகைக்கும், இந்தப் பர்மிட்டுக்கும் அந்தப் பர்மிட்டுக்கும் ஓட வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் தாங்கள் எதிர்க்கட்சி அமைக்க முயல்வதாகத் தெரிந்தால் சர்க்காரின் அதிருப்திக்கு ஆளாக வேண்டியிருக்குமே என்று அவர்கள் அஞ்சுகின்றனர். சர்க்காரின் கோபம் எத்தகைய கொடுமையான தண்டனையாக உருவெடுக்குமோ என்று பயந்து சாகின்றனர். இதனால் தான் நாட்டில் அதிருப்தி யிருந்தும், சூழ்நிலை இருந்தும் சரியான எதிர்க்கட்சி உருவாகவில்லை.

ஆனால் கடமையை உணர்பவர்கள், ஆளும் கட்சிக்கு அவர்கள் காரியங்களினால் ஏற்படக் கூடிய தீங்குகளைச் சொல்லக் கூடியவர்கள், மேற்கூறிய கஷ்டநஷ்டங்களுக்கு உள்ளாக நேர்ந்தாலும் துணிந்து தைரியமாக முன்வர வேண்டும். ஒன்று சேர்ந்து நல்ல எதிர்க்கட்சி யமைத்தேயாக வேண்டும். அப்போதுதான் அரும்பாடு பட்டுப் பெற்ற ஜனநாயகம் நல்ல படியாக நிலைக்கும். இல்லாவிடில், ஒரே ஒரு கட்சியின் எதேச்சாதிகாரமே ஏற்படும். அது நீடித்து நிற்க முடியாது. குழப்பம் விளையும்.

ராஜாஜி எழுதுகிறார்:

அனேக நண்பர்களும் சங்கங்களும் ஸ்ரீ தேவதாஸ் காந்தியின் மறைவைப் பற்றி எனக்கு ஆறுதல் கடிதங்கள் எழுதி வருகிறார்கள். நானாவது என்னுடைய மகளாவது தனித்தனியாக நன்றி செலுத்தி எழுதுவதற்குச் சாத்தியமில்லை. எங்களுடைய துயரத்தில் அனைவரும் பங்கெடுத்துக் கொள்வது ஒருவிதமான ஆறுதல் தருகிறது. இதையே என்னுடைய கடிதமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

குழப்பமும் அமைதியும்

நல்ல காரியங்களைக் காண்பதும்கேட்பதும் கடினமாக இருந்து வரும் இக்காலத்தில், யாராவது ஒரு நல்ல காரியத்தைச் செய்தால் அதைக் குட்டிச்சுவராக்க உடனே தீய சக்திகள் வேலைசெய்ய ஆரம்பித்து விடுகின்றன. இலங்கையைத் தாயகமாகக் கொண்டு அங்கு வாழையடி வாழையாக வாழ்ந்து வரும் இந்தியர்கள், சென்ற பல ஆண்டுகளாகப் பிரஜா உரிமைக்காகவும் மொழி உரிமைக்காகவும் போராடி வருகிறார்கள். அந்தப் போராட்டம் சில தினங்களுக்கு முன் ஒரு நெருக்கடியான கட்டத்தை அடைந்தது. இலங்கை இந்தியர் உரிமை சம்பந்தமான சில முக்கியமான கோரிக்கைகளுக்கு இலங்கை சர்க்கார் இணங்காவிடில், சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப் போவதாக இலங்கை பெடரல் கட்சியினர் அறிவித்திருந்தார்கள். அவ் விஷயமாக மேற்படி கட்சித் தலைவர்களுக்கும் பிரதமர் பண்டாரநாயகாவுக்கும் நடந்த சமரசப் பேச்சின் பயனாகச் சில முடிவுகள் ஏற்பட்டன.

இலங்கைத் தமிழர்கள் பிரதமரிடம் நான்கு முக்கிய கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருந்தனர். அவற்றில் இரண்டைப் பிரதமர் ஏறெடுத்தும் பார்க்க முடியாது என்று கூறிவிட்டார். மூன்றாவது கோரிக்கையான பிரஜா உரிமைப் பிரச்னையைப் பரிசீலனை செய்வதாகக் கூறி, தமது பொறுப்பைக் கழித்துக் கொண்டார். தமிழ், இலங்கையில் உள்ள சிறுபான்மையோரின் மொழியாக அங்கீகரிக்கப்படும் என்று பிரதமர் கூறியதைத் தவிர, இலங்கை இந்தியர்களுக்கு வேறு எவ்விதச் சலுகையும் அளிக்கவில்லை. இருந்தாலும் சமரசத்தில் அதிக நாட்டம் கொண்ட இலங்கை இந்தியத் தலைவர்கள் அதை நல்லெண்ணத்துடன் ஒப்புக் கொண்டு, சர்க்காருக்கும் இந்தியர்களுக்கு மிடையே சுமுகமான சூழ்நிலையை உண்டு பண்ணினார்கள்.

இது கூட, சில சிங்கள வகுப்பு வெறியர்களுக்குப் பிடிக்கவில்லை. தமிழர்களுக்கு மிகுந்த சலுகைகள் அளித்து விட்டதாகவும், தங்கள் குடி முழுகிப் போய்விட்டதாகவும் கூக்குரலிட்டுக் கொந்தளிப்பை உண்டுபண்ணி விட்டார்கள். சமீபத்தில் பிரதமர் பண்டாரநாயகா விடுத்த அறிக்கை மேலும் குட்டையைக் குழப்பி விட்டது. எனினும், நிலைமை முற்றுவதற்குமுன் பிரதமரும் பெடரல் கட்சித் தலைவர் ஸ்ரீ எஸ். ஜே. வி. செல்வநாயகமும் மறுபடியும் கலந்து ஆலோசித்து ஒரு கூட்டு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அதன் பயனாக, சமீபத்தில் ஏற்பட்ட குழப்பம் தீர்ந்ததுடன், ஏற்கனவே ஏற்பட்ட ஒப்பந்தத்தை அமுலுக்குக் கொண்டு வரப் போவதாகவும் பிரதமர் உறுதி கூறியுள்ளார். விஷமிகளுக்கும் வகுப்புவெறியர்களுக்கும் இடம் கொடுக்காமல் ஸ்ரீ பண்டாரநாயகா தைரியமாக முன்வந்து நிலைமையைத் தெளிவுபடுத்தியது மிகவும் போற்றத் தக்கதாகும்.

மேற்படி ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டு சட்டம் நிறைவேற்றப்படும் என்றும் பிரதமர் உறுதி கூறியுள்ளார்.

இப்போது ஏற்பட்டுள்ள சமரச ஒப்பந்தமும் சுமுகமான சூழ்நிலையும் இலங்கை இந்தியர் பிரச்னை முற்றும் திருப்திகரமாகத் தீருவதற்கு அடிப்படையாக அமையுமென்று நம்புகிறோம்.




இதோ மலேயா தேசிய உடையில் காட்சியளிப்பவர்களைத் தெரிகிறதா? சென்ற மூன்று மாத காலமாக மலேயாவில் நமது தமிழகத்தின் கலைக் கொடியைத் தூக்கிப் பறக்க விட்டுத் திரும்பியிருக்கும் டி. கே. எஸ். கலைக் குழுவினர்களில் நால்வர். திரு டி. கே. ஷண்முகம், திரு டி. கே. பகவதி, திரு புத்தனேரி சுப்பிரமணியம், திரு டி. என். சிவதாணு ஆகியவர்கள்தான். மலேயாவில் தாங்கள் கண்டு அனுபவித்த ரசமான பல அரிய சம்பவங்களைப் பற்றிக் கல்கி நேயர்களுக்குக் கூறப் போகிறார்கள்.

டி. கே. சண்முகம் — புத்தனேரி சுப்பிரமணியம்

எழுதும் **“கலை கண்ட மலேயா”** பிரயாணக் கட்டுரை

அடுத்த இதழிலிருந்து ஆரம்பமாகிறது.



சுதந்திர நூற்றாண்டு விழாவின்போது நமது சென்னை சர்க்கார் ஒரு நல்ல காரியம் செய்தார்கள். மூன்று கலைஞர்களுக்குச் சிறப்பு விருதுகள் வழங்கிப் பாராட்டினார்கள். இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் போற்றினார்கள். நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார், திருமதி கே. பி. சுந்தராம்பாள், டாக்டர் மு. வரதராசனார் ஆகிய மூன்று கலைஞர்களையும் பாராட்டினார்கள். சர்க்கார் பாராட்டிய ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி அன்றே விருதுகள் வழங்கிய சர்க்காரையும் விருது பெற்ற கலைஞர்களையும் தென்னிந்திய நடிகர் சங்கம் பாராட்டிக் கௌரவித்தது.

கணநாதன் வாழ்விப்பான்!

சுதந்திரத்துக்கும் விநாயகப் பெருமானுக்கும் ஏதோ ஒரு நெருங்கிய தொடர்பு இருக்கிறதாகவே தோன்றுகிறது.

பாரத மக்களிடையே சுதந்திரக் கனலை மூட்டிய பால கங்காதர திலகர், விநாயகர் திருநாளை அதற்கேற்ற நாளாகக் கொண்டார். விநாயகர் பூஜையுடன் நாட்டுப் பற்றையும் சுதந்திர உணர்ச்சியையும் மக்களுக்கு ஊட்டினார். விநாயகரும் அவரைக் கைவிடவில்லை! பாரத தேசம் சுதந்திரம் பெற்று விட்டது!

சென்ற வாரம்தான் சுதந்திரப் போரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியிருக்கிறோம்! சுதந்திர தேவிக்கு அஞ்சலி செலுத்தினோம்! அதற்குள், "என்னை மறந்து விடாதீர்கள்!" என்று இதோ வந்து விட்டார் விநாயகர் மூஞ்சூறு மீது சவாரி செய்து கொண்டு! இதிலிருந்தே தெரியவில்லையா, சுதந்திரத்துக்கும் விநாயகருக்கும் நெருங்கிய தொடர்பிருக்கிறது என்று.

நமது தெய்வத் தமிழ் நாட்டிலே, விநாயகப் பெருமான் பச்சைக் களிமண் உருவில் ஒவ்வொரு வீட்டுக்கும் இந்த வாரம் விஜயம் செய்யப் போகிறார்!

முச்சந்தியிலும், ஆற்றங்கரையிலும், ஆலமரத்தடியிலும், வெய்யிலிலும் மழையிலும் பனியிலும் குளிரிலும் கிடக்கும் விநாயகப் பெருமானுக்கு வண்ணக் குடை பிடித்து, அழகிய சப்பரத்தில் எழுந்தருளச் செய்து, இளம் வாழைக் கன்றுகள் தோரணம் கட்டி, எருக்கம்பூ மாலை சாத்தி, அறுகம் புல்லால் அர்ச்சனை செய்து, கொழுக் கட்டைகளையும் மோதகங்களையும் வேண்டிய மட்டும் நிவேதனம் வைத்துப் பூஜைகள் நடக்கும். அது மட்டுமா? மக்கள் கன்னத்தில் போட்டுக் கொண்டு, காதைப் பிடித்துத் தோப்புக் கரணம் போட்டு ஓங்கார உருவமாய் இருக்கும் அந்தப் பிரணவமூர்த்திக்கு உள்ளம் நெகிழ்ந்து உருகி பக்தி செலுத்துவார்கள்.

இந்தச் சமயத்தில் நமக்கு மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் அருமையான பாடல் ஒன்று நினைவுக்கு வருகிறது.

நமக்குத் தொழில்கவிதை
நாட்டிற் குழைத்தல்
இமைப்பொழுதும் சோரா
திருத்தல் — உமைக்கினிய
மைந்தன் கணநாதன்
நம்குடியை வாழ்விப்பான்
சிந்தையே இம்மூன்றும் செய்!

சுதந்திரம் பெற்றுப் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, நாட்டு மக்களுக்கு வேண்டிய மிக அவசியமான உணர்ச்சியைப் பாரதியார் மிக அழகாகச்சொல்லியிருக்கிறார். மகாகவி பாரதியாரைப் போல் பாரத மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் சிந்தையில் உறுதி பூண்டால் 'கணநாதன் நம் குடியை வாழ்விப்பான்!'

வரப்போகும் விநாயகர் திருநாளில் நாமும் நமது தொழிலைச் செய்து நாட்டுக்குச் சோம்பலின்றி உழைக்க உறுதி கொள்வோம்!

* * *

ஓவியக் கலைஞர் ராஜம் வரைந்த அழகிய கணநாதரை இவ்விதழ் அட்டை தாங்கிக் கொண்டு பொலிகிறது.



சிறந்த எழுததாளர்

தமிழ் நாட்டின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான திரு கி. ரா. கோபாலன் ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி சுதந்திர தினத்தன்று நம்மை விட்டுப் பிரிந்து விட்டார். திரு கி. ரா. கோபாலன் சிறந்த எழுத்தாளர் மட்டுமல்ல; நல்ல கவிஞருமாவார். சித்திரக்கலையிலும் மிகுந்த அனுபவம் உள்ளவர். ''காட்டூர் கண்ணன்'' ''கோணல்'' ''துதிக்கையார்'' முதலிய புனைபெயர்களில் நீண்ட காலமாகக் கல்கி பத்திரிகையில் எத்தனையோ கவிதைகளையும், ஹாஸ்யக் கட்டுரைகளையும், அரசியல் கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார். அவருடைய எண்ணற்ற சிறுகதைகளையும் ராணி மாதவி, ராஜாளி மடம், அபலை அஞ்சுகம் முதலிய அருமையான பெரிய நாவல்களையும் நமது நேயர்கள் படித்து மகிழ்ந்திருப்பார்கள். கல்கியில் இப்பொழுது தொடர்ந்து வரும் அவருடைய ''மாலவல்லியின் தியாகம்'' என்ற சரித்திரத் தொடர்கதையைப் படித்துப் பாராட்டாதவர்கள் இல்லை. பின்னால் இந்தக் கதையில் அவர் எழுதி வைத்திருக்கும் திடுக்கிடும் சம்பவத்தைப் போலவே திரு கி. ரா. கோபாலன் நம்மையெல்லாம் திடுக்கிடும்படி செய்துவிட்டு மறைந்துவிட்டார். அவருடைய இளம் மனைவியையும் எட்டு வயதிலிருந்து மூன்று மாதக் குழந்தை வரையில் இருக்கும் உலகம் தெரியாத ஐந்து குழந்தைகளையும் நினைக்கும்போது நெஞ்சு நிலைகெட்டு வேதனை அடைகிறது. அவருடைய மறைவு தமிழ் நாட்டுக்கும், தமிழ் எழுத்தாளர்களுக்கும் மிகப் பெரிய நஷ்டமாகும். திரு கி. ரா. கோபாலன் அவர்களைப் பிரிந்து மிகத் துயரத்தில் மூழ்கி இருக்கும் அவர் குடும்பத்தாருக்கும் எண்ணற்ற நண்பர்களுக்கும் கல்கி நேயர்களுக்கும் தமது மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


பாண்ட்ஸ் கோல்டு க்ரீம்
உபயோகிக்கும் பெண்மணியை
—அவன் விரும்புகிறான்
என்பதை அவன்
மறைப்பதில்லை
முகத்தைக் கழுவியபின், எப்பொழுதும், அற்புத குணம் வாய்ந்த பாண்ட்ஸ் கோல்டு க்ரீமை உபயோகியுங்கள். இது சருமத்தைப் பாதுகாக்கும் இயற்கை எண்ணெய்களின் நஷ்டத்திற்கு ஈடு கட்டி, உங்கள் சருமத்தைப் புதுமையுடனும் மாசற்றதாகவும் வைக்கும். பாண்ட்ஸ் கோல்டு க்ரீம் சருமத் துவாரங்களில் ஊடுருவிச் சென்று அழுக்கை அகற்றி, உங்கள் சருமத்தை முற்றிலும் சுத்தமாக வைக்கும்.
இலவச புஸ்தகம்
அழகுபற்றிய குறிப்புகள் கொண்ட Lovelier with Ponds என்ற எமது புத்தகத்தை வரவழையுங்கள்.
பி. ஓ. பாக்ஸ் நம்பர் 1012
டிபார்ட்மெண்ட் 41. 28 வி. பம்பாய் 1
என்ற விலாசத்திற்கு எழுதவும்
POND'S
cold
cream
ஸெஸ்ப்ரோ - பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். அமெரிக்காவில் இணைக்கப்பெற்றது)



கீழே குறிப்பிட்டுள்ள நபர்களை விசாரிக்கவும் :-

(1) கனிலால் சந்தன்மால் (2) திலீப்குமார் ராமன்லால்
(3) மின்சிமால் அசோக்குமார் (4) கேசவலால் ஸ்ரீதாலால்
(5) காந்திலால் லால்பாய், மஸ்கட்டி மார்க்கெட் ஆமதாபாத்

மாதர்குல திலகங்கள்

துர்க்காபாய் தேஷ்முக்



ஒரு சமயம் நேருஜி வீட்டில் விருந்து நடைபெற்றதாம். விருந்து முடிந்ததும் அவருடைய அருமைப் புதல்வி, 'சாப்பாடு நன்றாக இருந்ததா?' என்று கேட்டாராம். "நான் சாப்பாட்டைக் கவனிக்கவில்லை. துர்க்காபாயின் செயலாற்றும் திறன், வேகம், தைரியம் இவைகளில் ஆழ்ந்திருந்தேன்" என்று ஜவாஹர்லால் பதில் சொன்னாராம்.

சிவப்புப் புடவையை அணிந்து கொண்டு, பெண்கள் இன்னமும் அவல நிலையில் பேதமையுடன் இருப்பதைப் பற்றி உணர்ச்சியுடன் மேடையின்மேல் அவர் பேசுவார். அந்தத் தோற்றம் மக்கள் தூக்கத்தைப் போக்கும். துர்க்காபாய் என்ற பெயரை இவருக்குப் பெற்றோர்கள் வைத்தது எவ்வளவு பொருத்தமென்று நினைப்பேன்.

நாற்பத்தேழு வருஷங்களுக்கு முன் ராஜமகேந்திரத்துக்கு அடுத்த ஒரு கிராமத்தில் அவர் பிறந்தார். பெற்றோர்கள் ஆசார சீலமுள்ளவர்கள். இவர் சிறு வயதிலேயே தன் அபிப்பிராயங்களுக்குத் தலைவியாக இருந்தார். அவர் போன பாதை உன்னதமானது. எனவே, இன்று உலகம் அவரைப் போற்றுகிறது. தன்னுடைய பதின்மூன்றாவது வயதில் ஹிந்தி பரீட்சையில் தேர்ச்சி பெற்றார். சின்ன வயதில் தந்தையை இழந்தார். எனவே தம்முடைய தாயையும் இளம் சகோதரனையும் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

துர்க்காபாய் தேசப் பற்று அதிகம் உள்ளவர். மகாத்மாவின் சந்திப்பால் தேசபக்தி இன்னும் உறுதி பெற்றது. விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டதின் பயனாகச் சிறையில் ஆறுமாதங்கள் இருந்தார்.

வெளியில் வந்ததும் படிப்பின்றித் தேசத்துக்குப் பெரும் பணிகள் செய்ய இயலாதென உணர்ந்தார். ஆனால் தயங்கவில்லை. அவருடைய ஊக்கத்துக்கு வயது குறுக்கிடவில்லை. முப்பது வயதுக்கு மேல் படிக்க ஆரம்பித்துச் சட்டப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றார். அவருடைய செய்கைகளே அசாதாரணமானவை.

அவர் சொந்த முயற்சியில் பதினெட்டு ஆண்டுகளுக்குமுன் ஆந்திர மஹிள சபை என்ற சிறு ஸ்தாபனத்தை ஏற்படுத்தினார். இன்று அது பெண்களுக்கு அமோகமான சேவைகள் செய்து வருகிறது.

இந்திய விடுதலைக்குப் பிறகு அரசியல் நிர்ணய சபையில் அங்கத்தினராக இருந்தார். பெண்களுக்குச் சேவை செய்யும் ஆவலில் தம் அறிவுத்திறனுக்கு அடிக்கடி சாணை பிடிப்பார். மேலும் அறிவுபெற 1951-ல் சைனாவுக்குச் சென்றிருந்தார். அங்குள்ள குடிசைத் தொழில்களைப் போல் நம் நாட்டில் வளர்க்க வேண்டும் என்று பாடு பட்டார். அவைகளில் பெண்கள் நன்மை அடைய வேணுமென்ற கருத்து அவர் பேச்சில் ததும்பும். இவரிடம் தனிப்பட்ட சிறப்பு வாய்ந்த குணம் ஒன்று உண்டு. மத்தியதர குடும்பத்துப் பெண்ணின் கஷ்ட நிலையையும், போலி கௌரவத்தையும் நன்றாக உணர்ந்து அவர்கள் நன்மையை விரிவாக எடுத்துச் சொல்வார்.

சைனாவிலிருந்து திரும்பி வந்ததும் திட்டக் கமிஷனில் அங்கத்தினராக இருந்தா . இவருடைய ஆற்றலுக்குச் சந்தர்ப்பமும் உதவியது. அம்மாதிரி சந்தர்ப்பம் 1952-ல் நிதிமந்திரி தேஷ்முக் அவர்களை மணந்துகொண்டதாகும்.

திட்டக் கமிஷனிலிருந்து விலகிச் சமூக நல போர்டு தலைவியாக இருந்து மிகச் சிறந்த முறையில் தொண்டாற்றி வருகிறார். இந்தியா முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்கிறார். சமூகநல சேவகிகள் படை ஒன்றையே திரட்டி விட்டார். அவர்களுக்கு ஊக்கமளித்து ஆக்க வேலைகளைச் செய்கிறார். அவருடைய சேவையால் எவ்வளவோ சகோதரிகளின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறது.

ஓய்வு ஒழிவின்றி உழைக்கும் மாதர் திலகம் துர்க்காபாய் தேஷ்முக் அவர்களின் சேவையில் பாரதப் பெண்குலம் உயரும் என்பதில் சந்தேகமில்லை.

—வசுமதி ராமசாமி

[நண்பர் பி. ஜி. கிருஷ்ணய்யா ஒரு அருமையான பத்திரிகை நிருபர். அவர் அமெரிக்காவில் ஐ. நா. சபைக் காரியாலயத்தில் தமது பெயரையே கொண்ட ஒரு செய்தி ஸ்தாபனத்தை மிகச் சிறந்த முறையில் நடத்தி வருகிறார். அவர் அவ்வப்போது அமெரிக்காவில் நடைபெறும் நிகழ்ச்சிகளை இந்தியக் கண்கொண்டு பார்த்து இந்தியர்களுக்கு அறிவும் பயனும் அளிக்கும் வண்ணம் எழுதி வருகிறார். இதோ ஐ. நா. சபைக் காரியாலயம் எப்படி வேலை செய்கிறது என்று அவர் கூறுவதைப் பாருங்கள். ஆசிரியர்]

ஐ.நா. சபையில் இந்தியர்கள்

பி. ஜி. கிருஷ்ணய்யா

உலகிலுள்ள ஒவ்வொரு நாடும் மிக உயர்ந்த லட்சியங்கள் கொண்டு பாடுபடுவதாகச் சொல்லிக் கொள்கின்றன. இப்படி ஒவ்வொரு நாடும் கூறும் உயர்ந்த லட்சியங்கள் எல்லாம் இணைந்ததுதான் ஐ. நா. சபை என்று கூற வேண்டும். இப்படிக் கூறும்போது உலக நாடுகளைவிட ஓர் 'உயர்ந்த நாடாக' ஐ. நா. சபையைக் கருதலாமோ என்று நினைக்கலாம். அதுதான் இல்லை. ஏனெனில், ஐ. நா. சபை தான் சொல்வதுதான் சரி என்று ஒரு வாழ்க்கை முறையையோ அரசாங்க முறையையோ பிறநாடுகளின் மீது திணிக்கப் பார்ப்பதில்லை. ஒவ்வொரு நாட்டு மக்களும் தங்களுக்குகந்த வாழ்க்கை முறையையும் அரசாங்கத்தையும் வகுத்துக் கொள்ளப் பூரண உரிமையுண்டு என்று ஐ. நா. சபை கூறுகிறது. உலக மக்களின் நேச பாவத்தின் குரலாக விளங்கத்தான் ஐ. நா. சபை விரும்புகிறது. உலக மக்கள் ஒருவரோடொருவர் நேசத்தோடும் அன்போடும் வாழ வேண்டும் என்ற லட்சியத்துக்குப் பாடுபடுகிறது.

ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கின்ற அத்தனை நாடுகளைச் சேர்ந்தவர்களும் ஐக்கிய நாடுகள் சபைக் காரியாலயத்தில் வேலை செய்து வருகிறார்கள். இந்த ஐ. நா. சபைக் காரியாலயத்தை உலக அரசியல் விவாத அரங்கில் 'மூன்றாவது அணி' என்று சொல்வது வழக்கம். உலகப் பிரச்னைகளைத் தீர்க்க ஐ. நா. சபையின் பொது விவாத அரங்கு, பந்தோபஸ்து சபை என்று இரண்டு அணிகள் இருக்கின்றன. மூன்றாவது அணியாக ஐ. நா. சபைக் காரியாலயம் விளங்குகிறது. ஐ. நா. சபையில் விவாதத்துக்கு வரும் விஷயங்களில் சமாதானத்துக்கு எங்கெல்லாம் வழிவகைகள் இருக்கின்றன என்று கண்டுபிடித்து அத்துறையில் பேச்சை நடத்துவதற்கு வழி காண்பவர்கள் ஐ. நா. சபைக் காரியாலயத்திலுள்ளவர்கள்தான்.



பாங்காக்கிலுள்ள 'இகபே' எனப்படும் பொருளாதார இலாக்காவின் டைரக்டர் திரு ஸி. வி. நரசிம்மன்.

இதைத் தவிர, ஐ. நா. சபைக் காரியாலயத்துக்கு மற்றொரு பணியும் இருக்கிறது. அதாவது ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் லட்சியங்கள், பிரச்னைகள் யாவும் உணர்ந்து அந்த நாடுகள் எப்படித் தொழிற்படுகின்றன என்று கவனித்து வரவேண்டும். ஒவ்வொரு நாட்டின் போக்கும் எப்படி மற்ற நாடுகளைப் பாதிக்கும் என்பதையும் கவனித்து வரவேண்டும். ஒரு நாட்டின் போக்கு மற்ற நாட்டைப் பாதிக்கும் என்றாலோ, மற்ற நாட்டுடன் சண்டையை வளர்த்து உலக சமாதானத்துக்கும், அமைதிக்கும் ஊறு விளைவிக்கும் என்றாலோ, அதைத் தடுக்க முயல்வது ஐ. நா. சபைக்காரியாலயத்தின் கடமையாகும். இப்படிப்பட்ட நெருக்கடியான சமயங்களில் ஐ. நா. சபைத் தலைவரும், ஐ. நா. சபை உயர்தர உத்தியோகஸ்தர்களும் பகிரங்கமாக விவாதித்து, அதன் முடிவுகளை அந்தந்த அரசாங்கங்களுக்கும், ஐ. நா. சபைப் பிரதிநிதிகளுக்கும் தெரிவிக்க வேண்டும். இந்த முடிவுகள் எத்தகைய குறுகிய நோக்கங்களாலும் பாதிக்கப்படக் கூடாது. ஐ. நா. சபையின் லட்சியத்துக்கு ஏற்ப விவாதித்து முடிவுக்கு வரவேண்டும். அதாவது ஐ. நா. சபைக் காரியாலயத்துக்கும் மற்ற நாடுகளின் அரசாங்கங்களுக்கும் உள்ள தொடர்பு நம்பிக்கைக்குகந்ததாக இருக்க வேண்டும். ஒவ்வொரு நாடும், ஐ. நா. சபைக் காரியாலயத்தினர் ஐ. நா. சபையின் சாசனத்தின்படியே யோசித்து முடிவுகள் கூறுவார்கள் என்ற நம்பிக்கை கொள்ளும் வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

இன்று வேறு எந்த நாட்டினரைக் காட்டிலும் பாரத நாட்டைச் சேர்ந்தவர்களே ஐ. நா. சபைக் காரியாலயத்தில் மிக முக்கியமான அங்கம் வகிக்கிறார்கள். அவர்கள் உலகின் பலபகுதிகளிலும் பலவகையான வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஐ. நா. சபையைச் சுற்றிக் காட்டும் பணியை, எத்தனையோ இந்திய மாதர்கள் வெகு திறம்படச் செய்து வருகிறார்கள். இந்தப் பணியிலிருந்து, இத்தாலி நாட்டில் ரோம்நகரிலுள்ள ஐ. நா. வின் விவசாய இலாக்கா டைரக்டர் ஜென



ஐ. நா. சபையின் செய்தி விளம்பர இலாக்காவின் உதவி டைரக்டர் திரு டி. ஏ. ராமனும் அவர் சகாவும்

ரல் பதவி வரை இந்தியர்கள் வகிக்கிறார்கள்.

ஐ. நா. சபைக் காரியாலயத்தில் உயர்தர உத்தியோகங்கள் யாவும் ஐ. நா. சபையைச் சேர்ந்த எல்லா நாடுகளின் சம்மதத்தின் பேரிலேயே நடைபெறுகின்றன. ஐ. நா. சபை நிர்வாகத்துக்கு ஒவ்வொரு நாடும் எவ்வளவு செலவழிக்கிறதோ அதற்கேற்ப உயர்தர உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படுகிறார்கள். ஆகவே ஒவ்வொரு நாட்டைச் சேர்ந்தவர்களும் ஐ. நா. சபைக் காரியாலயத்தில் வேலை செய்கிறார்கள். ஒவ்வொரு நாட்டுக்கும் இத்தனை எண்ணிக்கையுள்ள உத்தியோகஸ்தர்களை அனுப்பலாம் என்ற விகிதாசாரம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த விகிதாசாரத்தை நமது பாரத சர்க்கார் நல்லபடியாகப் பூர்த்தி செய்திருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும். ஐ. நா. சபையில் 1,170 உத்தியோகஸ்தர்கள் வேலை செய்கிறார்கள். இவர்கள் ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கும் எண்பத்தொரு நாடுகளைச் சேர்ந்தவர்கள். இந்தியாவைச் சேர்ந்தவர்கள் 53 பேர்கள் இருக்கிறார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் உயர்தர, நடுத்தர, உத்தியோகஸ்தர்களாக இருக்கிறார்கள்.

நம் நாட்டில் ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தராக இருந்த ஸ்ரீ பி. ஆர். ஸென் ஐ. நா. சபையின் உணவு-விவசாய இலாக்காவின் தலைவராக இருக்கிறார். ஐ. நா. சபையின் தூரக் கிழக்குலக நாடுகளின் பொருளாதாரத்துறைத் தலைவராக ஸ்ரீ வி. வி. நரசிம்மன் விளங்குகிறார். இவர்களுக்கு அடுத்தாற் போல் ஸ்ரீ டி. ஜி. நாராயண், ஆர். கிருஷ்ண மூர்த்தி, ஏ. வைத்தியநாதன், டி. வி. விசுவநாதன், ஏ. அழகப்பன் முதலிய பலர் வேலை செய்கிறார்கள்.



பந்தோபஸ்து சபையின் நிர்வாக டைரக்டர் திரு டி. ஜி. நாராயண். பந்தோபஸ்து சபைக் கூட்டம் நடைபெறுகிறது என்பது பின்னால் இருவர் பேசிக் கொண்டிருக்கும் விதத்திலிருந்தே தெரிகிறதல்லவா?

அமெரிக்க நாட்டில் நியூயார்க் நகரிலுள்ள ஐ. நா. சபைக் காரியாலயம் வெளிநாட்டினர் ஆர்வத்துடன் பார்க்கும் விசேஷ இடமாகிவிட்டது. ஐ. நா. சபைக் காரியாலயத்தைச் சுற்றிக் காண்பிக்க நியமிக்கப்பட்டுள்ள 'கைடு'கள்—அதாவது வழிகாட்டிகள், ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கும் பல நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள். இந்த வழிகாட்டிகளுக்குத் தனியான உடுப்பு ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் வழிகாட்டிகளாக இருக்கும் இந்திய மாதர்கள் மட்டும் இந்த 'உடுப்பு' விதியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் நம் நாட்டு முறையில் வண்ணச் சேலைகள் அணிந்து கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த வழிகாட்டிகளுக்குள்ளே சேலை அணிந்த இந்திய மாதர்களே மிகவும் பிராபல்யமாக இருக்கிறார்கள்.


ஐ. நா. சபைக் காரியாலய கட்டடத்தின் மூன்றாவது. நான்காவது மாடிகளில் உலகிலுள்ள முக்கியமான செய்தி ஸ்தாபனங்கள், பத்திரிகைகளின் காரியாலயங்கள் இருக்கின்றன. பாரத நாட்டின் சார்பாக, பி. டி. ஐ. செய்தி ஸ்தாபனமும், கிருஷ்ணய்யாவின் செய்தி விநியோக ஸ்தாபனமும், ஹிந்து பத்திரிகையின் காரியாலயமும் இருக்கின்றன. ஐ. நா. சபையின் தலைமைச் செயலாளராக விளங்கும் திரு டாக் ஹாமர் ஷீல்டு தமது காரியாலயச் சிப்பந்திகளைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்.

''நாங்கள் அனைவரும் ஒரே படகில் இருக்கிறோம். கஷ்டத்திலும் சுகத்திலும் நாங்கள் ஒன்றாக இருக்கிறோம். எதிர்காலம் நல்லபடியாக இருக்கும் என்ற பூரண நம்பிக்கையோடு, எங்களுக்குக் கிடைத்துள்ள எல்லாச் சாதனங்களையும் எங்கள் திறமைக்கு ஏற்றபடிவிடா முயற்சியோடு உபயோகித்து வருகிறோம்.

''பகவத் கீதை, எல்லா யுகங்களின் அனுபவத்தையும், எல்லாத் தத்துவ ஆராய்ச்சிகளையும் திரட்டிப் பின்வருமாறு கூறுகிறது: 'மக்கள் பொதுவாகப் பலனைக் கருதியே எந்த வேலையும் செய்கிறார்கள். தாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்துக்கும் ஏதாகிலும் பிரதி பிரயோசனம் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் இது அவ்வளவு சிறந்த முறையல்ல. 'பலன் கருதாது, ஆத்மத் தியாகத்துடன் வேலை செய்வது மிக மிக உயர்ந்த முறை.' இதுதான் உலக வாழ்வுக்கு ஏற்ற அறிவுரை. இதை நாம் எல்லாரும் பின்பற்றலாம். இது நம்பினோர் கெடுவதில்லை என்ற உறுதியைக் குறிக்கிறது. எல்லா வேலைகளிலும் இதே நம்பிக்கையோடு பணி செய்தால் சந்தோஷமாகவே இருப்போம்.

தண்ணீர் சப்ளை விஷயமாக உங்கள் தேவை எதுவானாலும் சரி,

அதற்கென்றே டெமிங் பம்புகள் உள்ளன.



- வீடு, தொழிற்சாலை, ஹோட்டல், ஆஸ்பத்திரி அல்லது கிராம தண்ணீர் தேவைகளுக்கு நம்பகரமான உழைப்புடன் நயமான விலையில் பம்பு செட்டுகள் உள்ளன.
- கைவசம் உள்ள ஸ்டாக்கிலிருந்தும், வந்துகொண்டிருக்கும் ஸ்டாக்கிலிருந்தும் எந்த மாடல்களையும் விரைவில் சப்ளை செய்யமுடியும்.
- ஸ்பேர் சாமான்களுக்கு நீங்கள் கவலைப்படவேண்டியதே இல்லை. அவை எப்பொழுதும் கிடைக்கும்.
- எங்கள் பொறுப்பு, சப்ளை செய்த பம்புகளை பொருத்துவதுடன் நின்றுவிடுவதில்லை. உள்ளூரானாலும் சரி, வெளியூரானாலும் சரி, பம்புகளை அவ்வப்போது சரிபார்த்து ஓடச்செய்வதும் எங்கள் பொறுப்பே. இதற்குவேண்டிய எல்லா வசதிகளும் எங்களிடம் உண்டு.
- ஒரு முறை எங்கள் கம்பெனிக்கு விஜயம் செய்து நேரில் எல்லா பம்பு செட்டுகளையும் பார்க்கவும். டெமிங் பம்புகளைப்பற்றிய ஆலோசனை எப்பொழுதும் எங்களிடம் எளிதில் கிடைக்கும்.

தண்ணீர் சப்ளை விஷயங்களை சுலபமாக தீர்த்துவைக்கக்கூடிய நிபுணர்கள்

ஈஸன் என்ஜினியரிங் கம்பெனி லிமிடெட்.

5-7 செகண்ட் லைன் பீச், மதராஸ்.



மூன்றாம் அத்தியாயம்

தந்தையும் மகனும்

தணிகாசலத்தின் உள்ளத்தில் அலை மோதிய எண்ணங்கள் யாவும் உண்மை தானா, அல்லது கற்பனையா? தேவகியின் போக்கில் ஏன் இன்றைக்கு என்றுமில்லாதபடி ஓர் பூஞ்சிட்டின் பரபரப்பும் உல்லாசமும் தென்படுகின்றன? அவர்களுடைய தனிமையில் குறுக்கிடுவதற்கு முன்னால் நாம் தணிகாசலத்தைப் பற்றி இன்னும் சற்று விரிவாகத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். அப்படித் தெரிந்து கொள்ள வேண்டுமானால் சரியாக ஒரு வருடத்துக்கு முன்பு நிகழ்ந்த ஓர் முக்கியமான நிகழ்ச்சியைத் திரும்பிப் பார்க்க வேண்டும்.

அதைப் பார்ப்பதற்காக நாம் கண்ணபுரம் நகரத்துக்குள் சென்று வருவோம். உடனடியாகத் திரும்பி விடலாம்.

கண்ணபுரம் நகரத்தைப் பார்க்க இரண்டு கண்கள் போதும்; ஆனால் குதிரை வண்டி வேண்டும். 'டவுன் பஸ்' அங்கு கிடையாது; 'டாக்ஸி' நமக்கு வேண்டாம். கண்ணபுரத்தின் கம்பீரமான நான்கு ராஜ வீதிகளுக்குப் பின்னால், மூன்று-மூன்று கிளை வீதிகள். நான்கு திசைகளிலும் சதுரமாக உள்ள அந்தப் பதினாறு வீதிகளையும் ஒரு மூலையில் நின்று பார்த்தால் மறு மூலை வரையில் நூல் பிடித்த மாதிரி தெரியும். சந்து பொந்துகள், மூலை முடுக்குகள், கோணல் திருப்பங்கள் இல்லாத சிறிய நகரம் அது. அதை அப்படி ஏற்படுத்திய திறமையாளருக்கு வாழ்த்துக் கூறி விட்டு, மணிக்கூண்டுப் பூங்காவை அடுத்து நிற்கும் வண்டிகளில் ஒன்றைப் பேசிக் கொண்டு கிழக்கே செல்வோம்.

கீழக் கோடிக்கு வண்டி வந்த பிறகு, அந்த விசாலமான தெருவில், வடக்குத் திருப்பத்தை ஒட்டி மேற்கு பார்த்த மஞ்சள் மாடி ஒன்று தெரிகிறதல்லவா? அது முன்பு காட்டிலாகா அதிகாரியாக இருந்த பழைய பரமசிவத்தின் முன்னாள் வீடு. புதுப் பரமசிவம் இப்போது வேறொரு இடத்தில் இருக்கிறார். அந்தக் காலத்தில் அந்த ஊரில் பத்தாயிரம் ரூபாய்க்கு இருந்த மதிப்பு இதைவிடப் பத்து மடங்கு உயர்ந்தது. அவர் பத்தாயிரம் ரூபாய் போட்டு அந்த வீட்டைக் கட்டினாராம்.

அந்த மாடியின் தெற்கு மூலை அறையில்தான் அவரது செல்லப் பிள்ளை தணிகாசலம் ஆறாம் வகுப்பு வரையில் படித்தான். ஒவ்வொரு நாளும்-அவர் ஊரில் இருந்தால்-அவன் படிக்கும் போது பக்கத்தில் இருந்து, ஒவ்வொரு பாடத்துக்கும் ஒரு கல்கண்டுத் துண்டு அவனுக்கு அவன் அப்பா கொடுப்பாராம். வெகுநாட்கள் கழித்து நாற்பதாவது வயதில் அவருக்குப் பிறந்த அருமைப் பிள்ளை அவன். அந்தக் காட்டிலாகா அதிகாரியின் வீட்டில் இப்போது யாரோ மாட்டு வைத்திய நிபுணர் குடியிருக்கிறார். வீடு ஏலத்துக்கு வந்து பல கைகள் மாறி விட்டன.

சரி, வண்டியைத் திருப்பிக் கொண்டு வடக்கு ராஜ வீதியின் மத்திக்குச் செல்வோம். அங்கே நாலாவது விளக்குக்



கம்பத்தை ஒட்டி, தெருக் குழாய்க்கு அடுத்தாற்போல், ஏதோ ஒரு ஆபீஸ் என்று பெயர்ப் பலகை தொங்குகிறது, பாருங்கள். பத்து வருஷங்களுக்கு முன்பு 'இந்திரா பாங்க்' என்ற பெயரில் பணம் புரட்டிக் கொண்டிருந்த இடம் இது. பரமசிவத்தின் கணக்கும் இதில் உண்டு.

பரமசிவம் பல வழிகளில் பணம் திரட்டியவர். காடுகளை மற்றவர்கள் அழிக்காமல் காப்பாற்றுவதற்காகச் சமஸ்தானத்தார் அவருக்குச் சம்பளம் கொடுத்தார்கள். மற்றவர்கள் காட்டை அழிக்காமல் பார்த்துக் கொண்ட வரையில் அவர் சம்பளம் தந்தவர்களுக்கு விசுவாசமாக இருந்தார். ஆனால் தாமேசமஸ்தானத்துக்குத் தெரியாமல் காட்டை அழித்துத் தமக்குப் பணம் கொடுத்த பணக்காரர்களுக்கும் அவர் விசுவாசமாக நடந்து கொண்டார். சம்பளம், கிம்பளம் இரண்டுமாகச் சேர்ந்து விடாக எழும்பியது; பாங்குக் கணக்கில் புள்ளிகள் உயர்ந்தன.


திடீரென்று ஒரு நாள் புள்ளிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நிலை ஏற்பட்டது. பாங்கி முறிந்து விட்டதாம்!

கட்டடம் பத்திரமாகத்தானே இருக்கிறது என்று கேட்பீர்கள். உள்ளே பணப் பெட்டி முறிந்து, கவிழ்ந்து காலியாகி விட்டதாம். அதை வேண்டுமென்றே சிலர் முறித்து விட்டதாகக் கேள்வி. அப்படி முறித்து விட்டவர்கள், தாங்கள் யோக்கியர்கள் என்று வக்கீல் வைத்து வாதாடி, அந்த வாதத் திறமையை நீதிபதி மெச்சி, ஆனால் அதன் உண்மையை நம்பாமல் தலைக்கு இரண்டு வருடங்கள் என்று அவர்களை உள்ளே தள்ளினாராம். அவர்கள் வெளியில் வந்தவுடன் மீண்டும் புது வீடுகள், புதுத் தொழில்கள், புது உறவுகளுடன் பெரும் புள்ளிகளாகவே வாழ்கிறார்கள். பெரிய மனிதர்களுடைய சின்னத்தனத்தைப் பற்றி நமக்கு எதற்கு வம்பு?

ஆனால் அவர்களால் உண்மையிலேயே சிறிய மனிதராக்கப்பட்ட பரமசிவத்தை நாம் மறக்க முடியாது. பாங்கிப் பணம் போனவுடன் அவருக்கு வேலையும் போய் விட்டது. அத்தனை நாள் கண்டு பிடிக்காமல் இருந்த லஞ்சக் குற்றத்தை அவருடைய மேல் அதிகாரிகள் அப்போது தான் கண்டுபிடித்தார்கள். மேற்கொண்டு அவர்களுக்கும் லஞ்சம்கொடுத்துக் கண்களில் மண்ணைத் தூவ அவருக்கு வழியில்லாததால், பேசாமல் காலீட்டை எழுதிக் கொடுத்து விட்டு, துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டார் பரமசிவம்.

அவா, அவர் மனைவி, ஆணும் பெண்ணுமாகிய இரு குழந்தைகள் ஆகிய நால்வரும் இந்த உலகத்தில் அதன் பிறகு வாழ்வதற்குப் பட்ட துன்பங்களைச் சொல்லாமல் இருப்பதே நல்லது. சில வருடங்கள் பல ஊர்களில் அலைந்து திரிந்து விட்டுத் திரும்பவும் கண்ணபுரத்துக்கே அவர் வந்து சேர்ந்தார்.

ஊருக்குள் தலைகாட்ட அவருக்குப் பிடிக்கவில்லை. வயதும் ஐம்பதுக்கு மேல் அறுபதை எட்டிப் பிடிக்கத் தொடங்கியது. ஊருக்கு வெளியில் இரண்டு மைல் தூரத்தில் உள்ள ஏழைகள் வாழும் பகுதியில் அவர் குடியேறினர்.



கூரைக் குட்டிச்சுவர்ஒன்றுக்கு வெளியே, 'குழந்தை வைத்தியம் செய்யப்படும்' என்ற பலகையைத் தொங்க விட்டுக் கொண்டு, தம்முடைய குழந்தைகளைக் காப்பாற்றினார்; படிக்க வைத்தார்.

குழந்தை வைத்தியம் அவருக்குப் பரம்பரையாக வந்த ஒன்று. பதவியில் இருந்தபோது பணம் வாங்காமல் அதைச் செய்தார். அதற்காகக் காலணா கைநீட்டி வாங்கினால் அது பாவம் என்ற கொள்கை. லஞ்சம் வாங்கிய ஒன்றைத் தவிர, மற்ற விஷயங்களில் அவரைக் குறை சொல்ல முடியாது. ஏழை எளியவர்கள், உற்றார் உறவினர், அண்டி வந்தவர், வேலைக்காரர் எல்லோருக்கும் அவர் முடிந்ததைச் செய்தார். கொடுக்கும் நிலையில் உள்ளவர்களிடம் வாங்கி, தாமும்வாழ்ந்து, மற்றவர்களுக்கும் கொடுப்பது தவறல்ல என்பது அவர் சித்தாந்தம்.



வைத்தியத்துக்குக் காசு வாங்க வேண்டிய காலம் வந்ததே என்று அவர் ஆரம்பத்தில் கண் கலங்கினார். வேறு வழி? பெண்ணுக்குக் கல்யாணம், பையனுக்குப் படிப்பு, மனைவி முதல் எல்லோருக்கும் சோறு துணி வேண்டாமா?

பிள்ளை வைத்தியம் இழுத்துப் பறித்துக் கொண்டு நடந்தது. பையனும் இண்டர் தேறி விட்டான். பெண் லட்சுமியும் வளர்ந்து விட்டாள்; இந்த நிலையில் தான் ஒரு நாள் ஐந்து மைல் நடந்து சென்று, குழந்தையொன்றைக் காப்பாற்றி, ஐந்து ரூபாய் வாங்கி வந்தார். வரும் வழியில் மழை கொட்டியது. ஈரத் துணி, வீங்கிய கால்கள், ஐந்து ரூபாய், நூற்றைந்து டிகிரி காய்ச்சல் இவற்றுடன் வீடு திரும்பினார். பிள்ளை பிழைத்தது; பிள்ளையைப் பிழைக்க வைத்தவர் தாம் பிழைக்க முடியாதென்ற பயத்துடன் படுக்கையில் கிடக்கிறார்.

குதிரை வண்டி இனி நமக்குப் பயன் படாது. காசைக் கொடுத்து விட்டுக் கீழே இறங்குங்கள். செருப்புக் கால்—பூட்ஸுக் காலாக இருந்தால் நாசூக்குப் பார்க்காமல் கழற்றிக் கைகளில் தூக்கிக் கொள்ளுங்கள். சேறும்சகதியும் நிறைந்த தெருவில் நாம் நுழைய வேண்டும். வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு, சேலைத் தலைப்பைக் கீழே புரளாமல் ஒதுக்கிக் கொண்டு கவனமாக வாருங்கள். முடை நாற்றம் வீசுகிறதா? மூக்கை இறுக்கிப் பிடித்துக் கொள்ளுங்கள். சாக்கடை ஓரங்களில் பரட்டைத் தலையும், ஒழுகிய மூக்கும், சாரை வடிந்த ஒட்டிய வயிறுமாகக் குழந்தைகள்விளையாடுகிறார்களா? பார்ப்பதற்குக் கண் கூசுகிறதா? கண்களை இலேசாக மூடிக்கொண்டு என்னோடு நெருங்கி வாருங்கள். ஒரு நாளைக்கு ஒன்பது விதம் உடுத்து, ஏழு வேளை சாப்பிட்டு, உல்லாசமாகத் திரியும் நகரத்து மக்களைப் பார்த்தவர்கள் நாம். என்ன செய்வது? என்னுடன் வந்து விட்டீர்கள். இதற்கெல்லாம் ஓரளவு பழக்கப்பட்ட நாகரிகம் தெரியாத பேர் வழி நான். வாருங்கள்.



நகரத்துக்குப் பக்கத்தில் உள்ள நரகம் இது. இந்த நரகத்தில்தான் தணிகாசலத்தின் தகப்பனார் பரமசிவம் வாழ்கிறார், வாழ்கிறாராவது! செத்துக் கொண்டிருக்கிறார்...

தாழ்ந்த கூரை உங்கள் தலையில் இடிக்கலாம்; வாழ்க்கையில் கூனிக் குறுகிப் போனவர்கள் வாழக்கூடிய பொந்து இது. பார்த்து மெல்லக் குனிந்து வாருங்கள். வந்து கீழ்ப்பக்கமுள்ள ஒட்டுத் திண்ணையில் நெருக்கியடித்துக் கொண்டு ஆண் - பெண் வித்தியாசம் பார்க்காமல் உட்காருங்கள். கூச்சம் எதற்கு? சென்னை நகரத்தின் 'டவுன் பஸ்' காட்சியை — ஒருவர் மடியில் ஒருவர் உட்கார வேண்டிய அவலட்



சணக் காட்சியை — நீங்கள் பார்த்திருந்தால் இங்கே கூச்சப்பட மாட்டீர்கள். எதிர்த் திண்ணையில் பழைய கோரைப் பாய்க் கிழிசலில், மெலிந்து தளர்ந்து கிடப்பவர்தாம் குழந்தை வைத்தியக் கிழவர். கருங்காலிச் சட்டம்போல் காடுமேடெல்லாம் ஒரு காலத்தில் பீடு நடைபோட்ட தேகந்தான் இது. தலையோரமாகக் கஞ்சியை ஆற்றிக் கொண்டிருக்கும் நடுவயதுப் பெண்மணி அவர் மனைவி கல்யாணி. அழுதழுது கண்கள் வீங்க அருகில் நிற்கிறாளே, அந்த அழகுப் பெண் அவர் குழந்தை லட்சுமி. பையன் தணிகாசலத்தைக் காணவில்லையா? அவன் நகரத்துக்குள் போயிருக்கிறான். தந்தையின் நண்பர் சுப்பையாவை அழைத்துக் கொண்டு இதோ வந்து விடுவான். - வந்தே விட்டானே!

பையனுக்குப் பின்னால் நுழைபவர் தாம் சுப்பையா. அடர்த்தியில்லாத கிராப்பு, உச்சியில் ஓர் சந்திர வட்ட வழுக்கை, குழந்தை முகம், இளம் தொந்தி, சிவப்பு நிறம், அங்க வஸ்திரம், நாற்பது வயது. வந்தவர் மரமாக நின்று வைத்த கண் வாங்காமல் பரமசிவத்தைப் பார்க்கிறார். பனித்திரை கண்ணை மறைக்க, இளம் தொந்தி குலுங்க விம்மலொன்று இலேசாக வெளிப்படுகிறது.

"நீங்கள் கண்ணபுரத்தில் இருப்பதே எனக்குத் தெரியாது, அண்ணா. ஒரு கடிதமாவது எழுதியிருக்கக் கூடாதா?"

"உட்கார், சுப்பு!" — அருகில் அழைத்து உட்கார வைக்கிறார். "யாருக்கும் தெரியாமல் மறைந்து வாழ வேண்டிய காலம் என்னுடையது. உன்னைப் பார்த்து, உன்னிடம் ஒரு உதவி கேட்டு விட்டுக் கண்ணை மூடத்தான் வரவழைத்தேன். முடிந்தால் செய்; முடியாவிட்டால் அதையும் சொல்லி விடு. வருத்தப்பட மாட்டேன்."

"சொல்லுங்கள், அண்ணா! நீங்கள் வளர்த்த உடம்பு இது. உங்கள் சிபாரிசால் பெற்ற வேலை என்னுடையது. —நிச்சயம் செய்கிறேன்."

"இரண்டு காரியங்கள் இந்த உயிருள்ளவரை செய்யக் கூடாதென்று நினைத்தேன். ஒன்று குழந்தை வைத்தி

யத்துக்குப் பணம் வாங்குவது; இன்னொன்று, யாருக்கும் எதுவும் செய்யாமல் அவர்களிடம் உதவி கேட்பது. ஆனால் இரண்டும் நடக்கவில்லை.''

நன்றாக இருமிக் கோழையை எச்சில் பணிக்கத்தில் துப்பிவிட்டு மேலே பேசுகிறார் பரமசிவம்: ''நான் கண்ணை மூடிய பிறகு அவளைத் தன் தாயார் வீட்டுக்குப் பொன் வயலுக்குப் போகச் சொல்லி விட்டேன். வயது வந்த பெண்ணை வைத்துக் கொண்டு அவள் இங்கே இருக்க வேண்டாம். தணிகாசலத்தைப் பற்றித்தான் எனக்குக்கவலை. அவன் 'இண்டர்' படித்து முடித்து விட்டான். அவனுக்கு எம். ஏ. படித்துக் கல்லூரி ஆசிரியர் வேலை பார்க்க ஆசை. இங்கே அவனுக்குச் சம்பளமில்லை; சாப்பாட்டு வசதி கிடைத்தால் பி. ஏ. வரை கஷ்டமில்லாமல் படிக்கலாம். உன்னால் இரண்டு வருஷங்கள் அவனை வைத்துக் காப்பாற்ற முடியுமா? வீட்டு நிலையை யோசித்துப் பதில் சொல்.''

''தாராளமாய்ச் செய்கிறேன். சிரமமில்லை எனக்கு!''

''பி. ஏ. முடித்துச் சென்னைக்குப் போகப் பணம் வேண்டும். வசதிப்பட்டால் அதையும் எங்கேயாவது கடனாக வாங்கிக் கொடு. பிழைத்துக் கடன் கட்டுவான். இது முடியாவிட்டால் முன் உதவியே போதும்.''

''சரி, அண்ணா, எப்படியானாலும் இரண்டையுமே கவனிக்கிறேன்.''



''கவலை விட்டது. நிம்மதியாய்ச் சாகலாம். தணிகாசலம்! நீ இப்படி வா! உனக்கு ஒரு வார்த்தை.''

தணிகாசலம் பக்கத்தில் போய் உட்காருகிறான்.

''உன்னை நான் மனிதனாக்கிப் பார்த்து விட்டுப் போக ஆசைப்பட்டேன். பரவாயில்லை. என்னுடைய வாழ்க்கையில் நான் செய்த நல்ல காரியங்கள் உனக்கு வழிகாட்டியாகவும் கெட்ட காரியங்கள் எச்சரிக்கையாகவும் இருக்கட்டும். கடைசிவரையில் சோம்பலில்லாமல் நான் உழைத்தேன். நீயும் உழைக்கக் கற்றுக் கொள். தவறான வழிகளிலும் நான் பணம் தேடினேன். வந்த வழியில் அது போய் விட்டது. நீ தவறான வழிக்குப் போகாதே. யோக்கியமான தொழிலால் பணம் தேடு. ஆசிரியர் வேலை உயர்ந்த வேலைதான்.''

திரும்பவும் இருமல்; திரும்பவும் பேச்சு: ''உன்னைப் பெற்றவளுக்கு என்னால் அதிக சுகமில்லை. அவளைக் கண் கலங்க விடாதே! தங்கைக்கு நல்ல இடத்தில் கல்யாணம் செய்து கொடு. உன் மாமா பெண் கௌரி இப்போது சிறு பெண். அவளையே உனக்குச் செய்து வைக்க வேண்டுமென்று எனக்கும் உன் அம்மாவுக்கும் எண்ணம். அந்த எண்ணத்தை விலக்கி விடாதே. கடவுளை நம்பு; அவர் உனக்கு நல்ல வழி காட்டுவார். மனித சக்திக்கு மேலான ஒரு சக்தியை நான் உணர்ந்தவன்; அனுபவித்தவன்; இப்போதுகூட நேரம் நெருங்கி விட்டது என்பதை அந்தச் சக்தி எனக்குச் சுட்டிக் காட்டுகிறது.''

பேசி முடிந்தவுடன் பரமசிவத்துக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்குகிறது. இருமல், இருமல், ஒரே இருமல். உதட்டை அசைக்கிறார். கண்களை மூடி மூடித் திறக்கிறார். தேகம் படபட என்று நடுங்கி, ஒரு வெட்டு வெட்டிப் பிறகு கட்டை போல் விறைக்கிறது. ஐயோ, பாவம்! குழந்தைக்கு வைத்தியம் செய்தாரே, தமக்குச் செய்து கொள்ளத் தெரியவில்லையா?

வாருங்கள், நாம் திரும்பிப் போவோம். இந்த நாற்றம் பிடித்த தெருவில், புழுதி படிந்த குடிசையில், கந்தல், வறுமை, நோய், கவலை நிறைந்த வீட்டில் நாம் எத்தனை நேரம் தங்கியிருப்பது? நம்மில் பலர் இன்பத்துக்காக, பொழுதுபோக்குக்காக, உல்லாசத்துக்காக வாழ்க்கையின் மேல் பரப்பைப் பார்ப்பவர்கள். இந்த மாதிரி இடங்களுக்கு இனி உங்களை அழைத்து வந்து சிரமப்படுத்த மாட்டேன். என்னை மன்னித்துக் கொண்டு, பழைய படி ஒரு கையால் செருப்புக்களையும், ஒரு கையால் மூக்கையும் பிடித்துக் கொண்டு, இந்தத் துரதிர்ஷ்டம் பிடித்த தெருவை விட்டு வழவழப்பான தார் ரோட்டுக்கு வாருங்கள். — ஏன் இப்படித் தயங்கி நின்று திரும்பித் திரும்பிப் பார்க்கிறீர்கள்? அங்கே அழு குரல் கேட்கிறதா, என்ன?

ஆமாம், பரமசிவம் பரலோகம் போயிருப்பார். இத்தனை பெரிய உலகத்தில் இது ஓர் அற்பத்தினும் அற்பமான நிகழ்ச்சி. எல்லோருந்தான் சாகிறார்கள். ஒரு ஏழைக் கிழவரின் சாவால் யாருக்கு என்ன நஷ்டம்? குழந்தை வைத்தியம் அவர் சும்மாவா செய்தார்? காசைக் கொஞ்சம் அதிகமாகக் கொடுத்தால் வேறு எத்தனையோ டாக்டர்கள் அதைச் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு வருடத்துக்கு முன்பு நடந்த துன்பக் காட்சி இத்துடன் போதும்.—தணிகாசலத்தையும் தேவகியையும் அங்கே தனிமையில் விட்டு விட்டு வந்திருக்கிறோம்.

நாலாம் அத்தியாயம்

பெண் எனும் புதிர்

தணிகாசலத்துக்கு அவளைக் கண்டவுடன் ஏற்பட்ட பரபரப்பில் நூற்றில் ஒரு பங்குகூடத் தேவகியிடம் தென்படவில்லை. ஒருவகையில் இது அவனுக்கு ஏமாற்றத்தைத் தந்தது. அவளுடைய விழிகளில் கிறக்கம் என்பது தன்னுடைய சொந்தக் கற்பனையாக இருக்குமோ என்று கூடச் சந்தேகப்பட்டான். "உனக்கு ஒரு வேலை கொடுக்கப் போகிறேன்; அதனால்தான் சீக்கிரம் வரச் சொன்னேன்" என்று சாதாரணமாக அவனிடம் காப்பியை நீட்டினாள் தேவகி.

"என்ன வேலை? பேசுகிற வேலை தானே?" என்று கேட்டான்.

"முதலில் அப்படித்தான் நினைத்தேன். நீதான் ஐந்து மணிக்கே வராமல் ஏமாற்றி விட்டாயே? இப்போது கொஞ்சம் கைவேலை இருக்கிறது. அதற்கு நீ வந்து ஒத்தாசை செய்தால் போதும்."

"என்ன வேலை?"

"அடுப்படிவேலை!" என்று சொல்லிச் சிரித்தாள் தேவகி.

"பொய்!"

"என்றைக்காவது நான் உன்னிடம் பொய் சொல்லியிருக்கிறேனா?—சரி, எனக்கு நாழியாகிறது; இன்னும் அரை மணி நேரம் கழித்து உன்னைக் கூப்பிடுகிறேன். அப்போது வா."

தேவகி போய் விட்டாள். வழக்கமாக அவன் விளக்கு வைக்கும் நேரத்துக்கு முன்னால் ஆசனங்கள் போடுவதுண்டு. இந்த ஆசனங்களை அவன் எந்த ஆசிரியரிடமும் நேரடியாகக் கற்றுக் கொள்ளவில்லை. புத்தகத்தைப் பார்த்துச் சொந்தமாகவே கற்றுக் கொண்டான். சர்வாங்காசனம், சிரசாசனம், உட்டியாணா, நௌளி எல்லாம் அவனது அன்றாட விவகாரங்கள்.



ஆசனங்கள் முடிந்தவுடன் நிம்மதியாக நாற்காலியில் வந்து உட்கார்ந்தான் தணிகாசலம். அடுக்களையிலிருந்து அபூர்வமான வாசனை புறப்பட்டு வந்து கொண்டிருந்தது. ஏலம், கிராம்பு, பச்சைக் கற்பூரம், சர்க்கரைப் பாகு, நெய் எல்லாம் ஒன்றாய்க் கலந்தவாசனை. இந்த வேளையில் பிராணாயாமம் செய்தால் இந்த வாசனைக் காற்றையாவது உள்ளே இழுக்கலாமே என்று அவன் நினைத்தான்! அதற்குள் தேவகியே அவனை அழைத்து விட்டாள்.

அடுப்பில் கானவாய்மாதிரி நெருப்பு எரிந்து கொண்டிருக்க, இருப்புச் சட்டியில் ரவையைக் கொட்டிக் கிளறிக் கொண்டிருந்தாள் தேவகி. முந்திரிப் பருப்பு, திராட்சைப் பழம் முன்பு அவனுடைய மூக்கைக் கவர்ந்த சாமான்கள் எல்லாம் இப்போது ரவையுடன் கலந்து நாக்கில் தண்ணீர் வரவழைத்தன.

இருப்புச் சட்டியுடன் அவள் போராடிக் கொண்டிருந்த காட்சி அவனுக்குச் சிரிப்பு மூட்டியது. முன்றானையை வரிந்து இடுப்பில் சுற்றிக் கொண்டு, முகத்தில் முத்து முத்தாய் வியர்வைகள் துளிர்விட

அவள் இரண்டு கைகளாலும் வலிந்து ரவையைக் கிளறினாள். சந்தனக் கடைசல் போன்ற கரங்கள் இரண்டும் பாத்திரத்தைச் சுற்றிச் சுற்றி வந்தன. வேலையின் கடினம் தாங்காது துவண்ட அவளுடையமெல்லிடை ஒடிந்துவிடுமோ என்று தணிகாசலம் பயந்தான்.

இருவரும் இருப்புச்சட்டியைப் பிடித்து இறக்கி வைத்தார்கள். சேலைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டு, அடுப்பில்உலைநீர்போட்டுவிட்டு, கிளறிய பாகை பெரிய தாம்பாளத்தில் கொட்டி வெளி முற்றத்துக்குக் கொண்டு வந்தாள் தேவகி. பிறகு கைகால் முகம் கழுவிக் கொண்டு வந்து உட்கார்ந்தாள். அவனையும் உட்காரச் சொன்னாள். சிறிய கிண்ணத்தில், காய்ச்சிய பசும்பால் தயாராக இருந்தது.



''சூடு ஆறுவதற்குள் இதை நாம் உருட்டிப் போட வேண்டும். இந்தா, பாலைத் தொட்டுக் கொள்; கை சுடாமலும் பார்த்துக் கொள்.'' கிண்ணத்தை நகர்த்தி வைத்தாள்.

திறந்த வெளி முற்றத்தின் வழியே காற்று சுகமாக வீசியது. மேலே வானத்தில் கூடுகளுக்குத் திரும்பும் காக்கைக்கூட்டம் கரைந்து சென்றது. சிவப்பேறிய வானம் இரவின் வரவைச் சுட்டிக் காட்டியது.

மாதிரிக்கு ஒன்றை அவனுக்குச் செய்து காண்பித்துவிட்டு மளமளவென்று உருட்டிப் போட்டாள் தேவகி. வண்ணப் பந்துகள் போல் அவை தாம்பாளத்தில் உருண்டோடின. தணிகாசலம் அவளுடைய கைத்திறனைக் கண்டு வியந்தான்; தானும் உருட்டி உருட்டிப் போட்டான். ஒன்று பெரிது, மற்றொன்று சிறிது. ஒன்று கோழிமுட்டை வடிவம், மற்றொன்று தக்காளிப் பழ உருவம். இப்படிப் பல ரகங்களில் தயாராயின. தேவகி சிரிப்பைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள். சிரித்து விட்டால் அவனுக்குக் கோபம் வந்து விடும்; பிறகு இந்த வேலைகூட நடைபெறாது.

''அண்ணியைப் போல் நானும் வேலை வாங்குகிறேன் என்று கோபமா?''

''இல்லை, அக்கா!''

''என்ன சொன்னாய்!''—சீறினாள் தேவகி. கண்களை உருட்டி விழித்தாள்.

''இல்லை அக்..'' பிறகுதான் அவனுக்குப் புது நினைவு வந்தது.

''அக்காளா!'' ஓங்கிக் கையிலிருந்த உருண்டையைத் தட்டில் போட்டு உடைத்தாள். சுக்கு நூறாய்ச் சிதறி அது தரையில் கொட்டியது.

''இல்லை, இல்லை; எனக்கு வாய் தவறி வந்து விட்டது.''

''இந்தா, இனி வாய் தவறக் கூடாது. எங்கே, ஆ!..வாயைத் திற! சாப்பிட்டு விட்டுப் பிறகு பெயர் சொல்லிக் கூப்பிடு.''

உருண்டையை அவள் வாயில் போடாமல் இருந்தால்ஒருவேளை அவன்கூப்பிடத் தயங்கி யிருப்பான். ஆனால் அதன் ருசி அவனை என்னவோ செய்தது. முக்கியமாக அவனுக்கு இன்னொரு உருண்டை வேண்டும்! கூப்பிட்டு வைத்தால் ஒன்றல்ல, ஒன்பது கிடைக்கும்.

''தே..வ..கி!''

''எங்கே, வெட்கப் படாமல் இன்னொரு தரம்?'' இன்னொரு உருண்டை உள்ளே போயிற்று. இம்முறை வெட்கப்படாமலே அவளுடைய பெயரை அவன் சொன்னான்.

''இதுதான் சரி; நமக்குள் நான் பெரியவளுமில்லை; நீ சின்னவனுமில்லை. இன்றோடு இந்தப் பொய் மரியாதையெல்லாம் விட்டுவிடு. எனக்கு இது பிடிக்கவில்லை. இனிமேல் நீ என்னை அதிகாரம் செய்ய வேண்டும். நான் உன்னுடைய வேலைக்காரி. தெரிந்ததா?''

'வேலைக்காரி' என்ற சொல் சுரீர் என்று அவனுள் தைத்தது. என்றாலும் அப்போதைக்கு ''சரி'' என்று சொல்லி வைத்தான். ரவா உருண்டைகளும் தட்டில் நிறைந்து அந்த வேலை முடிந்தது.

வாசலில் யாரோ வரும் சத்தம் கேட்டது. இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். சுப்பையா வழக்கத்துக்கு விரோதமாகச் சீக்கிரத்தில் ஆபீஸிலிருந்து திரும்பி விட்டார். ''என்ன? பரீட்சை எல்லாம் நன்றாக எழுதியிருக்கிறாயா? உன்னோடு இவ்வளவு நாள் சாவகாசமாகப் பேசத்தான் நேரமில்லை.''

தணிகாசலம் மரியாதையாக எழுந்து நின்று பதில் சொன்னான். அவனை அழைத்துக் கொண்டு தம்முடைய அறைக்குப் போய்ப் பேசிக் கொண்டிருந்தார் சுப்பையா. மறுநாள் அவன் ஊருக்குப் புறப்படுவது பற்றி விசாரித்தார்;

தமக்குக் குழந்தை பிறக்க இருப்பதைச் சொல்லி மகிழ்ந்தார்; தேவகி அவளை நன்றாகக் கவனித்துக் கொள்கிறாளா என்று கேட்டார்.

இருவரும் ஒன்றாகச் சாப்பிட உட்கார்ந்தார்கள். தேவகி கொடுத்த ரவா உருண்டைகள் இன்னும் உருண்டைகளாகவே வயிற்றில் இருந்தன. தேவகியின் தொல்லைக்காகச் சாப்பிடுவதாகப் பெயர் பண்ணினன்.

இரவில் சிறிது நேரம் காகிதக் கட்டுக்களைப் புரட்டிக் கொண்டிருந்து விட்டு ஒன்பது மணிக்கெல்லாம் படுக்கப் போய் விட்டார் சுப்பையா.

தணிகாசலத்துக்குத் தூக்கம் வரவில்லை; அவன் தூங்க விரும்பவில்லை. தேவகி அவனுக்குள் நிழலாடிக் கொண்டிருந்தாள். 'நான் உன்னுடைய வேலைக்காரி' என்று அவள் சொல்லியது திரும்பத் திரும்ப அவன் காதுகளில் ஒலித்தது. இந்த ஒரே சொல்லால் தான் உண்மையிலேயே பெரிய மனிதனாகி விட்டது போல் உணர்ந்தான்.

இதற்கு முன்பு பல முறை அவன் தன்னைப் பெரிய மனிதன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறான். ஆனால் அந்தப் பெரிய மனிதன் வேறு; இந்தப் பெரிய மனிதன் வேறு.

விவேகானந்தரைப் பற்றி அவன் கல்லூரியில் சொற்பொழிவொன்று நடந்தது. அதன் பிறகு அவர் எழுதிய நூல்கள், செய்த சொற்பொழிவுத் தொகுப்புக்கள் முதலியவற்றைப் படித்தான். தானும் அவரைப் போலவே பிரமச்சாரியாக உலகம் சுற்ற வேண்டுமென்ற ஆசை. மகாத்மா காந்தி வேறு நாட்டுக்கு உழைப்பதற்காகக் கல்யாணம் செய்து கொள்ளாமல் இளைஞர்கள் முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தார். அவனுடைய கல்லூரியின் ஆங்கிலப் பேராசிரியரே ஓர் கிறிஸ்தவப் பாதிரி. அதே கருத்தை அவர் தமது பாடங்களினூடே வெளியிட்டார். மேல்நாடுகளில் பல விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், இலக்கிய மேதைகள் குடும்ப வாழ்வில் கட்டுப் படுவதில்லையாம். சிலர் எழுபது எண்பது வயதுக்குப் பிறகே, தங்கள் ஓய்வுக் காலத்தில் மணந்து கொண்டார்களாம். தணிகாசலத்துக்குப் பிரியமான ஆசிரியர் பெர்னாட்ஷா கூட நாற்பது வயதுக்குப் பின்தான் மனைவியைத் தேடிக் கொண்டிருந்தார். தானும் அவர்களைப் போலவே முதலில் அறிவுத் தவம் செய்ய நினைத்தான். இந்த நினைவு தான் அவனுக்குப் பெரிய மனிதன் என்ற எண்ணத்தைக் கொடுத்தது.

தன் தந்தை மரணத் தறுவாயில் குறிப்பிட்ட கௌரியின் விஷயம் மட்டிலும் அவனை உறுத்தாமல் இல்லை. அவள் மிகச் சிறு பெண்ணாக இருந்தாள். அவனுக்குப் பிடித்தமான சிறுமிதான். ஆனால் அவன் லட்சியம் நிறைவேறும் வரை, முப்பது நாற்பது வயது வரை, காத்திருப்பாளா?

கௌரி இருக்கட்டும். தேவகி தன்னைப் பெரிய மனிதன் ஆக்கியது வேறொரு விதத்தில் அல்லவா? இதற்கு என்ன செய்வது? இந்த இரண்டு பெரிய மனிதர்களில் இப்போது எந்தப் பெரிய மனிதனாக மாறுவது? தேவகி அவனிடம் நிறையப் பேச வேண்டுமென்றாள். ஒன்று கூடப் பேசவில்லை. வாய்விட்டு விவரமாக எதையாவது சொல்லியிருந்தாலாவது அவள் எண்ணத்தைத் தெரிந்து கொள்ளலாம். ஒன்று மட்டும் நிச்சயமான உண்மை. தேவகியின் மனத்தில் விரும்பத் தகாத விருப்பங்கள் இருக்கவே இருக்காது. அவள் நல்லவள்; தங்கமானவள்.


ஊருக்குப் போவதற்குள் அவளாகச் சொல்லாவிட்டாலும் தானே கேட்டு விடுவதென்று முடிவு செய்தான். எப்படி எதைக் கேட்பதென்று யோசித்து, கடைசியில், 'நீங்கள் பேசவேண்டுமென்றீர்களே, ஒன்றும் சொல்லவில்லையே?' என்று கேட்க நினைத்தான்.

சன்னல் வழியாக அடுக்களையைப் பார்த்தபோது அங்கே வெளிச்சமில்லை. உறங்கப் போயிருப்பாளோ என்ற சந்தேகம்; அதற்குள் மாடிப்படியில் அவளுடைய காலோசை கேட்டது. கடிகாரத்தில் திரும்பி மணியைப் பார்த்தான் தணிகாசலம். சரியாகப் பதினொன்று! இந்த நள்ளிரவில், நடுச்சாமத்தில், தனியாக அவள் எதற்காக வருகிறாள்? 'குப்' பென்று வேர்த்தது தணிகாசலத்துக்கு.

தேவகி அவன் எதிரில் வந்து நின்றாள். அவிழ்ந்து முதுகில் புரண்ட கேசத்தின் ஒரு பகுதி அவள் நெற்றியில் நெளிந்தது. அவளுடைய உதடுகள் துடித்தன. அவள் அழுதாளா, சிரித்தாளா என்று தெரியவில்லை. தணிகாசலத்தின் கண்களையே உற்றுப் பார்த்தாள். இந்த உலகத்தின் சோகமெல்லாம் அந்தக் கண்களில் நன்றாய்த் திரண்டு முத்து முத்தாய்ப் புறப்பட்டன.

திடீரென்று கீழே சரிந்து விழுந்து அவன் கால்களைப் பற்றிக் கொண்டு தேம்பினாள் தேவகி. அவனுக்கு எதைப் பேசுவது, என்ன செய்வது, எப்படி நடந்து கொள்வது என்று ஒன்றுமே புரியவில்லை. அவள் நீண்ட நேரம், தன்னுடைய கடைசிச் சொட்டுக் கண்ணீரையும் வடித்துவிட வேண்டுமென்று நினைப்பவள் போல், தேம்பிக்கொண்டே இருந்தாள். (தொடரும்)


ஆகஸ்ட் 23உ முதல்
சென்னை பாரகன் & பிராட்வே
மற்றும் தென்னாடெங்கும்
நரசு ஸ்டுடியோஸ்
இரு சகோதரிகள்
டைரக்ஷன்
வேதாந்தம் ராகவய்யா
சங்கீதம்
ராஜேஸ்வரராவ்
சாம்ரியா ரிலீஸ்
BHARAT STUDIO



அத்தியாயம் 8

பாம்புப் பாதை

புலிப்பள்ளியாரின் மெய்காப்பாளருக்கு அளித்த தண்டனையைக் குறித்துப் பராந்தகன் கேலி செய்து கொண்டிருந்தான் அல்லவா? அதைக் கேட்டுப் புலிப்பள்ளியாருக்கு ஏற்பட்ட எரிச்சல் தாங்க முடியவில்லை.

''அன்னியர்கள் இவ்வளவு பெரிய பிரமிக்கத்தக்க கோட்டையைச் சிருஷ்டித்தவர்கள் அதற்குத் தகுந்த பாதுகாப்பையும் ஏற்படுத்தித்தானே இருப்பார்கள் என்று நினைக்காமல் போனதுதான் புத்திக் குறைவான காரியம்'' என்றான் ஆதித்தன்.

''இது ஒரு சாதாரண விஷயமல்ல. தஞ்சை மன்னருக்கே பெருத்த அவமதிப்பை ஏற்படுத்தியது போலாகும்'' என்றார் புலிப்பள்ளியார் ஆத்திரமும் கோபமும் பொங்கி எழ.

''அப்படியா? எங்களுக்குத் தெரியாது. இப்பொழுது நீங்கள் சொல்லித்தான் அதையும் தெரிந்து கொண்டோம்'' என்றான் பராந்தகன்.

''என்ன? அப்படியென்றால் உங்களுக்குத் தெரியாதது போலவே எங்களையெல்லாம் அவமதிக்க நீங்கள் தீர்மானித்திருக்கிறீர்கள் என்று தெரிகிறது.''

''அப்படிச் சொல்வதைவிட நீங்கள் அறியாமலேயே சில காரியங்களில் பிரவேசித்து உங்கள் மதிப்பைக் குறைத்துக் கொள்கிறீர்கள் என்று சொன்னால் அதைக் காட்டிலும் மிக நன்றாய் இருந்திருக்கும்'' என்றான் ஆதித்தன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அங்கு விஜயனும் வரவே, பராந்தகன் அவனை அன்போடு அழைத்து வந்து ஒரு ஆசனத்தில் அமர்த்தி, ''எங்கள் கோட்டைப் பாது காப்பாளர்களில் இவரும் ஒருவர். பாவம்! இவர் கண்ணில் தஞ்சை அமைச்சரின் மெய்காப்பாளர்கள் சிக்கிக்கொண்டார்கள்'' என்றான்.

இவ்வளவு நேரமும் பேசாமலிருந்த அருண்மொழியார் ஆச்சரிய முற்றவராக, ''இவரா உங்கள் கோட்டைக் காவலாளர்? வேடிக்கையாக இருக்கிறதே? இவர் பழையாறை நகர் இளவரசரல்லவா...?'' என்றார்.

''ஆம்! பழையாறை நகர் இளவரசன். கொடும்பாளூர் கோட்டைக் காவலன். இதில் என்ன தவறு? ஒரு இளவரசனாக இருப்பவன் ஒரு கோட்டையின் காவலாளனாகவும் இருக்கக் கூடாதா...?'' என்றான் விஜயன்.

''இதில்தான் ஏதோ சூது இருக்கிறது என்று அப்பொழுதே சொன்னேன். சாதாரணக் கோட்டைப் பாதுகாப்பாளர்கள் தஞ்சை வீரர்களை வீழ்த்தினார்கள் என்றால் என்னால் நம்ப முடியவில்லை. என்னுடைய மெய்காப்பாளர்களை வஞ்சகமாகக் கொல்ல வேண்டுமென்றே இந்தச் சதி நடந்திருக்கிறது'' என்று புகைச்சலோடு சொல்லிய வண்ணம் ஒரேயடியாகத் துள்ளிக் குதித்தார் புலிப்பள்ளியார்.

''ஒரு சதியும் நடக்கவில்லை. அவர்களைப் பிடித்த விதிதான் கோட்டைக் காவலர்களை ஏமாற்றி விட்டு அவர்களைக் கோட்டைக்குள் நுழைய முயற்சி செய்ய வைத்தது. அவர்கள் செய்த தவறுக்குத் தக்க தண்டனையை அனுபவித்தார்கள்'' என்றான் விஜயன்.

''ஒரு சாதாரணச் சிறுவனுக்கு இவ்வளவு துணிச்சலா? சோழ சாம்ராஜ்யம் நிலை குலைந்துபோன பின்பும் அவர்கள் கர்வம் அடங்கவில்லையே—?'' என்றார் புலிப்பள்ளியார்.

''கர்வம் அடங்கவில்லையே என்று சொல்லாதீர்கள். அவர்கள் வீரமும் ஆண்மையும் அழியவில்லையே என்று சொல்லுங்கள்'' என்றான் பராந்தகன்.

''அப்படியா! மகாவீரராக விளங்கும் தஞ்சை முத்தரையரின் விரோதம் எதை விளைவிக்கும் என்பதை அறியாததுதான் இந்தச் சிறுவனின் துரதிருஷ்டம்'' என்று கூறினார் புலிப்பள்ளியார்.

''இன்னொருவருடைய விரோதம் என்னைப் போன்றவனுக்கு வீரத்தைத்தான் விளைவிக்கும். அவருடைய விரோதத்துக்காக நாங்கள் எங்களுடைய சுய கௌரவத்தை இழந்துவிட முடியாது'' என்றான் விஜயன் கம்பீரமாக.

இதைக் கேட்டதும் புலிப்பள்ளியார் மிகவும் ஆத்திரம் கொண்டவராக, ''இச்சிறுவன் பேசுகிறதைப் பார்த்தால் இப்பொழுதே போருக்குச் சன்னத்தனாக நிற்பான் போலிருக்கிறதே. இது நிச்சயம் தீமைதான் விளைவிக்கும். சிறுவர்களால் ஏற்படும் விரோதம் பெரியவர்களுக்குத்தான் பெரிய தீமையை ஏற்படுத்தி விடும், தெரியுமா?'' என்றார்.

''சிறியவர்களாக இருந்தாலும், பெரியவர்களாக இருந்தாலும் புத்திசாலித்தனமென்பது தனி. சிறுவர்கள் புத்திசாலித்தனத்தோடு நடந்து கொண்டால் அவர்களையும் நாம் மதிக்க வேண்டியதுதான். விஜயன் மிகவும் புத்திசாலி. அதோடு தன் குல மதிப்பையும் பெருமையையும் உணர்ந்தவன். அவன் எப்பொழுதும் தன் சுய மதிப்பையோ கௌரவத்தையோ விட்டுக் கொடுப்பதில்லை. அவன் யாரையும் வீணாக விரோதித்துக் கொள்ள மாட்டான். அவனைப் பற்றி எங்களைவிட வேறொருவரும் அதிகமாகத் தெரிந்து கொண்டிருக்க முடியாது. அவன் சிறுவனாயிருந்தாலும் அமைச்சர் அவர்கள் அவனையும் சிறிது மதித்துத்தான் பேச வேண்டும்'' என்றான் ஆதித்தன்.

''அப்படியா? அவமானம். இவ்வளவு அவமதிப்புக்குப் பின்னும் இந்நகரில் நான் ஒரு விநாடிகூட இருக்க விரும்ப



வில்லை. ஒரு விருந்தினராக வந்தவரை எத்தகைய மரியாதையுடன் நடத்த வேண்டுமென்று அறியாததுதான்விந்தையிலும் விந்தை'' என்று கூறிப் பதைபதைப்போடு ஆசனத்திலிருந்து எழுந்தார் புலிப்பள்ளியார்.

ஆதித்தன் அவரை நெருங்கி அவர் தோளைத் தொட்டு ஆசனத்தில் இருத்தி, ''கோபப் படாதீர்கள். ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். விருந்தினராக வந்தவர் எவ்வளவு தூரம் நல்ல எண்ணத்தோடும் உண்மையான மனத்தோடும் இருக்கிறாரோ, அந்த அளவுக்குத்தான் வந்த இடத்திலும் மதிப்பும் மரியாதையும் கிடைக்கும். உங்களை எத்தகைய முறையில் உபசரிக்க வேண்டுமோ, அத்தகைய முறையில் நாங்கள் உபசரிக்கத்தவறியதில்லை. ஆனால் இங்கே உங்களுக்குக் கிடைத்த மரியாதையோ, அவமரியாதையோ உங்களுடைய செய்கையினால் தான் ஏற்பட்டன என்பதை மறந்து விடாதீர்கள். உங்கள் மெய்காப்பாளர்கள் கோட்டைக் காவலர்களால் தண்டிக்கப்பட்டது, நமக்குத் தெரியாமல் ஏற்பட்ட காரியம். இப்பொழுதே அவர்களை விடுதலை செய்யச் சொல்கிறேன். அவர்கள் தங்கள் தேகத்திலுள்ள காயங்களுக்குத் தக்க சிகிச்சை செய்துகொண்டு நல்லபடியாகவே தஞ்சை நகருக்குப் போகலாம். விருந்து தயாராகி விட்டது. இனிமேல் இதைப்பற்றிப் பேசுவதில் பயன் இல்லை. வீண் விரோதமும் மனக் கசப்புந்தான் ஏற்படும். அதை நான் விரும்புவதில்லை. வாருங்கள், உணவருந்தப் போவோம்'' என்று சொல்லி உபசரித்தான்.

''ஆம்! இதுதான் சரியான யோசனை. எல்லோரும் நடந்தவைகளை மறந்து சந்தோஷமாக இருக்க வேண்டுமென்பதுதான் எனது பிரார்த்தனையும்'' என்றார் அருண்மொழியார்.

''என் மெய்காப்பாளர்கள் உடலில் காயம்பட்டுக் கைதிகளாக இருக்கும் நிலையில் எனக்கு விருந்து வேறு வேண்டுமா..? என் மனத்தில் சந்தோஷமும் சாந்தியும் ஏற்படுமா...?'' என்றார் புலிப்பள்ளியார் மிக வியாகூலத்தோடு.

''வருந்தாதீர்கள். இது ஏதோ தவறுதலாக ஏற்பட்டு விட்டது என்றுதான் நான் நினைக்கிறேன். இதற்காகத் தாங்கள் மன வருத்தமோ கோபமோ அடைய வேண்டாம். நம் போன்ற அமைச்சர்களுக்கு இவ்விஷயங்களில், இப்படிப்பட்ட சமயங்களில் சிறிது பொறுமையோடு இருக்க வேண்டியதுதான். எல்லாவற்றையும் மறந்து விடுங்கள். வாருங்கள்போவோம்!'' என்று கூறி அருண்மொழியார் புலிப்பள்ளியாரின் இருகரங்களையும் பிடித்து அழைத்தார்.

புலிப்பள்ளியார் சிறிது தயங்கினார். ஆனால், அவர் முகத்தில் சிறிது சமாதானக் குறி தென்பட்டது. ஆனால், அவர்



முகத்தில் தோய்ந்திருந்த குழப்பமும் அழியாமல் தானிருந்தது. அவர் மெதுவாக அவர்களோடு சென்றார்.

விருந்தும் சம்பிரமமாகத் தான் நடந்தது. எல்லோரும் சம நிலையில் அமர்ந்து மிகவும் சந்தோஷத்தோடும் குதூகலத்தோடும் பேசிக்கொண்டே தான் சாப்பிட்டனர். ஆனால் முக்கிய விருந்தினராகிய தஞ்சை அமைச்சர் மட்டும் மிகவும் மன வருத்தம் கொண்டவராய் மற்றவர்களுடைய பேச்சிலும் உணவிலும் சிரத்தை காட்டாமல் இருந்தார்.

கோட்டை மேற்கு வாசலில் தூணோடு பிணைத்துக் கட்டப்பட்டிருந்த புலிப் பள்ளியாரின் மெய்காப்பாளர்கள் விடுதலை செய்யப்பட்டு அவர்களுடைய காயங்களுக்குத் தக்கபடி சிகிச்சை செய்



யப்பட்டு விருந்து மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர். பாவம், கையும் காலும் வெட்டுண்ட அவர்கள் தனித்து எப்படி வர முடியும்? அரண்மனைச் சேவகர்களின் உதவியோடு தான் அவர்கள் வரமுடிந்தது. அவர்களைப் பார்த்ததும் புலிப்பள்ளியாரின் மனம் விம்மிப் பொருமியது. அவர்கள் விடுதலை செய்யப்பட்டால் என்ன? அவர்களுக்கு விருந்து அளிக்கப்பட்டால்தான் என்ன? அவர்கள் இழந்த அங்கங்களைத் திரும்பிப் பெற முடியுமா? புலிப்பள்ளியாருக்குத் தம்முடைய மெய்காப்பாளர்களைப் பார்க்கப் பார்க்கத் திகிலும் கோபமும் புகைந்து எழுந்தன. என்ன அவமானம்? தம்முடைய மெய்காப்பாளர்களின் அங்கங்களைச் சேதம் செய்து விட்டு அவர்களுக்கு விருந்து உபசாரம் செய்வதுதான் மேலும் அவமானத்தை விளைவிப்பது போல் இருந்தது. அவர் மனத்தில் ஏற்பட்ட கோபமும் ஆத்திரமும் அவர் முகத்தைக் கடுமையாக்கியதே தவிர வார்த்தைகளாக வெளிவரவில்லை. அவர் ஒருவரோடும் பேசாமல் குமைந்த உள்ளம் உட்கார்ந்திருந்தார்.

அப்பொழுது அவருடைய நிலையை உணர்ந்த பராந்தகனுக்கு அந்தச் சமயம் அவரை அங்கிருந்து வேறெங்கேயாவது அழைத்துச் செல்வதுதான் உசிதமாகப் பட்டது. அவன் மெதுவாக அவரிடம் நெருங்கி, ''வருகிறீர்களா, கோட்டையைப் பார்க்கச் செல்வோம். உங்களைப் போன்றவர்களுக்குக் கோட்டையைச் சுற்றிக் காட்டுவதில்தான் எங்களுக்குப் பெருமை. இதைக் காலையிலேயே தெரிவித்திருந்தால் இவ்வளவு நடந்திருக்காது. ஏதோ நடந்தது நடந்து விட்டது. நீங்கள் வாருங்கள்'' என்று மிக்க அன்போடும் மரியாதையோடும் அழைத்தான்.

புலிப்பள்ளியார் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தார். அப்பொழுது அவருக்கு இருந்த கோபத்திலும் ஆத்திரத்திலும் கோட்டையைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்று இருந்த ஆவல் மறைந்திருந்தது. அப்பொழுது பராந்தகனிடம் 'கோட்டையைச் சுற்றிப் பார்க்கும் அபிப்பிராயம் இப்பொழுது எனக்கு இல்லை' என்றுகூட அவர் சொல்லிவிடலாம். ஆனால் அவர்கொடும்பாளூர் வந்த முக்கிய காரணம் கோட்டையைச் சுற்றிப் பார்த்து அதன் மர்மங்களை அறிந்து கொண்டு போக வேண்டும் என்பது தானே. தமக்கு ஏற்பட்ட மன வருத்தத்துக்காகக் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விட்டு விடுவாரா? அவர் ஒருவிதமாகத் தம் மனத்தைச் சமாதானம் செய்து கொண்டு, ''சரி! வாருங்கள்'' என்று சொல்லி எழுந்தார்.


அவரும் பராந்தகனும் கோட்டையை நோக்கிச் சென்றனர். பராந்தகன் மெதுவாக அவரோடு பேசலானான். அவன் புலிப்பள்ளியாரிடம் மிகவும் அனுதாபம் உள்ளவன் போல், ''உங்களைப் போல் நேர்மையோடு நடப்பவர்களையெல்லாம் சாம்ராஜ்ய ஆசை கொண்ட வஞ்சகர்கள் எவ்வகையிலாவது தாழ்மைப்படுத்தப் பார்க்கிறார்கள். எங்கேயாவது கொண்டு போய்ச் சிக்க வைக்க நினைக்கிறார்கள்'' என்றான்.

புலிப்பள்ளியார் எவ்வித பதிலும் சொல்லாமல் நடந்து கொண்டிருந்தார். மறுபடியும் பராந்தகன் பேசத் தொடங்கினான். ''கலங்கமாலரையருக்கு உங்களிடம் இவ்வளவு பகைமை ஏற்பட்டது ஏன் என்றுதான் தெரியவில்லை. உங்களோடு மட்டுமல்ல, உங்கள் மகனையுமல்லவா படுகுழியில் தள்ள நினைத்து விட்டார்...?'' என்றான். இந்த வார்த்


இந்தியாவில் முதல்...
25 ஆண்டுகளுக்குமுன்
பிரபாத் கிரோஸ் விளக்
குத் திரிகள் உற்பத்தியு
டன் ஆரம்பித்தனர்
சடுதியில் ஆயில் பிரஷர்
விளக்குகள், ஸ்டவ்கள்
செய்யத் தொடங்கினர்.
இன்று பிரபாத் பொரு
ள்கள் உயர்தரத்தின்
சின்னங்கள் - உலகில்
எத்தேசமும் பெருமை
கொள்ளக்கூடிய தரம்
Prabhat
பிரபாத்
ஸ்வ்கள் - ஊது விளக்குகள்
- லாந்தர்கள் - மாண்டில்கள்
ஆனாலும் சிறந்தது!

புதிய பரிசுத்தகரணி . . . . டெட்

எல்லாவற்றையும் மிகவும் நன்ருக
சுத்தம் செய்கிறது.



துணிகளை
சுவர்களை
தரைகளை
பர்னிசர்களை
பாத்திரங்களை
ஸிங்கை (சாக்கடைகளை)



ஒவ்வொரு வீட்டிற்கும் டெட் தேவை
டெட்-புதிய பலகார்யார்த்த பரிசுத்தகரணி
இரண்டு சைஸ்களில் கிடைக்கும்.

இந்தியாவில் இந்திய மூலதனத்திலுைம் நிர்வாகத்திலுைம் தயாரிக்கப்பட்டவை

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்., பம்பாய்.

உயர்ந்தரச் சோப், அலங்கார சாமான்கள் தயாரிப்பாளர்கள்

தையைக் கேட்ட பின்புதான் புலிப் பள்ளியார் சிறிது விழித்துக் கொண்டார். அவர் வியப்போடு பராந்தகனைப் பார்த்துக் கொண்டே, "நீங்கள் சொல்வது எனக்கொன்றும் புரியவில்லையே!" என்றார்.

"உங்களுக்குப் புரியாது. இடங்காக்கப் பிறந்தாரின் மகள் திருபுவனியை உங்கள் மகன் மணம் செய்து கொள்வதில் அவருக்குக் கொஞ்சங்கூட விருப்பம் இல்லை. அதை எப்படியாவது தடுத்து விட வேண்டுமென்று ஒரு புரளியைக் கிளப்பி விட்டிருக்கிறார்" என்றார் பராந்தகன்.

"புரளியைக் கிளப்பி விட்டிருக்கிறாரா? இதை என்றால் நம்ப முடியாது. கலங்கமாலரையர்தானே இடங்காக்கப் பிறந்தாரின் மகளை என் மகனுக்கு மணம் முடித்துக் கொள்ள முயற்சி செய்யும்படி என்னைத் தூண்டி விட்டார்....?" என்றார் புலிப்பள்ளியார்.

"இதுதான் பிள்ளையையும் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டுகிற கதை. உண்மையில் இடங்காக்கப் பிறந்தாரின் மகள் அவனுடைய சொந்த மகளே அல்ல என்று ஒரு புரளியைக் கிளப்பி விட்டிருக்கிறார். இதென்ன வஞ்சகம், பார்த்தீர்களா?" என்றான் பராந்தகன்.

"இடங்காக்கப் பிறந்தாரின் மகள் அவருடைய சொந்த மகளில்லையா....? இப்படி ஒரு புரளி கிளம்பியிருக்கிறதா..? அப்படியென்றால் அந்தப் பெண் யாராம்....?" என்றார்.

"அந்தப் பெண் யாரோ இசைக் கணிகையாம். காஞ்சியில் இருந்தவளாம். அவள் ஏதோ மன விரக்தி கொண்டு துறவுக் கோலம் பூண்டு புத்த சங்கத்தில் சேர்ந்தவளாம்" என்றான் பராந்தகன்.

"இசைக் கணிகையா....? காஞ்சியில் இருந்தவளா? இப்படி ஒரு புரளியா? இப்படி ஒரு புரளியைக் கலங்கமாலரையர் கிளப்பியிருக்க முடியாது. வேண்டுமென்று வேறு யாரோதான் செய்திருக்க வேண்டும். நெடுநாட்களுக்குப் பிறகல்லவா இடங்காக்கப் பிறந்தாரின் மகள் அகப்பட்டிருக்கிறாள். அவளைப் பற்றி எதைச் சொன்னாலும் உலகம் நம்பலாமல்லவா?" என்று அலட்சியமாகப் புலிப்பள்ளியார் கூறினார்.

பராந்தகன் சிரித்துக் கொண்டே, "இந்தப் புரளியைக் கிளப்பி விட்டவர் கலங்கமாலரையர் தான் என்பதை நீங்கள் நம்பாதது குறித்து நான் ஆச்சரியப்படவில்லை. அவரை நம்பித்தானே நீங்களும் தஞ்சை மன்னரும் மோசம் போய்க் கொண்டிருக்கிறீர்கள்! ஆனால் இந்தப் புரளியை நீங்கள் சாதாரணமாக மதிப்பிட்டு அலட்சியம் செய்துவிட முடியாது. இதிலும் ஆதாரம் இருக்கிறது என்றுதான் தெரிகிறது..." என்றான்.

"ஆதாரம் இருக்கிறதா? முதலில் புரளி என்று சொல்லி விட்டு அதற்குத் தக்க ஆதாரம் இருக்கிறது என்று சொல்வதுதான் பெரிய புரளியாயிருக்கிறது" என்றார் புலிப்பள்ளியார் அலட்சியமாக.

"ஆம்! ஆதாரத்தோடு கூடிய புரளி ஒரு வகை. ஆதாரமில்லாது கிளம்பும் புரளி ஒரு வகை. இது ஆதாரத்தோடு கூடிய புரளி. இடங்காக்கப் பிறந்தாரின் மகள் திருபுவனி என்று சொல்லிக் கொள்ளப்படும் பெண் முன்பு சோழ மன்னர் சபையில் சிறந்த நாட்டியக் கணிகையாக விளங்கிய அலையூர் கக்கை என்பவளின் பேத்தியும், பல்லவ மன்னர் சபையில் சில காலம் இசைக் கணிகையாக இருந்தவளுமாகிய மாலவல்லி என்று சொல்லிக் கொள்கிறார்கள். இவ்வளவு ஆதாரத்தோடு ஒரு புரளி கிளம்பினால்..." என்று சொல்லி நிறுத்தினான் பராந்தகன்.

இதைக் கேட்டதும் "மாலவல்லியா?" என்று திகைப்படைந்து போய் நின்று விட்டார் புலிப்பள்ளியார்.

'மாலவல்லி' என்ற பெயரைக் கேட்டதும் புலிப்பள்ளியாரின் மனத்தில் சிறிது குழப்பம்தான் ஏற்பட்டது. அப்படிப்பட்ட பெயரை அவர் எங்கோ கேள்விப்பட்டிருப்பது போலவும் தோன்றியது. "மாலவல்லியா..?" என்றார் மறுபடியும் யோசனையோடு.

"ஆம்! மாலவல்லிதான். அவளைப் பற்றி உங்களுக்குத் தெரியுமோ..?" என்றான் பராந்தகன்.

அருள் வாக்கு

ராமர் இருந்த காலத்தில் நாம் பிறக்கவில்லையே என்று எல்லோரும் வருத்தப்படுவார்கள். நான் அப்படிப் பிறக்காததற்கு சந்தோஷப்படுகிறேன். அப்படிப் பிறந்திருந்தாலும் அந்தக் காலத்தில் பிராம்மணனாகப் பிறந்திருக்கக் கூடாது. பிறந்திருந்தால் ராமர் நம்மை நமஸ்காரம் செய்திருப்பார். ரிஷிகள் எல்லோருக்கும் அவர் நமஸ்காரம் செய்தார். அது மிகவும் தர்மசங்கடமான நிலை. இப்பொழுது ஸ்ரீராமருக்குக் கோயில் கட்டி நாம் அவரை நமஸ்காரம் செய்து வருகிறோம்.

ஸ்ரீ சங்கராச்சாரியார், காமகோடிபீடம்.

''எனக்குத் தெரியாது. ஆனால் இப்படிப்பட்ட பெயரை எங்கோ கேள்விப்பட்டதாக நினைக்கிறேன். போகட்டும். இது உண்மையாக இருக்குமென்று நீங்கள் நினைக்கிறீர்களா?'' என்றார்.

''உண்மையாகவும் இருக்கலாம். பொய்யாகவும் இருக்கலாம். இது தீர விசாரிக்க வேண்டிய விஷயம்'' என்றான்.

''ஆம்! இது தீர விசாரித்தறிய வேண்டிய சமாசாரம்தான். உண்மையாக அப்படி இருக்குமானால் நான் என் மகனுக்கு அந்தப் பெண்ணை மணம் முடித்து வைக்கும் எண்ணத்தை விட்டு விடப் போகிறேன்'' என்றார்.

''அவசரப்படாதீர்கள். இதெல்லாம் ஒரு சூழ்ச்சி. உண்மையில் அவள் மாலவல்லியாகத்தான் இருக்கும் என்று நம்ப முடியவில்லையல்லவா? சிறு குழந்தைப் பருவத்திலேயே இடங்காக்கப் பிறந்தாரின் மகள்காணாமல் போய்விட்டாள். ஏன் அந்தக் குழந்தை ஒரு இசைக் கணிகையின் வசம் அகப்பட்டு வளர்ந்திருக்கக் கூடாது. அந்தக் குழந்தைக்கு மாலவல்லி என்று பெயரிட்டுத் தன் மகள் என்று சொல்லி ஒரு இசைக் கணிகை வளர்த்திருக்கக் கூடாது? கடைசியில் அவள் இடங்காக்கப் பிறந்தாரின் குமாரிதான் என்ற உண்மை புலப்பட்டிருக்கக் கூடாது?'' என்றான் பராந்தகன்.

புலிப்பள்ளியாரின் மனக் குழப்பம் நீங்குவதாயில்லை. பராந்தகனின் வார்த்தைகள் மேலும் மேலும் அவர் மனத்தைக் குழப்புவதாகத்தான் இருந்தது.

''அப்படியும் இருக்கலாம். இதைத் தீவிரமாக விசாரிக்காமல் காரியத்தில் இறங்கக் கூடாது. என் மகனுக்குக் கேவலம் இசைக் கணிகையை மணம் முடித்துவைக்க ஒருநாளும் நான் விரும்ப மாட்டேன்'' என்றார் புலிப்பள்ளியார்.

''உங்களைப் போன்ற அமைச்சர்கள் தங்களுடைய மகனுக்கு இப்படிப்பட்ட பெண்களை விவாகம் செய்து வைத்தால் உலகம் நகைக்காதா? ஆனால் இதன் உண்மையைத் தீவிரமாக விசாரித்து அறிய உங்களுக்குத் தக்க மனிதரின் உதவி மிக்க அவசியம் இல்லையா?'' என்றான் பராந்தகன்.

''ஆமாம்'' என்றார் புலிப்பள்ளியார்.

''இதற்கெல்லாம் தகுந்தவர் குடந்தை சோதிடர் சந்தகர்தான். இதைத்தான் முன்பே உங்களுக்கு நான் சொல்லி இருக்கிறேனே? எப்படியாவது அவருடைய நட்பை நீங்கள் பெற்று விட்டீர்களானால் போதும்'' என்று கூறினான் பராந்தகன்.

''சரி! எப்படியாவது சந்தகரின் நட்பைப் பெற நான் முயற்சி செய்கிறேன்''

என்றார் புலிப்பள்ளியார் ஆழ்ந்த யோசனையோடு. அந்தச் சமயம் அவ்விருவரும் கோட்டையின் கிழக்கு வாசலை அடைந்தனர். பராந்தகன் கோட்டையைக் காட்டி, ''இந்தக் கோட்டைக்கு நான்கு வாசல்கள். இப்பொழுது நாம் வந்திருக்கும் இடம் கிழக்கு வாசல், இன்று காலை உங்கள் மெய்காப்பாளர்களுக்குச் சோதனையை ஏற்படுத்திய இடம் மேற்கு வாசல். இதைத் தவிர இன்னும் எத்தனையோ இரகசிய வாசல்களெல்லாம் இதற்கு உண்டு. அவைகளெல்லாம் நம் கண் பார்வையில் அகப்படாது. அவ் வாசல்களெல்லாம் இக்கோட்டைக்குள் வரும் சுரங்கப் பாதைகளின் முடிவான இடங்களில் உள்ளன..சரி! நாம் கிழக்கு வாசல் வழியாகவே கோட்டைக்குள் சென்று பார்க்கலாமா?'' என்றான் பராந்தகன்.

''சரி!'' என்றார் புலிப்பள்ளியார்.

கோட்டை வாசலில் நின்று கொண்டிருந்த காவலர்கள் பராந்தகனைக் கண்டதும் வணங்கி வழிவிட்டனர். பராந்தகன் புலிப்பள்ளியார் பின் தொடரக் கோட்டைக்குள் நுழைந்தான். வாசற்படியிலிருந்து சிறிது தூரம் வரையில் வெளிச்சமாக இருந்தது. போகப்போக இருள் சூழ்வது போலிருந்தது. உண்மையிலேயே அவர்கள் இருள் நிறைந்த இடத்துக்குத்தான் வந்து சேர்ந்தனர்.

மையிருட்டு. புலிப்பள்ளியாருக்கு எதுவும் விளங்கவில்லை. பராந்தகன், ''கொஞ்சம் இருட்டாகத்தான் இருக்கும். வாருங்கள்'' என்றான். பராந்தகன் அந்த இருளை லட்சியம் செய்யாமல் முன்னால் நடந்தான். ஆனால் அந்த இருட்டில் பராந்தகனின் உருவமே அவருக்குத் தெரியவில்லை. அவரும் அவ்விருட்டிடையே நடந்து கொண்டிருந்தார்.

பராந்தகன் ''வாருங்கள். வாருங்கள்'' என்று சொல்லிக் கொண்டே இருட்டிடையே சென்றான்.

அந்த இருட்டில் நடப்பது புலிப்பள்ளியாருக்குச் சிறிது சிரமமாகத்தான் இருந்தது. அவர் சிறிது ஆயாசத்துடன், ''என்ன ஒரே இருட்டாய் இருக்கிறதே...?'' என்றார்.

''அப்படித்தான் இருக்கும். பயப்படாமல் வாருங்கள். எல்லா இடத்தையும் பாருங்கள்'' என்றான்.

பராந்தகனின் குரல் புலிப்பள்ளியாரின் செவியில் விழுந்ததே தவிர அவன் உருவம் அவர் கண்களில் படவில்லை. அவன் எந்தப் பக்கம் செல்கிறான்? நிற்கிறானா, நடக்கிறானா என்பது கூட அவருக்குத் தெரியவில்லை. அவர்



மனைவி: யாரு, நீங்களா? அதுக்குள்ளே பிரசங்கம் செய்து விட்டுத் திரும்பி விட்டீர்களே..........பிரசங்கத்துக்கு நல்ல வரவேற்பு இருந்ததா?

சுற்றித் தடுமாறிக் கொண்டே நடந்தார். அப்படி அவர் எவ்வளவு நேரம் தான் இருளில் நடக்க முடியும்? "இது என்ன ஒரே இருட்டாக இருக்கிறது? வெளிச்சமே வராதா?" என்றார்.

"வெளிச்சமா? வரும், வரும். அதற்கு இன்னும் கொஞ்சதூரம் நடக்க வேண்டும். வடக்கு வாசலுக்குச் சமீபமாகப் போகும் பொழுது கொஞ்சம் கொஞ்சமாக வெளிச்சம் வந்துவிடும்" என்றான்.

"வடக்கு வாசலுக்குச் சமீபமாகப் போனால்தான் வெளிச்சம் வருமா? இந்த இடமெல்லாம் ஏன் இருட்டாக இருக்க வேண்டும்..?" என்று கேட்டார் புலிப்பள்ளியார்.

பராந்தகன் கலகலவென்று சிரித்தான். "இது உங்களுக்கு விளங்கவில்லையா? இந்த இடங்களில்தான் கோட்டையின் மர்மங்கள் இருக்கின்றன" என்றான்.

"இவ்விடங்களில்தான் கோட்டையின் மர்மங்கள் இருக்கின்றனவா? ஒன்றும் விளங்கவில்லையே. ஒரே இருளாகத்தான் இருக்கிறது" என்றார் புலிப்பள்ளியார்.

"மர்மங்கள் என்றால் எளிதில் விளங்கிவிடுமா? அப்படித் தெரியும்படி வைப்பார்களா? மர்மங்கள் எப்பொழுதும் இருட்டில்தான் புதைந்து கிடக்கும்" என்றான் பராந்தகன்.

பராந்தகனின் வார்த்தையைக் கேட்டுப் புலிப்பள்ளியாரின் நம்பிக்கை கரைந்து விட்டது. அவர் மனம் பெரிய ஏமாற்றத்தில் அழுந்தி விட்டது. அப்பொழுது அவர் முகத்தில் ஏற்பட்ட ஏமாற்றத்தின் குறியை அந்த இருளில் பராந்தகன் எப்படித் தெரிந்து கொண்டிருக்க முடியும்? கோட்டையின் மர்மங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை இடிந்து விட்டாலும் அப்பொழுது அவர் அங்கிருந்த இருளில் வந்து சிக்கித் தடுமாறுவது 'உடும்பு வேண்டாம் கையை விட்டால் போதும்' என்ற கதியில் தான் இருந்தது. அந்த இருட்டில் பாதையும் நேராக இல்லை. ஆங்காங்கு படிகள் அமைக்கப்பட்டுக் கீழும்மேலுமாக இருந்தது. எங்கு படிகள் இருக்கின்றன, எங்கு படிகள் இல்லை என்று அவருக்குத் தெரியாததால் இரண்டொரு இடங்களில் அவர் இடறி விழும்படி நேர்ந்தது. அவர் இடறி விழுந்த இடங்களிலெல்லாம் பராந்தகன் அவரைத் தூக்கிவிட்டுத் தன் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டான். அவருடைய முழங்கால்களில் சிறிது காயம் ஏற்பட்டு நோவு ஏற்பட்டது. அதைத் தவிர நடப்பதற்கும் சிரமமாய் இருந்தது.


"காலையில் உங்கள் மெய்காப்பாளர்கள் கோட்டைக்குள் சென்று சுற்றிப் பார்க்க வேண்டுமென்று தங்களுடைய ஆவலை எங்களிடம் தெரிவித்திருந்தார்களானால் உங்களைப்போல் அவர்களையும் சிரமமில்லாமல் எல்லா இடத்தையும் சுற்றிப் பார்க்க ஏற்பாடு செய்திருப்பேன்" என்றான் பராந்தகன்.

பராந்தகனின் வார்த்தையைக் கேட்கப் புலிப்பள்ளியாருக்கு ஆத்திரம்தான் அடிவயிற்றிலிருந்து பொங்கி எழுந்தது. இருந்தாலும் அதை அவர் அடக்கிக் கொண்டு விட்டார்.

இருள்தான் கப்பி இருந்ததென்றால், அங்கு கொஞ்சம்கூடக் காற்று வசதியும் இல்லை என்பதை அப்பொழுதுதான் புலிப்பள்ளியார் உணர்ந்தார். அவருடைய தடித்த தேகம் புழுக்கத்தினால் திணறியது. மூச்சு விடுவதுகூடச் சிரமமாக இருந்தது. கோட்டையைப் போய்ப் பார்த்தவரையில் போதும். எப்படியாவது வெளியே சென்று வெளிச்சத்தையும் காற்றையும் கண்டால் போதுமென்றாகிவிட்டது அவருக்கு. "இந்த இடத்தில் காற்று வருவது கூடக் கடினமாக இருக்கிறதே..." என்றார்.

"காற்றுகூடப் புகாத வண்ணம் ஒரு கோட்டையைக் கட்டியதுதான் என் தந்தையார் பூதி விக்கிரமகேசரி மன்னரின் பெருமையைக் குறிக்கிறது!" என்றான் பராந்தகன். (தொடரும்)

பளு மிகுந்த இயக்க வேலைகளுக்கு



காஸ்ட்ரால் ஸி ஆர் உபயோகித்து

இந்த 6 வித முக்கிய அனுகூலங்களைப் பெறுங்கள்

நீடித்த உழைப்புக் காலம்

டீஸல் எண்ணெயின் எரிபொருள்களால் ஏற்படும் ஸிலிண்டர் தேய்மானத்தையும் ரிங் ஒட்டிக் கொள்வதையும் காஸ்ட்ரால் ஸி.ஆர் தடுக்கிறது. இதனால் இன்ஜின் நீண்ட காலத்திற்கு உழைக்கும்.

அதிகப்படியான திறமை

மிகக் கடுமையான உழைப்புச் சந்தர்ப்பங்களிலும் காஸ்ட்ரால் ஸி.ஆரில் உள்ள ஆக்ஸிடேஷன் தடுப்புகள் திப்பியும் வார்னிஷும் சேருவதைத் தடுத்துத் திறமையை அதிகரிக்கச் செய்கின்றன.

அதிக உஷ்ணநிலை உழைப்புக்கு அதிக பாதுகாப்பு

தற்கால டீஸல் இன்ஜின்களின் உழைப்பால் அதிக உஷ்ணம் ஏறுவதால் பிஸ்டன்களின் ரிங் பெல்ட் பகுதிகள் ஒட்டிக் கொள்ள ஏதுவாகிறது. காஸ்ட்ரால் ஸி.ஆரில் இருக்கும். இதுவரை கண்டு பிடிக்கப்படாத வன்மையான அடிடிவ்கள் நிறைமிக்க எரி பொருள் வஸ்துக்களை வெவ்வேறாகத் தீங்கு இல்லாத முறையில் பிரித்து விடுகின்றன. இதனால் பாதுகாப்பு அதிகமாக ஏற்படுகிறது.

பாரமின்றி ஓடுவதிலுள்ள அபாயங்களைத் தவிர்க்கிறது

இலேசான சுமைகளுடன் அல்லது குறைந்த உஷ்ண நிலையில் இயங்குவதால் கரி ஏற்பட்டு எண்ணெய் எரியாமலும் இறுகிய சாறும் குழிக்குள் புகுந்து லூப்ரிகண்டை கெடுத்து விட ஏதுவாகும். காஸ்ட்ரால் ஸி.ஆர் மற்றெந்த கன ரக சுத்திகரண எண்ணெயைக் காட்டிலும் சுலபமாகக் கரி முதலான அழுக்குகளைத் தனித் தனியாகப் பிரிக்கிறது.

அமில எரி பொருள்களைத் தடுக்கிறது

தற்காலத்தில் அதிக ஸல்பர் சேர்க்கை கொண்ட டீஸல் எண்ணெய்களால் ஏற்படும் அமிலமயமான பொருள்களை எதிர்த்துத் தடுப்பதற்கான முறையில் காஸ்ட்ரால் ஸி.ஆர் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த விசேஷமான அம்சம் என்ஜினுக்குச் சிறந்த பாதுகாப்பு.

அதிக சிக்கனம்—குறைந்த பராமரிப்பு

காஸ்ட்ரால் ஸி.ஆர் மேலான பாதுகாப்பு அளிப்பதால் இன்ஜின்கள் புதியனபோல் சுத்தமாக இருக்கும். இதனால் பராமரிப்புச் செலவு குறைவு, பழுதுச் செலவு குறைவு. மேலும் மிகச் சிக்கனமான உழைப்புச் செலவு.

Castrol


காஸ்ட்ரால்

எண்ணெய்களில் மிகச் சிறந்தது

ஸி. ஸி. வேக்பீல்ட் & கோ., லிட்.

இங்கிலாந்தில் இணைக்கப் பெற்றது அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப் பட்டது

R-66 A



பேராசிரியர்: அ. சீநிவாச ராகவன்

குழந்தைகள் செய்யும் குறும்பிற்கூட, இணையில்லாத இன்பத்தைக் காணும் குலசேகராழ்வார் உள்ளத்தை, சென்ற வாரம் சிறிது கண்டோம். குழந்தைகளை ஏதோ தங்கள் வாழ்வின் ஒழுங்கையும், பாங்கையும் குலைக்க வந்த உற்பாதங்களாகக் கருதி, 'குழந்தைகளா, இல்லை, இல்லை, கோட்டான்கள்' என்று சீறி விழும் புண்ணியவான்களை, தினந்தோறும் கண்டும் வருகிறோம். இப்படிப்பட்டவர்களுக்கும் குலசேகரர் போன்றவர்களுக்கும் இடையிலே, ஒரு கூட்டம் இருக்கிறது. இதைச் சேர்ந்தவர்கள், குழந்தைகள் செய்யும் விஷமத்தைக் கண்டு கோபிக்கிறார்கள், எல்லைமீறியும் கோபிக்கிறார்கள். குழந்தைகளைக் கண்டித்து, நல்வழிப்படுத்துவதாக எண்ணிக் கொண்டு, அவர்களை அடித்துத் துன்புறுத்தி, தங்கள் ஆத்திரத்தைப் போக்கிக் கொள்ளுகிறார்கள். ஆனால், ஆத்திரம் தீர்ந்ததும், இவர்களுக்குப் பச்சாத்தாபம் பிறக்கிறது. 'ஐயோ! தாறுமாறாகக் குழந்தைகளை அடித்துவிட்டோமே' என்று இரங்குகிறார்கள். உடனே அளவுக்கு மீறிக் குழந்தைகளைக் கொஞ்சுகிறார்கள். இவர்கள் ஆத்திரம், அரவணைப்பு, இரண்டுமே குழந்தைகளுக்குப் புரிவதில்லை. இரண்டும் இவர்கள் உலகத்தில் உதித்தவை. குழந்தைகளின் உலகத்தைப் பற்றி இவர்களுக்குக் கவலை இல்லை. அதற்குள்ளே சென்றால் அல்லவா, பரிவோடு குழந்தைகளுக்கு உதவிசெய்ய முடியும்? இவர்கள் உலகமே இவர்களுக்கு: ஆத்திரப்படுகிறார்கள், இரக்கப் படுகிறார்கள். இரண்டும் குழந்தையின் தலையிலே விடிகின்றன.

'குழந்தையின் உலகமா? அப்படி ஒன்று இருக்கிறதா? எங்கள் குழந்தை பேசும் பேச்சைக் கேளுங்கள், ஐயா, பெரியவர்கள் பிச்சை வாங்க வேண்டும், அப்படிப் பேசுகிறான். தெரியாமலா விஷமம் செய்கிறான்? அதெல்லாம் இல்லை. தெரிந்தே செய்கிறான். வேண்டுமென்றே அடம் பிடிக்கிறான்' என்று பேசுகின்றவர்களும் இருக்கிறார்கள். சில சமயங்களில், குழந்தைகள் பெரியவர்களைப் போலப் பேசுவதால், நடப்பதால், அவர்களை நம்மோடு சரிசமானமாக எண்ணிக் கண்டிக்கிறோம். பிறகு....அதை ஒரு கவிஞன் சொல்லுகிறான், கேட்போம்.

ஒருநாள், குழந்தை ஒன்று—ஆமாம், பெரியவர்களைப் போலவே சில சமயம் நடக்கும் குழந்தைதான் - குழந்தையாகி விடுகிறது. விஷமம் புரிகிறது. ஒரு தடவையா, இரண்டு தடவையா, ஏழாவது தடவையாகத் தந்தையின் கட்டளையை மீறுகிறது. கட்டளை ஏதுவானால் என்ன, கீழ்ப்படியவில்லை. அது தான் விஷயம். தந்தைக்குக் கோபம்; மகனை நையப் புடைத்து, 'போடா தொலைந்து' என விரட்டி விடுகிறான். கதை இங்கிருந்து தொடங்குகிறது. தந்தையே கதையைச் சொல்லுகிறான் :

என் மகன்; சின்னஞ் சிறுவன், ஏதோ,
பழுத்த கிழவன்போல் பேசுவான், நடப்பான்;
சிந்தனை தோய்ந்த விழிகளால் என்னை
அமைதியாய் நோக்குவான்; ஆயினும் சிறுவன்.
சொன்னதை மீறுவன். எந்தன் ஆணையை
ஏழாம் முறையாய் மீறினன் ஒரு நாள்
அடித்தேன். 'போடா தொலைந்து' எனச் சீறி
விரட்டினேன். ஆனால் எங்கே போவான்?
பொறுமையோடு அவனை அணைத்திடும்
அன்னையை
வென்றே விழுங்கிய பேதை. விரட்டினேன்.
போனான்.

தாயில்லாக் குழந்தை ஆயிற்றே, என்ன செய்வானோ என்ற கவலையும் இரக்கமும் தந்தைக்கு வருகின்றன. எழுந்து போய்ப் பார்க்கிறான். சிறுவன் தூங்கிக் கொண்டிருக்கிறான். முகத்திலே, அழுத கண்ணீர் இன்னும் உலரவில்லை. தந்தையின் மனம் நெகிழ்ந்து விடுகிறது. குழந்தையின் கண்ணீரைத் துடைக்கிறான். கண்ணீர் சிந்திக் குழந்தையின் முகத்தை நனைக்கிறான்:

போனபின், ஐயோ, என்ன செய்வானோ,
நெடுந்துயர் நெஞ்சை அடைத்திட விம்மித்
தூங்க மாட்டாமல் துடித்திடுவானோ.
என்றெலாம் எண்ணினேன், எழுந்தேன்,
போனேன்......

உறக்கத்தில் ஆழ்ந்து சுருண்டு கிடந்தான்.
கறுத்துக் கண்ணிமை கசங்கி இருந்தன.
உலைந்தவன் சிந்திய கண்ணீர் இன்னமும்
உலராதிருந்தது இமை ஓரத்தில்.
முத்தமிட்டேன், அவன் முகத்தில் வழிந்த
கண்ணீர் துடைத்தேன் துடைத்தும் என்ன,
எந்தன் கண்ணீர் அவனை நனைத்தது.

தூங்குகின்ற குழந்தையின் பக்கத்தில், அவனுடைய உலகத்துப் பொருள்கள்— நாம் விளையாட்டுச் சாமான் என்று அற்பமாகக் கருதுகிறோமே அவை—அடுக்கி வைக்கப் பெற்றிருக்கின்றன. இவற்றை, கண்ணீர் நிறைந்த கண்களால், தந்தை பார்க்கிறான். குழந்தையின் உள்ளம், அவனுக்கு இப்போது புலப்படுகிறது. குழந்தைதான் எவ்வளவுதான் வயது வந்தவனைப் போலச் சிற்சில சமயங்களில் நடந்தாலும் — குழந்தைதான். இதை உணராமல், வெறியிலே அடித்து விட்டோமே என்று எண்ணும் அந்தத் தந்தையின் நெஞ்சு பதைக்கிறது. அவன் பேசுகிறான், தன் மகனைப் பற்றி:

தூங்கினான், அருகில் கைக்கு எட்டியபடி
தான் விளையாடும் பொருள்களை எல்லாம்
அடுக்கி வைத்திருந்தான், அழகாய், சீராய்.
உடைந்த பொம்மை, ஓட்டாஞ்சில்லி,
பச்சை ஓலையால் பின்னிய பாம்பு
மூங்கிலால் ஆனவில், சக்கினுல் அம்பு,
பீங்கான் பூனை, பூவரசம் பூ,
ஐந்தாறு கிளிஞ்சில், அம்மன் காசிரண்டு.
அலைந்த தன் மனத்திற்கு ஆறுதலாக
அனைத்தையும் வரிசையாய் அடுக்கி
வைத்திருந்தான்.
பார்த்தேன், பாவி என் நெஞ்சு பதைத்தது.

இதுவரையில், பாட்டில் சொல்லப் பெறும் அனுபவம் சாதாரணமானதுதான், தினந்தோறும் நம்முடைய வீட்டில் நாம் பெறுகின்ற ஒன்றுதான். ஆனால், கவிஞனுக்கு எவ்வளவு சாதாரணமான அநுபவமும், ஒரு சிறு வானமேடை மாதிரி. நிற்பதற்கு அதில் அவன் இடம் தேடிக்கொள்ளுவான், அவ்வளவுதான். அந்த இடத்தில் — நமக்குத் தெரிந்த அந்த இடத்தில் — நின்று கொண்டே கையை நீட்டி, வானத்தைத் தொட்டு விடுவான்.

மண்ணில் தெரியுது வானம் — அது
வசப்பட மாட்டாதோ?

என்று பாரதியார் பாடினார். நமக்கு என்னவோ மண்ணில் மண்தான் தெரி



கிறது. அதுகூடத் தெரிவதில்லை, விஞ்ஞானியைக் கேட்க வேண்டி இருக்கிறது. கவிஞனுக்கோ வானம் தெரிகிறது. அது அவன் சொல்லில் வசப்பட்டும் விடுகிறது. பிறகு, அதுதான் விந்தை, நமக்கும் கிட்டி விடுகிறது. தெரியாமலா, வர்ட்ஸ்வர்த் என்ற ஆங்கிலக் கவிஞன் சொன்னான்:

> அலைகிட்டிடு வெனக் கண்ணீரும்
> ஆழங்காண இயலாத
> பலப்பலவான எண்ணங்களைப்
> படைக்கும் எளிய சிறுமலரும்.

கண்ணீர் உலராத குழந்தை முகம், தூங்குகின்ற குழந்தையின் நிலை, சுற்றிலும் உள்ள விளையாட்டுப் பொருள்கள், இவற்றை யெல்லாம் இரக்கத்தோடு பார்த்து நிற்கும் தந்தை. இங்கிருந்து கவிஞனுடைய சிந்தை தொடங்குகிறது. ஒரே வீச்சில் கடவுளையே தொட்டு விடுகிறது. 'இறைவனே! எல்லா உயிருக்கும் தந்தையே, நாங்கள் உன் குழந்தைகள். உன் கட்டளைக்குக் கீழ்ப் படிந்து நடந்தோமா, இல்லை. கட்டளை எதுவென்றுகூட உணரவில்லையே! அவ்வளவு பேதைக் குழந்தைகள். இங்கே, இந்த உலகத்தில், சூரிய சந்திர பொம்மைகளுக்கு மத்தியில், எங்களுக்குப் பிடித்த எத்தனையோ சிறு சிறு பொம்மைகளை வைத்துக் கொண்டு விளையாடினோம். விளையாடி, விளையாடிப் பொழுதை யெல்லாம் போக்கினோம். உனக்குக் கோபம் வராதா? வந்தால் தவறில்லை. ஆனாலும், சாவு என்னும் நெடுந் தூக்கத்தில் அழுந்தி உன் முன்னே நாங்கள் மூச்சற்றுக் கிடக்கும்போது, இரங்க மாட்டாயா? இந்த மண்ணுலகத்துத் தந்தையின் அன்பை விடவா உன் அன்பு குறைந்தது? இல்லை. எங்களை அணைப்பாய், எங்களுக்கு அருளுவாய்!' இப்படியாகப் பேசுகிறான், தந்தையாக நின்று பேசும் கவிஞன்:

> அன்றிரவு இறைவனைத் தொழுதேன்: 'அப்பா
> உந்தன் குழந்தைகள். ஆனால் எங்களால்
> உனக்குத் தொல்லைகள், ஒன்று, இரண்டா?
> தொல்லை இவையெலாம் சாவிலே
> தொலைந்த பின்
> மூளைப்பெலாம் அடங்கி, மூச்செலாம் ஒடுங்கி
> உன் முன் கிடப்போம். அந்த வேளையில்
> என்னவெல்லாமோ எண்ணுவாய். இங்கே
> எத்தனை அற்பப் பொருளிலே மனத்தை
> வைத்துனை மறந்து விளையாடி அயர்ந்தோம்.
> உயிர்கள் உய்ய நீ வகுத்த நல் அறத்தினை
> உணரவும் இன்றாது ஒடி அலைந்தோம்.
> என்பதை நினைப்பாய். ஆனால், இறைவா,
> மண்ணினும் வளைந்து நீ மண்ணிலே விடுத்த
> ஏழைத் தந்தை இவன் தரும் அன்பினும்
> தாழ்ந்ததா உந்தன் பேரருள்? இல்லை.
> 'ஐயோ, ஒன்றும் அறிந்திடாப் பேதைகள்'
> என்றே இரங்குவாய். உன் முனிவு அகலும்:
> எம்மையும் பரிவுடன் எடுத்துன்
> நெஞ்சோடணைத்திடும் நிறைந்த உன்கருணை"
>
> (முனிவு - கோபம்)

எளிமையான பாடல். ஆனால் எவ்வளவு அருமையானது!


Coventry Patmore கவிஞர் பாத்மூர் என்பவர் இயற்றிய Toys 'விளையாட்டுப் பொருள்' என்ற பாடல்.


சுதந்திரச் சுடர்!

சென்னை அரசாங்கம் சுதந்திர நூற்றாண்டு விழாவை மிகச் சிறிய முறையில் பலப்பல ஏற்பாடுகள் செய்து வெற்றிகரமாக நடத்தியிருக்கிறது. அவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் விளங்குகிறது சென்னை அரசாங்கச் செய்தித் துறையினர் வெளியிட்டுள்ள 'சுதந்திரச் சுடர்' என்னும் இம்மலர். பலப்பல சுவைமிக்க கட்டுரைகளும் கவிதைகளும் இதில் காண்கின்றன. முக்கியமாக டாக்டர் கே. கே. பிள்ளை எழுதியுள்ள 'வீரமங்கை ஜான்ஸி ராணி' என்ற கட்டுரையும், டாக்டர் மு. வ. எழுதியுள்ள 'திரு வி. க.வின் அரசியல் தொண்டு' என்ற கட்டுரையும், திரு தி. நா. சுப்பிரமணியம் எழுதியுள்ள 'வீரம் செறிந்த பாஞ்சாலங் குறிச்சி' என்ற கட்டுரையும், திரு ந. சஞ்சீவி எழுதியுள்ள 'வேலூர்ப் புரட்சி' என்ற கட்டுரையும், திரு ச. து. சு. யோகியார் பாடியுள்ள விடுதலைச் சிந்தும் குறிப்பிட வேண்டும். சரித்திர முக்கியம் பெற்ற சில அபூர்வமான படங்களும் இதில் இடம் பெற்றிருக்கின்றன. நமது முதலமைச்சர் எழுதியுள்ள 'வாழ்விக்க வந்த காந்தி' என்ற கட்டுரை வெகு தரமாக அமைந்திருக்கிறது. "ஒரு சிறந்த தலைவரின் இயல்பையும் பெருமையையும் அவரைப் போன்ற ஒரு பெரிய தலைவரால்தான் உணர முடியும்!" என்ற அரிய கருத்துடன் கட்டுரையைத் தொடங்கியிருப்பது மிக வாய்ப்பாக இருக்கிறது.

மொத்தத்தில் இவ்வளவு அழகிய மலரை வெளியிட்டதற்குச் சென்னை அரசாங்கத்தாரைப் பாராட்டத்தான் வேண்டும்.

கிடைக்குமிடம்: சென்னை சர்க்கார் செய்தி இலாகா, சென்னை; விலை: ரூ. 1.





வட்ட மேஜை

"பாவை விளக்கு"

திரு "அகிலன்" அவர்களின் பல நாவல்களை நான் படித்திருக்கிறேன். அவை ஒன்றைக் காட்டிலும் ஒன்று உயர்ந்ததாகவே இருக்கின்றன. அம்மாதிரியே "பாவை விளக்கும்" படிப்போர் மனத்தைக் கவருகிறது. எளிய இனிய நடையில் அமைந்த இக்கதை "கல்கி" வாசகர்களுக்கு வாரந்தோறும் இனிய விருந்தாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. முழு நாவலும் இன்றே கிடைக்காதா என்று என்னை ஏங்க வைத்து விட்டது பாவை விளக்கு !

பொன்மலை
16—8—57 கமலன்பன்

சுதந்திர மலர்

கல்கி சுதந்திர நூற்றாண்டு மலர் மணம் வீசி நிற்கிறது !

உயர்திரு ராஜாஜி அவர்களின் "1857" என்ற கட்டுரை நினைவு அலை கொழிக்கும் தன்மை படைத்துள்ளது.

சுந்தர வான்கவி மகாகவி பாரதியின் கவிதை வண்ணம் பாடுகிறது.

'பாவை விளக்கு' புதிய தொடர்கதை எடுத்த எடுப்பிலே சுடர்விடுகிறது. காலைப் பனிமலரின் இன்ப சுகந்தம்-சோலைக் கதிரொளியின் ஒளிவண்ணம் இவைகளை எல்லாம் தாங்கி நிற்கிறது.

தேவகியின் சோகக் கதைக்கு 'ஆரத்தி' எடுக்கிறார் ஆசிரியர் ! இனிமை தவழ்ந்து வரும் தேனருவியின் சலசலப்பு நடையும் அடுக்கடுக்காக வரும் அத்தியாயங்களும் அறிவுச் சுடராகத் திகழ்கின்றன.

திருநெல்வேலி நகர்
16—8—57 செல்வன்

வருமான அத்தாட்சி

மாத வருமானம் ரூபாய் நூறுக்கு மேற்படாத பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு உயர்நிலைப் பள்ளிகளில் மூன்றும் படிவம் வரை முழுச் சம்பளச் சலுகை அளித்துள்ளனர். அதற்குத் தேவையான வருமான அத்தாட்சிப் பத்திரங்கள் கொடுக்க வேண்டும்.

மேற்படிவங்களில் படிக்கும் ஒதுக்கப்பட்ட அல்லது பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் அதற்குரிய பத்திரங்களை ஒருமுறை எடுத்துக் கொடுத்தால் அவர்கள் பள்ளியிலிருந்து விலகும் வரை மறுபடியும் எடுத்துக் கொடுக்க வேண்டியதில்லை என்பதாக விதி உள்ளது.

அதுபோல மூன்றும் படிவம் வரையிலும் ஒரு அத்தாட்சி எடுத்துக் கொடுத்தால் போதும் என்பதாக உத்தரவு இட்டால், ஒவ்வொரு ஆண்டும் ஏழைப் பெற்றோர்கள் அதை எடுப்பதற்காக உள்ளாகும் இன்னல்களிலிருந்து மீளலாம்.

இதைச் சென்னை அரசாங்கம் சிந்தித்துச் செயல்படுத்துமா ?

திருச்செந்தில்
27-7-57 ரா. பாண்டுரங்கன்

சொல்லும் செயலும்

அதிக உணவு உற்பத்திக்காக வகுக்கப்படும் திட்டங்களைப் பற்றியும், அதற்காகும் செலவுகளைப் பற்றியும் சட்டசபைகளிலும் பொது மேடைகளிலும் பேசப்படுகின்றன. ஆனால் அதே நேரத்தில் உணவு உற்பத்திக்குப் பாதகமான காரியங்களும் நடந்து அதற்கு அரசாங்கமும் உடந்தையாக இருந்தால் மக்கள் மனத்தில் என்ன நினைப்பார்கள்?

திருநெல்வேலிக்கு விஜயம் செய்வோர் சுவாமி நெல்லையப்பர் சாலையில் இருமருங்கிலும் பச்சைப் பசேலென்று காணப்படும் நன்செய் நிலங்களைக் கண்டு ஆனந்தப்படுவார்கள். அதே சமயம் அந்த அருமையான நன்செய் நிலங்களை அழித்துக் கட்டடங்கள் கட்டப்படும் கொடுமையைக் கண்டு வேதனையும் அடைவார்கள். இதே வேகத்தில் கட்டட வளர்ச்சி தொடர்ந்து நடந்தால் மேலும் பல நல்ல நன்செய் நிலங்களும் அழிந்துபோய் விடும். இதை அரசாங்கம் உடனடியாகத் தடுத்தாக வேண்டும்.

அனாவசியமாக எழுப்பிவிட்ட கட்டடங்களை அப்புறப்படுத்தி மீண்டும் அந்நிலங்களை நன்செயாக்கும் துணிவு அரசாங்கத்துக்கு உண்டா ? பாக்கியுள்ள நன்செய் நிலங்களையாவது அழிக்காமல் தடுக்கச் சர்க்கார் முன்வரவேண்டும்.

குலசேகரன்பட்டணம்
23—7—57 நின் கதிஜா

கிணறு மானிய உதவி

விவசாயத்தைச் செழிக்கச் செய்கிறோம், விவசாயிகளுக்குப் பண உதவி செய்து அவர்கள் விவசாயத்தில் முன்னேற்றம் காணச் செய்கிறோம் என்று மந்திரிகள் பிரசங்கம் புரிகிறார்கள். சட்டசபையில் பேசுகிறார்கள். ஆண்டுதோறும் விவசாயத்துக்காக லட்சக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கி வைக்கிறார்கள். ஆனால் இந்தப் பணம் எங்கு போகிறது? யார் பலன் அடைகிறார்கள் என்பதுதான் தெரியவில்லை. உதாரணமாக, எங்கள் கிராமத்தைப் பஞ்சநிவாரணபுரியாக எடுத்திருக்கிறார்கள். நாங்கள் கண்ட பலன் என்ன ? விவசாயிகளுக்குக் கிணறு எடுப்பதற்காக ஐந்நூறு ரூபாய் இனமாகவும், ஐந்நூறு ரூபாய் பத்து வருடக் கடனாகவும் கொடுப்பதாகச் சர்க்கார் விளம்பரங்களில் அறிவித்திருந்தார்கள்.

விவசாயிகளாகிய நாங்களும் அதைப் பார்த்துக் கிராமத்திலிருந்து மனுக்கள் போட்டோம். மாதம் நாலாகிறது. ஒருவிதத் தகவலும் இல்லை. 'கிணற்றுத்தாசில்தார் வரவுமில்லை ; பார்க்கவுமில்லை. விவசாயிகளுக்குச் சரியான சமயத்தில் பண உதவி செய்யாமல் இனி மழைக்காலத்தில் பணம் கொடுத்து என்ன பிரயோசனம் ?

அம்பலசேரி
22—7—57 மு. மா. முத்தையா பிள்ளை

ஜூலை மாதச் சிறுகதைப் போட்டியில் நூறு ரூபாய் பரிசு பெற்ற கதை

பாண்டியனின் பரிசு



துரோணா



உக்கிரமான போர் கோட்டைத் தலைவாசலில் நடந்து கொண்டிருந்தது. குதிரைப் படையின் முன்னணியிலிருந்த அவ்வீரன், கையிலிருந்த வேலைச் சுழற்றி வீசி விட்டுக் குதிரையினின்றும் கீழே குதித்து வெற்றுவெளியை நோக்கிப் பரபரப்பாக நடந்தான். சிறிது தூரம் சென்றபின் ஏதோ யோசனையுடன் உடைவாளை உருவிக் கையில் பிடித்தவாறே நாலாபுறங்களிலும் கண்ணோட்டத்தை விடுத்தான். அவனைத் தனிப்பட்ட முறையில் எதிர்ப்பாரும், கவனிப்பாரும் இல்லை. அவனது இடது கரம் நெற்றியின் வெட்டுக் காயத்தையும், முகத்தின் அடர்ந்த ரோமங்களையும் இலேசாகத் தடவி விட்டுக் கொண்டது. வழி நெடுகக் கிடந்த பிணங்களையும் சிதறிக் கிடந்த அங்க உறுப்புக்களையும் மிதித்தபடியே அவன் வர வேண்டியிருந்தது. ஆனால் அவற்றைச் சிறிதும் சட்டை செய்யாமல், அவன் கோட்டையின் வாசலைக் கடந்து வேகமாக வந்து விட்டான்.

ஓங்கி நின்ற மாட மாளிகைகளும் கூடகோபுரங்களும் பூந்தோட்டங்களும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தன. ஆனால் வளைந்து வளைந்து சென்ற வீதிகளில் அரவமேயில்லை. சூன்ய உலகமாகக் காட்சியளித்த அப்பிரதேசம் அவனுக்கு ஓரளவு வியப்பையுமளித்தது. நடையின் வேகத்தைக் குறைத்துக் கொண்டு சுற்றுமுற்றும் நோக்கினான்.

கொஞ்ச தூரத்துக்கப்பால் அரச மாளிகையின் முன்புறத்து முகப்பின் உயரே சுவாரஸ்யமின்றி நெளிந்து கொண்டிருந்த புலிக் கொடியைக் கண்ணுற்றதும் அவன் மனத்தில் பரிதாப உணர்ச்சி மேலிட்டது. ஜீவராசிகளின் இறுதிக் கால மூச்சு போன்று, அக்கொடியின் ஆயுட்காலமும் அப்படித்தானே? பாவம், ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகளாக வாழ்ந்து, உல்லாசமாகப் பறந்து விட்ட அதற்கு—இப்பொழுது இறுதிக் காலம் நெருங்கி விட்டது!

வீரன் தயக்கத்துடன் நின்றபடியே நாலாபுறங்களையும் நோக்கினான். பிறகு தன் உடைகளை ஒருதரம் ஆராய்ந்தவாறு கையிலிருந்த வாளை உறைக்குள் செருகிக் கொண்டு, வேகமாக அரண்மனை வாசலை நெருங்கினான். அரண்மனைக் காவலாளிகள் அவனைத் தடுத்து நிறுத்தி விசாரிக்க முற்பட்டனர். அவனுக்குப் பேசச் செயலின்றி மேல்மூச்சு வாங்கியது. அதற்கிடையே தான் அந்தரங்கமான, அவசர காரியமாக மகாராணியைச் சந்திக்க விரும்புவதாகக் கூறினான். அவனது அவசர நிலை கண்டு அவனை அனுமதித்தனர். போர்முனைச் செய்திகளைக் கொண்டு செல்லும் தூதுவனை அதற்கு மேல் விசாரிப்பதற்கு என்ன இருக்கிறது?

வீரன் பரபரப்புடன் அரண்மனைக் கூடங்களைக் கடந்து அந்தப்புரத்தின் பாதைக்கு வந்து விட்டான். அவன் எதிரே மகாராணி அமிர்தமேந்திய

மோகினியுருப்போன்று தோன்றினள். அவளது முகப் பொலிவும் இளமை கொழித்த உடற்கட்டும் கண்ட அவ் வீரன் சிலையாக ஸ்தம்பித்து நின்று விட்டான். அதேகணம் அவ்வரசியும் வெருண்டு விட்டாள். ஏறக்குறைய ஆறடி உயரமும், அகன்ற மார்பும், சிங்கத்தின் முன்புறக் கரங்கள் போன்ற உரமும் கொண்டிருந்த அவ்வாடவனின் தோற்றம் அவளுக்கு அதிசயத்தையும் அதிர்ச்சியையும் அளித்தது.

''நீங்கள் யார்? எங்கே வந்தீர்கள்?'' என்ற கேள்வியை மிடுக்காகத் தொடங் கியவண்ணம் அவளது விழிகள் அவ் வீரனின்தோற்றத்தைஎடைபோட்டன.

''சோழர்குலத் தேவி! நானும் சோழர்படையைச் சேர்ந்த ஒரு தலைவன் தான். என் பெயர் திருவரையன். முக்கியமான கடமையையும், எச்சரிக் கையையும் செய்ய வேண்டியே போர்க் களத்தினின்று ஓடோடியும் வந்தேன். போர் நடக்கும் விளைவைச் சொல்லவே சாத்தியமில்லை. மாதமும் நாள் கணக்கு களும் மாறித் தற்போது நாழிகைக்கணக் கில் இச்சோழ நாட்டின் உயிர் நிலை ஊசலாடிக் கொண்டிருக்கிறது. தாங்கள் இவ்வரண்மனையில் இருப்பது மிக மிக ஆபத்தான செயல். சீக்கிரமே வேறொரு இடத்துக்குச் சென்றுவிட வேண்டும் என்பதைக் கூறுவதற்காகவே வேகமாக ஓடி வந்தேன்.''

வீரன் படபடப்பாக இவ்வார்த்தை களைக் கூறி நிறுத்தினன். இருமலும் இரைப்பும் அவனது நாவைச் சிறிது தடை செய்தன.

''திருவரையரே! எதற்காக இத்த கைய கட்டளையை எனக்குப் பிறப்பிக் கிறீர்கள்? போர் நடப்பதற்கும், நான் அரண்மனையை விட்டுச் செல்வதற்கும் என்ன சம் பந்தம் இருக்கிறது?''

''சோழர் குலத் தேவி, அபசாரம்! நான் தங்க ளுக்கு இடுவது கட்டளை அல்ல. அவசியமானவேண்டு கோளே. தற்போதுள்ள பயங்கர நிலைகளை முன் னிட்டே இவ்வேழையின் வேண்டுகோளை ஏற்க வேண்டுகிறேன். போர் நமது கோட்டையின் அண்மையில் நடந்து கொண்டிருக்கிறது. நகரத்திலுள்ள பெண்டிரும் சிசுக்களும் பத்திரமான வேற்றிடங்களுக்குக் கொண்டு செல்லப் பட்டு விட்டனர். அரண்மனையைச் சேர்ந்த பணிப்பெண்களில் பலரும் கூடத் தங்கள் உடைமைகளை உதறி விட்டு ஓடோடியும் சென்று விட்டனர். தாங்கள் மட்டும்....''

ராணியின் விழிகளில் கண்டிப்பு பிரதி பலித்தது. ''வீரரே! உமது யோசனையை நிறுத்தும்! நாட்டிலுள்ள மாந்தர்கள் அற்ப உயிராசைக்காக ஓடுவதும் மறை வதும் சகஜம். அரச வம்சத்தில் உதித்த வள், அரசனுக்கே மாலையிட்டவள் இவ் வராஜகத்துக்காக அஞ்சி ஓட மாட் டாள். எத்தனை ஆபத்துகள் நேரிடினும் நான் இவ்வரண்மனையை விட்டு ஓரடியும் நகர மாட்டேன். போரில் நம் அரச ருக்குக் கிடைக்கும் வீரப் பதவியை நானும் அடைவேன். சூரிய திலகம் அணிந்த என் நெற்றியில் எதிரியின் கொடுவாள் வீச்சை ஏற்க எந்த விநாடி யும் தயாராக உள்ளேன் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்!''

''தேவி, தேவி! சற்றுப் பொறுங்கள். தற்போதுள்ள போரின் நிலைகள் தங்க ளுக்குத் தெரியாது. ஆரம்பமுதல் நம் அரசர் நீயருக்கும், வஞ்சகருக்கும் அரசியலில் சலுகையளித்து விட்டார். உறவினரின் உட்பகைகளைத் தேடிக் கொண்டார். அவற்றின் பலன்தான் இன்று சோழ சாம்ராஜ்யத்தின் அஸ்த மனத்துக்குக் காரண மாகி விட்டது. சோழ நாட்டின் உப்பையே தின்று வளர்ந்த தண்ட நாயகர்கள் எதிரிக ளுடன் சேர்ந்து துரோகம் புரிந்து விட்டனர். தெலுங் குச் சோடர்களுக்



கும், காடவருக்கும், ஒய்சளருக்கும், பாண்டியருக்கும் தருந்த சந்தர்ப்பங்கள் ஒரே காலத்தில் ஏற்பட்டு விட்டன. தேவி—'' என்றான் திருவரையன்.

''வீரரே! நடந்ததைப் பற்றிக் கூறி என்ன பயன்? புதியதாகத் தாங்கள் கூற வந்தது என்ன? நமது மன்னர் தற்போது எந்த முனைக்குச் சென்றிருக்கிறார்?'' என்று கேட்டாள் ராணி.

வீரன் சலிப்புடன் பெருமூச்செறிந்து விட்டுத் தொடர்ந்தான்: ''சோழ மன்னர் திரிபுராந்தகத்தை நோக்கிப் பெரும்படையுடன் சென்று பத்துதிங்கள் கழிந்து விட்டன. உதவியாயிருந்த ஒய்சள வீரசோமேசுவரரை விக்கிரமபுரப் போரில் வெட்டிச் சாய்த்து விட்டான் சுந்தர பாண்டியன். இது ஒருபுறமிருக்க, சென்ற அமரபட்சத்தில் நம்



காஞ்சிமா நகரத்தைத் தெலுங்கச் சோடர்கள் கைப்பற்றி விட்டனர். நான்கு தினங்கள் முன்போ, கங்கை கொண்ட சோழபுரம் காடவர் படைகளால் கொள்ளையடிக்கப்பட்டு விட்டது. இங்கே மேற்குப்புறத்திலோ பாண்டியரின் மற்றொரு பெரு வெள்ளம் தஞ்சையைச் சூழ்ந்து விட்டது. இன்னும், இந்த முடி கொண்ட சோழகத்தின் விதி எந்த விநாடியில் முற்றுப்பெற்று விடுமோ எனத் திகில் நிறைந்து விட்டது. தலை வாசலில் குழுமியுள்ள காடவர் படையையும், பாண்டியர் படையையும் ஒருங்கே எதிர்க்க வழியின்றி நம் சிற்றரசரான களப்பாளர் புறமுதுகிட்டு விட்டார். நம் படைவீரர்களும் நம்பிக்கையற்ற வகையில் கடனை ஆற்றிக் கொண்டிருக்கின்றனர். இவற்றுக்கிடையில் தான், தேவி....!'' என்று சற்றே நிறுத்தினான் வீரன்.

சோழ குல மாதேவியின் முகத்தில் பெருத்த கலவரங்கள் நிறைந்துவிட்டன. ஒரு நீண்ட பெருமூச்சுக்குப் பின், அவளது விழிகளில் வைராக்கியச் சுடர் தெறித்தது.

''வீரரே! என் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் நிமித்தம், இவ்வரண்மனையை விட்டுக் கிளம்பச் சொல்லுகிறீர்கள். எண்ணற்ற உயிர்களும், மதிப்பில்லா மாணிக்கங்களும் போரில் மறைந்து விட்டபோது, என் உயிரை மட்டிலும் வைத்துக் கொள்ள விரும்பேன். போர்முனையில் பொழியும் கூரிய அம்புகளுக்கு எதிரே நிற்கும் பதியின் உடலுக்கு என்னநேரிடுகிறதோ, அதுவே இப்பத்தினிக்கும் நேரட்டும்!''

ராணியின் வார்த்தைகளால் வீரன் பெரும் பரபரப்பு கொண்டு விட்டான். அப்பொழுதுதான் அவனுக்குத் தான் சொல்ல வந்த முக்கிய செய்தியும் அறிவுக்கு எட்டிற்று போலும். ''மகாராணி! தங்களது உடலையும், உயிரையும் காத்துக் கொள்ளும் நோக்கத்துடன் நான் தங்களை வேண்டவில்லை. தங்களது மதிப்பற்ற கற்பைக் காக்க வேண்டியே தங்களை மறைத்து வைக்க விரும்புகிறேன். தற்போதையப் போரின் விளைவுகள் மண்ணாசையை மட்டிலும் கொண்டதல்ல; வெறி பிடித்த பெண்ணாசையும் கொண்டதாக நடந்து வருகிறது. சோடருக்கும், காடவருக்கும், பாண்டியருக்கும் தோல்வியுற்ற இந்நாட்டுப் பெண்டிரின் கற்பைச் சூறையாடும் மிருக வெறி தாண்டவ மாடிக் கொண்டிருக்கிறது. வெற்றிப் போதையில் மூழ்கியுள்ள போர்வீரரின் கட்டுக் கொள்ளா மதத்தையடக்க யாரும் முன் வந்திலர். ஆகவே தேவி, இனி பேசிக் கொண்டிருக்கக் காலமில்லை. சீக்கிரமே ஒரு மூடுபல்லக்கைக் கொண்டுவரச் செய்து, தாங்கள் என்னுடன்....''

அவனுடைய வார்த்தைகள் முடிவடையுமுன்பே ராணி 'கலகல' வென்று நகைத்தாள். அதில் ஏளனமும் விரக்தியும் ஊடாடியிருந்தன. ''திருவரையரே! தங்களுடைய செய்திகளுக்கும், முன்னறிவிப்புக்கும் மிக்க நன்றி. என் கற்பைக் காத்துக் கொள்ளுவது என் கடமை. நீங்கள் போர்முகம் செல்லலாம்'' என்றாள் கம்பீரத்தோடு.

அவன் தயங்கினான்.

''தேவி!''

ராணி கையை நீட்டிச் சைகையிடவும், வீரன் கூப்பிய கரத்துடன், ''தேவி! இவ்வேழையின் வேண்டுகோளைப் புறக்

கணிக்கிறீர்கள். தங்கள் மாசற்ற கற்புக்கும், உறுதிக்கும் இனி கடவுள்தான் துணையிருக்கவேண்டும்!'' என்று கூறியபடியே மறைந்து விட்டான்.

★

பதின்மூன்றும் நூற்றாண்டின் மத்திய காலத்தில் இந்நிகழ்ச்சிகள் நடந்தன. மூன்றும் ராஜேந்திரராக முடிசூட்டிக் கொண்ட சோழ வேந்தரின் அரசியலுக்கு நேர்ந்த கடும் சோதனைகளும், குழப்பங்களும் சரித்திர ஏடுகளில் இடம் கொண்டு விட்டன.

போர்வீரன் மறைந்ததும் சோழகுல மாதேவி பெரும் வியாகூலத்துடன் கட்டிலில் சாய்ந்தாள். பாவம்! இருபத்தாறு வயதே யடைந்திருந்த அவளது இளமைப் பருவம் நுகராத மலராகவும், சுவையாக் கனியாகவுமே அன்று வரையில் கழிந்து விட்டது. மாலை சூடிய நாள்முதல் மன்னர் போர்க்களத்தையே இல்லறமாகக் கொண்டு விட்டார்.

கடைசியாகத் தற்போது - நாற்புற எதிர்ப்புக்களும் ஒன்று கூடிச் சோழகத்தை விழுங்கிக் கொண்டிருந்தன.

போர்வீரன் கூறிச் சென்ற செய்திகளும், எச்சரிக்கைகளும் மெய்ப்பட அதிக நேரமாகவில்லை. சூரியாஸ்தமன சமயம். திடீரென்று வெளிப்புறத்திலிருந்து எழுந்து கொண்டிருந்த வாள் வீச்சுகளின் ஒலியைக் கேட்டதும், ராணி பெரும் பதற்றத்துடன் எழுந்தாள். அவளது கண்ணெதிரே நான்கு வீரர்கள் கையில் பிடித்த வாளுடன் வேகமாக வந்து கொண்டிருந்தனர். அவர்களது எண் விழிகளிலும் வெற்றியின் கோர வெறியும் பிரமிப்பும் கூத்தாடிக் கொண்டிருந்தன.

''நீங்கள் யார்? நில்லுங்கள் அங்கேயே!'' — ராணியின் விழிகளிலும் சொற்களிலும் சீற்றம் கொந்தளித்தது. அடுத்தகணம், அவர்கள் அண்டமே அதிரும் வண்ணம் அட்டகாச நகைப்பை விடுத்தனர்.

''மகாராணி தேவியாரே! நாங்கள் யார் என்பதைக் கூறத் தேவையில்லை. ஆனால் நீங்கள் எங்கள் வசமுள்ள ஒரு பெண் என்பதை அறிவுறுத்துகிறோம். உங்களது ஆணைகளைச் சிரமேற்கொண்டு நடத்த இங்கே சோழப் படையைச் சேர்ந்த வீரசிகாமணிகள் யாருமில்லை என்பதையும் உணருங்கள்!'' இவ்வாறாக ஒரு முரடன் மிகுந்த எக்களிப்புடன் கூறினான்.

''வீரர்களே, மெத்த மகிழ்ச்சி! இச் சோழ வேந்தரின் பத்தினியைக் கைது செய்ய நீங்கள் சிரமமடைய வேண்டாம். இதோ நானே காலதேவனுக்குக் கைதியாகி விடுகிறேன். இக்கைதிச் சடலத்துக்கு உங்கள் அபிப்பிராயப்படி தண்டனை கொடுங்கள்!'' இவ்வாறு கூறிக் கொண்டே இடுப்புப் புறத்தைத் துழாவினாள் ராணி.

ஆனால் அடுத்த இமைப் பொழுதுக்குள்ளாக அவளது உடைவாளை மற்றொரு முரடன் தட்டிப் பறித்து விட்டான். ராணி வீறிட்டு அலறினாள். அவர்கள் கொக்கரித்தபடியே அவளை அநாயாசமாகத் தூக்கிக்கொண்டு அந்தப்புரத்தைக் கடந்து ஓடினர். அங்கே வெற்று வெளியில் நின்ற ரதத்தில் கிடத்தி விட்டு, அவர்கள் முன்னும் பின்னுமாக அமர்ந்து கொண்டனர். ரதத்தில் பூட்டப்பட்டிருந்த குதிரைகள் இரண்டும் காற்றாய்ப் பறந்து சென்றன.

நகரத்தின் எல்லையை விட்டு அநேக திருப்பங்கள் வழியாக வருகையில் அந்தி நேர இருள் கவிய ஆரம்பித்திருந்தது. அப்பொழுதுதான் எதிர்பாராத மற்றொரு அதிசயமும் நிகழ்ந்தது!


ஒரு குறுக்குப் பாதை வழியாக வந்து கொண்டிருந்த குதிரைப் படையொன்று திடீரென்று எதிர்ப்பட்டு இரதத்தை மறித்துக் கொண்டது. அவ்வேட்டுக் குதிரைகளிலும் இருந்த வீரர்களைக் கண்டதும் இவ்வீரர்கள் திக்பிரமை யடைந்து விட்டனர். ராணியின் முகத்தில் ஒரு மின்னல் பொழுதுக்குள்ளாக வியப்பும், வெட்கமும், மகிழ்ச்சியும் ஒன்றாகப் பிரதிபலித்தன. அப் படையின் முன்னணியில் இருவரையன் கம்பீரமாக வீற்றிருந்தான்!



அண்மையி லிருப்பவரிடமிருந்து

ஜாம்ஷெட்பூர், ரௌர்கேலா இவைகளுக்கு, இடையே நெருங்கிய தொடர்பு அவசியமே. எல்லா எஃகு தொழிற் சாலைகளுள் ரௌர்கேலாவில் ஸ்தாபிக்கப்பட்டு வருவது, இந்தியாவின் முதல் எஃகு நகரமாகிய ஜாம்ஷெட்பூருக்கு மிக அருகில் இருக்கிறது.

இவ்வித நெருங்கிய தொடர்பு, தொழில் அனுபவத்தையும், உயரிய கருத்துக்களையும் உபயோகமான முறையில் ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்ள வழி காட்டுகிறது.



இதுவும் அவசியமே. ஏனெனில் ஜாம்ஷெட்பூர் 50 வருட காலமாக எஃகு உற்பத்தி செய்து வருகிறது. ரௌர்கேலாவிற்காக எஞ்சினீர்களையும், தொழில் நிபுணர்களையும் பயில்வித்து உதவி புரிவதில் ஜாம்ஷெட்பூர் மிக சந்தோஷம் அடைகிறது. அப்படிப்பட்ட 150 பேர்கள் (வேலைக்குத் தேவையான முக்கிய அங்கத்தினர் முதல் தொழிலாளர் வரை) ஜாம்ஷெட்பூரில் இருக்கிறார்கள்.

ரௌர்கேலாவிற்கு நல்வாழ்த்துக்கள்

இவ்வித சிநேகத்தை பலப்படுத்தும் முறையில் ஜாம்ஷெட்பூரில் இருந்த பலரை ரௌர்கேலாவில் காணலாம். அவர்களுக்கும், அவர்களது சக தொழிலாளர்களுக்கும் ஜாம்ஷெட்பூரின் வாழ்த்துக்களும், அவசியம் உரித்தாகுக.

தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி லிமிடெட்.

அப்பொழுதுதான் அங்கு நடந்த சம்பவங்களின் மூலம் சோழராணியின் அறிவுக்கு ஓர் விஷயம் புலனாயிற்று. அவளைக் கடத்திக்கொண்டு வந்த வீரர்கள் நால்வரும் காடவர் படையைச் சேர்ந்தவர்கள்! திருவரையன் தன் சகாக்களைச் சமிக்ஞையுடன் நோக்கினான். அவர்கள் உருவிய வாட்களுடன் காடவ வீரர்களை நெருங்கினர். திருவரையன் சட்டென்று குதிரையிலிருந்து கீழே இறங்கி ரதத்திலேறி, குதிரைகளின் கடிவாளங்களைச் சுண்டினான். இரதம் பறந்தது!

இரதம் காட்டுப் பாதைகளின் வழியே சுற்றிச் சுற்றிச் சென்றது. முடிவாக, இரண்டு காத தூரத்துக்கப்பாலிருந்த பாசறைகளை வந்தடையும்பொழுது, நாலாபுறங்களிலும் பயங்கர இருள் பரவி விட்டது. அந்நேரம் வரையில் ஓரளவுக்கு நம்பிக்கையுடனிருந்த ராணியின் இதயத்துக்குத் திடீரென்று திகிலும், சஞ்சலமும் ஏற்பட்டுவிட்டன. அவள் பரிதாபமாகப் பார்த்தவாறே, ''திருவரையரே! என்னை எங்கே அழைத்து வந்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டாள் நாத் தழுதழுக்க.

''சோழ தேவி! உள்ளே வாருங்கள். பேசிக் கொள்ளலாம்'' என்று கூறிக் கொண்டே முன் சென்றான் திருவரையன். ராணி தயக்கத்துடன் பாசறையினுள் நுழைந்தாள்.

சிறிது நேரத்துக்குப் பின், உட்புறம் இருந்த சோழ ராணியிடமிருந்து, ''ஐயோ!'' என்ற மிரட்சிக் குரல் வெளியாயிற்று. அதன் காரணம், அங்கிருந்த திரைச் சீலைகளில் பாண்டியருக்கே உரியதான மீனச் சின்னங்கள் பொறிக்கப் பெற்றிருந்ததுதான்!

வீரன் இலேசான நகைப்புடன், ''சோழர் குலத் தேவிக்கு இவ்வளவு பயம் ஏன் ஏற்படவேண்டும்?'' என்றான். ''திருவரையா! நீ நயவஞ்சகமான நம்பிக்கைத் துரோகி; சோழ வீரனைப் போன்று நடித்துப் பேசிய நீ-பாண்டியர் படையைச் சேர்ந்தவனல்லவா?'' என்றாள் ராணி கடுமையான குரலில்.

''ராணி, பொறுங்கள்! தங்களது தற்போதையக் கருத்தின்படி, இவ்வேழைத் திருவரையன் பாண்டியர் படையைச் சேர்ந்தவன் மட்டிலுமில்லை; பொன்னி சூழ் நாட்டில் புலி ஆணைபோய் அகல, கன்னி சூழ்நாட்டுக்கயல் ஆணை கை வளர்த்த காவலனை அடியேனைச் சுந்தரபாண்டியன் எனக் கூறுவார்கள்!'' — இவ் வார்த்தைகளை விடுத்தவாறே, தன் முகத்தின் அடர்ந்த உரோமங்களை உருவியெடுத்தான் அவன்.

ராணி தீயை மிதித்தது போன்று துள்ளினாள்! ''அட பாபி! உனக்குமா இத்தகைய துராசைகள்? அரசில்லா அரண்மனையில் கள்வன் போல் புகுந்து அரச பெண்டிரைச் சூறையாடவா, அவ்வஞ்சக யோசனை கூறினாய்? கற்புக்கரசியான கண்ணகி சுட்டெரித்த உன் மதுரை மண்டலத்தை மறந்து விட்டாயா? உண்மையில், உனது கருத்து பெண்ணாசையையே கொண்டதென்பதை இப்போது அறிகிறேன்.'' சோழ ராணியின் கண்டத்தை விட்டுப் பதற்றம் மிகுந்த வார்த்தைகள் சிதறின.

''சோழ ராணி! உங்கள் நிலை தவறி உளராதீர்கள். உங்கள்கண் முன்பு நிற்பவன் இப்போது ஏழைத் திருவரையன் அல்ல. தொண்டை மண்டலத்தையும், சேர சோழ மண்டலங்களையும் ஒருங்கு படுத்தி மீனக் கொடி நாட்டிய வீரன் சுந்தரபாண்டியன்! காடவர் படையைக் காற்றாய்ப் பறக்கடித்தவன். ஒய்சள வீர சோமேசுவரனின் முடித் தலையைக் கிள்ளியெறிந்தவன். சோழ ராணி! இப்போர் மண்ணாசையையும், பெண்ணாசையையும் கருத்தாகக் கொண்டு தொடுத்ததல்ல. உங்கள் — கணவரின் சோழ மன்னரின் மனச்சாட்சியற்ற மிருகச் செயலுக்கு அறிவு புகட்ட வேண்டியே எழுந்த மானப் போர். போரில் வீர சொர்க்கமெய்திய எங்கள் வீரபாண்டியரின் முடித்தலையை மனிதத் தன்மையின்றி, காலால் உதைத்த உங்கள் கணவரைப் பழி தீர்த்துக் கொள்ள எழுந்த போர். இதன்றியும், தாம் செய்த அடாத செயலை ஒரு தீரச் செயலாகப் பரப்பி, கல்வெட்டில் பொறித்து, வருங்காலச் சரித்திரத்தில்



பாண்டியருக்கு மாறாத இழுக்கை வைக்க முற்பட்டார் உங்கள் வேந்தர். நல்ல பாடம் கற்பித்து விட்டேன்! பதினைந்து தினங்களே நடந்த திரிபுராந்தகப் போரில் புறமுதுகிட்டோடிய சோழரைப் புள்ளினத்தைப் போல் கவ்விப் பிடித்து வந்தவன் இப்பாண்டியன்!'' இச்செய்திகளுடன் நெடுமூச்செறிந்தார் வேஷங் களைந்த சுந்தரபாண்டியர்.

சோழ ராணியின் விழிநீர் அருவியாகப் பெருக்கெடுத்து வழிந்தது. அவள், கூப்பிய கரத்துடன், ''மன்னவா! போரில் ஒரு முறை வெற்றியும், மறுமுறை தோல்வியும் பெறுவது அரசர்களுக்கு இயல்பு. ஆனால், தோல்வி அடைந்த நாட்டின் பெண்களுக்குக் களங்கம் ஏற்படுத்தும் செயலை மட்டிலும் விரும்பாதீர். மதிப்பும், மானமும் இழந்த இக்கைதியான சோழராணியின் உயிரைப் போக்கத் தண்டனையிடுங்கள். அல்லது, நானே மாய்ந்துவிட அனுமதி அளியுங்கள். இதுதான் நான் தங்களிடம் கோரும் வேண்டுகோள்'' என்றாள்.

சுந்தரபாண்டியர் 'கடகட' வென்று நகைத்தார்! ''சோழ ராணி! நீங்கள் இப்போது பாண்டியனின் கைதி! கைதிக்கு வாழ்வையோ தண்டனையையோ நிர்ணயிப்பது வெற்றிவேந்தனின் ஏக உரிமை. ஆகவே...'' வார்த்தையை முடிக்காமல் தொடர்ந்து நகைத்தார் சுந்தரபாண்டியர்.

''பாண்டியரே! உமது வஞ்சக நோக்கம் புரிகிறது! வேண்டாம், மனிதத் தன்மையிழந்து மிருகமாகாதீர்கள்!'' அவளது திங்குரல் தடுமாற்றத்துடன் வெளியாயிற்று.

''ராணி! இப்பாண்டியனின் உள்ளத்தில் எக்காலத்தும் மிருக இச்சையிருந்ததில்லை. ஆனால், கைதியைப் பரிசுப் பொருளாக வழங்கும் உரிமையின் வேகமிருக்கிறது! அவ்வேகமும் இப்போது தணிந்து விடும்.''

''என்ன? என்ன? பகையரசனின் பத்தினியைப் பறித்து வந்து பரிசுப் பொருளாக்கவா முற்படுகிறீர்கள்? அநீதி! அநீதி!'' என்றாள்.

அவளது சொற்களைக் காதில் வாங்காமலே மேடையின்மீதிருந்த பாண்டியர் தம்மருகே தொங்கிய வெண்கலமணியை முழக்கினார். இரு சேவகர்கள் பரபரப்பாக ஓடிவந்து பணிவுடன் நின்றனர். மன்னர் அவர்களிடம் இரகசியமான குரலில் ஆணை பிறப்பிக்கவும், அவர்கள் வெளியே சென்றனர்.

சிறிது நேரத்துக்குப் பின், பாசறைக்குள் உருவிய வாட்களுடன் நான்கு வீரர்கள் முன் வர, அவர்களிடையே ஒரு கைதியை யழைத்து வந்தனர் இருவர். எதேச்சையாகத் திரும்பிய சோழ குல மாதேவியின் முகத்தில் அளப்பரிய வியப்பும், வெட்கமும், சோர்வும் ஒன்றாகப் பளிச்சிட்டன. அக்கைதிக் கோலத்துடன் வந்திருந்தவர், சோழ வேந்தரான ராஜேந்திரர்!

சுந்தர பாண்டியர் தம் இருக்கை விட்டு எழுந்து அவர்களது சமீபம் வந்து நின்றார். ''சோழமாதேவி! உங்கள் குற்றச்சாட்டின்படி, பெண்ணாசை கொண்டு இப்பாண்டியன் திருவரையளுக மாறி உங்கள் அரண்மனைக்கு வரவில்லை. சோழகத்தைச் சூழ்ந்து நின்ற காடவர் படையைக் குலைப்பதற்காக உருவெடுத்தவன் இப் பாண்டியத் திருவரையன்! உண்மையில், படைவீரர்கள் கொண்டிருந்த மிருக வெறியினின்றும் சோழ ராணியின் கற்பைக் காக்கவே வந்திருந்தேன். தங்கள் பிடிவாத நிலையால், காடவ வெறியர்களின் கைகளுக்கு இலக்கானீர்கள். தெய்வச்செயலாக உங்களைக் காக்கும் வாய்ப்பு கிடைத்தமைக்குப் பெருமகிழ்வு கொண்டேன். இதன் காரணம்-கற்புத் தெய்வமான கண்ணகிக்குக் கோயிலெடுக்கும் மரபில் உதித்தவன் இப்பாண்டியன்!—

''சோழ ராணி! தோல்வி நாட்டின் அரசியும், கைதியின் நிலையிலுள்ள பெண்ணுமான உம்மை, இதோ—எனது கைதியாக நிற்கும் சோழ வேந்தருக்குப் பரிசுப்பொருளாக அளித்துவிட்டேன்!''

இவ்வாறாகப் பெருமிதத்துடன் கூறிக்கொண்டே, பெருநகை புரிந்தார் பாண்டிய வேந்தர். பின்னர், சோழ வேந்தரின் புறமாகத் திரும்பி, ''ராஜேந்திரரே! தோல்வி யுற்றதை மறந்துவிடும்! மணிமுடி தரித்த மன்னனாக இருந்தாலும், மனிதனாக இருந்தாலும், மனிதன் மனிதனுக்குச் செய்யக் கடமைப்பட்ட இறுதி மரியாதையை உம் அறிவுக்குப் புகட்டவே இவ் வீராவேசப் போரைத் துவக்கினேன். பல முனைகளில் வெற்றி அடைந்தபின், பழி வாங்கும் எனது நோக்கமே மாறிவிட்டது. பகைமையுணர்ச்சிகள் யாவும் தீர்ந்துவிட்டன! உமக்கு அளிக்கப்பட்டுள்ள பரிசுப் பொருளுடன் நீர் உமது அரண்மனை சேரலாம். எனது ரதங்களும் பாதுகாப்புகளும் உங்களுக்காக வெளிப்புறத்தில் தயாராக இருக்கின்றன'' என்றார் கனிவு மிகுந்த குரலில்.

சோழவேந்தர் தலைநிமிர்ந்து நின்றார். சுந்தரபாண்டியரின் கரங்கள் ராஜேந்திரரின் உடலை நட்புரிமையுடன் தழுவிக்கொண்டன. பாசறைக் காவலர்கள் முரசடித்து வெற்றிச் சங்கம் ஒலித்தனர்!


ஆகஸ்ட் 23ல் முதல்
சென்னை மற்றும் தமிழ் நாடு முழுவதும்
டைரக்ஷன் Ch. நாராயணமூர்த்தி
VRV புரொடக்ஷன்ஸ்
பத்தினித் தெய்வம்
தயாரிப்பாளர் W.S.V. நாயுடு B.A. B.COM (HONS)
உலக உரிமையாளர்கள்: கோல்டன் பிலிம்ஸ் [பிரைவேட்] லிட், சென்னை-17.
[சிலோன் தவிர]
BALU BROS.
BEE BEES

குமரி முதல்

1. கேரள நாட்டினிலே

நமது அகில இந்திய சுற்றுப் பிரயாணத்தின் முதல் கட்டம் இதோ ஆரம்பமாகிறது. சென்னையிலிருந்து திருவனந்தபுரத்துக்கு வந்து விட்டோம். ரயிலடியில் நம்மை வரவேற்கத் திட்ட நிர்வாக அதிகாரிகள் வந்திருக்கின்றனர். அவர்கள் நமக்கு ''சி. பி. சத்திரம்'' என்று அழைக்கப்படும் விடுதியில் தங்கியிருக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். திருவாங்கூர் ராஜ்யத்தில் திவானகப் பதவி வகித்த திரு சி. பி. ராமசாமி அய்யரின் நினைவுச் சின்னமாக, அவருடைய நண்பர்களும், அவரைப் போற்றுகிறவர்களுமாகச் சேர்ந்து, நன்கொடை வசூலித்து இந்தச் சத்திரத்தை நன்றாகக் கட்டி யிருக்கிறார்கள். சத்திரத்துக்குள் நுழைந்தவுடன் திடுக்கிடச் செய்த ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்! இந்த ''சி. பி. சத்திர''த்தின் முன்புறம் ஒரு சிறிய மண்டபம் இருக்கிறது. அதனுள்ளே வைக்கப்பட்டிருந்த சி. பி. அவர்களின் சிலை அகற்றப்பட்டிருக்கிறது!

இந்தச் சிலையை அகற்றியவர்களே, இந்தச் சத்திரத்துக்கு வைக்கப்பட் டிருக்கும் அவருடைய 'பெய'ரையுங்கூட மாற்றி விட்டாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை!

*** *** ***

மறுநாள் திருவனந்தபுரத்துக்குப் பக்கத்திலுள்ள சில சமுதாயநலத் திட்ட பிளாக்குகளில் நடைபெற்றுள்ள — நடைபெற்று வருகின்ற வேலைகளைப் பார்த்துவிட்டு அகஸ்தீசுவரம் பிளாக்குக்கு வந்தேன்.

இந்த பிளாக்கின் நிர்வாகத் தலைமை அலுவலகம் சுசீந்திரத்தில் இருக்கிறது. இந்தப் பகுதி தற்போது தமிழ் நாட்டுடன் சேர்ந்திருந்தாலும், இப்பகுதியில் நடைபெற்றுள்ள பல நல்ல வேலைகளுக்கும் கேரள ராஜ்ய சர்க்கார் தான் காரணமாகும். ''நீலத்திரைக் கடலிலே நின்று நித்தம் தவம் செய்யும்'' குமரி எல்லையிலே இருக்கின்ற இந்த நெய்தல் நிலப் பரப்பில் வாழுகின்ற மக்கள் மத்தியில் சமுதாய நலத் திட்டச் செய்தி வேரூன்றி விட்டது என்றே சொல்ல வேண்டும்.

தமிழ்நாட்டின் தலைநகரத்திலிருந்து மிகவும் தூரத்தில் உள்ள இப் பகுதி மக்கள், தங்கள் சர்க்கார் தங்களுடைய தேவைகளை உடனுக்குடன் துரிதமாகக் கவனிக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். படித்தவர் நிறைந்த இப் பகுதியினர், தமிழ்நாட்டுச் சர்க்கார் அதிகாரிகளின் வீண் தொல்லைதரும் 'அதிகாரவர்க்க'க் கெடுபிடியை அவ்வளவாக ரசிக்கவில்லை என்பதைத் தெரிந்துகொள்ள முடிந்தது!

இந்தப் பகுதியில் பல கிராமங்களுக்குச் செல்லும் வாய்ப்பு கிடைத்தது. சொல்லத் தாமுள்ள சின்னச் சின்ன வேலைகள் பல இங்கே நடைபெற்றிருக்கின்றன!

இங்கு இன்னும் பார்க்கவேண்டியகாட்சிகள் சுசீந்திரம்-திருவனந்தபுரம் கோவில்கள்தாம். இவை தமிழ் நாட்டின் ஆலயங்களைப் போல அமைந்துள்ளன.

திருவனந்தபுரத்தில் உள்ள பத்மநாபர் கோவிலிலுள்ள பத்மநாபரின் பிரும்மாண்டமான சயனக் காட்சி, சுசீந்திரம் கோவிலில் உள்ள ஹனுமார், ரிஷபம் முதலிய பிரமிக்க வைக்கும் சிற்பச் சிலைகள், இவைகளெல்லாம் நமது பண்பாட்டைப் பிரதிபலிக்கும் அற்புதச் சின்னங்கள். பார்த்துப் பார்த்து மகிழ வேண்டிய அருமையான காட்சிகள்.

*** *** ***

நேயர்களை இப்பொழுது என்னுடன் செரியன்கீழ் பிளாக்கில் நடைபெறும் சமுதாய நலத் திட்ட வேலைகளைப் பார்க்க அழைத்துச் செல்லப்போகிறேன். இங்கு அவ்வளவு அதிகமாக வேலைகள் நடைபெற்றிருப்பதாகச் சொல்வதற்கில்லை. ஆனாலும் சில நல்ல வேலைகள் நடைபெற்றுத்தான் இருக்கின்றன.

கேரள நாடு முழுவதிலும் நமது தமிழ் நாட்டுக் கிராமங்களைப் போன்ற கிராமங்களே இல்லை. இங்கும் அங்குமாக அழகிய தென்னந் தோப்புகளுக்கு மத்தியில் சின்னஞ் சிறு வீடுகள் தனித்தனியாக இருக்கின்றன.

பயம் ஏதுமின்றி வாழுகின்ற இந்த மக்களையும் இவர்களின் சமுதாய வாழ்வு முறைமை பற்றியும் நாம் முடிந்த மட்டிலும் தெரிந்து கொள்ள வேண்டும். இதோ! 'ஜீப்' கார் வந்து விட்டது! ஏறிக் கொள்ளுங்கள். வர்க்கலைக்குப் புறப்படுவோம்!



இமயம் வரை

வர்க்கலை, ஜனார்த்தனம் என்றும் அழைக்
கப்படுகிறது. இந்த பிளாக்கின் திட்ட வேலை
களைப் பற்றிப் பின்னால் சொல்லுகிறேன். இப்
பொழுது இந்த ஊரைப் பற்றியும் இங்குள்ள
மக்களைப் பற்றியும் தெரிந்து கொள்வோம்.

கடற்கரையோரத்தில் உள்ள இந்த ஊர்க்
கோவிலின் கோபுரம் அடியில் வட்ட வடிவ
மாகவும் மேலே போகப் போக முக்கோணத்
தின் கூரையொத்தும் இருக்கிறது. தமிழ்
நாட்டின் கிராமங்களில் உள்ள புன்செய் காடு
களில் — சாகுபடி இல்லாத காலத்தில் நிற்
கின்ற சோளத்தட்டைப் போர் மாதிரி இந்தக்
கோபுரம் இருக்கிறது. எவ்விதமான சிற்ப
வேலைப்பாடும் இங்கே இல்லை. ஆயினும்
ஜனார்த்தன மூர்த்தி மட்டும் அழகிய மேனி
யுடன் ஆழ்கடலை நோக்கி நிற்கிறார்!

கடல் பகுதியில் உள்ள பெரும்பாலோர்
கிறிஸ்துவ மதத்தைத் தழுவியவர்களாகவும்,
அதிகமாக மீனையே சாப்பிடுகிறவர்களாகவும்
இருக்கிறார்கள். மீனும் — மரவள்ளிக்
கிழங்குமே இவர்களின் முக்கியமான உணவுப்
பொருள்கள்.

இங்கு வாழும் பெரும்பாலான ஸ்திரீகள்
உழைக்கிறார்கள்; ஆண்கள் ''பரணம்''
பற்றிக் காரசாரமாக சதா சர்வகாலமும்,
டீக் கடைகளுக்கு முன்னால் — கூட்டமாக
அமர்ந்து விவாதம் செய்த வண்ண மிருக்கி
றார்கள்! ''பரணம்'' என்பதற்குத் தமிழில்
ஆட்சி என்று அர்த்தம்.

இங்கு வாழும் தமிழ் மக்கள் எல்லாம்
பல்லாண்டுகளுக்கு முன்பு குடியேறியவர்
கள். மொழி ஒன்றில் மட்டுமே இவர்கள்
பெரிதும் மாறி யிருப்பவர்க
ளாகத் தெரிகிறது.

இப்போது இந்த ராஜ்யத்தில் ''மக்கட்
தாய''மோ (மகனுக்குத்தான் சொத்துரிமை)
அல்லது ''மருமக்கத் தாய''மோ (மருமகனுக்
குத்தான் சொத்துரிமை) அதன் அதன் பழைய
கட்டுப்பாட்டின்படி இருப்பதாகச் சொல்லு
வதற்கில்லை!

இங்கு வாழுகின்ற யுவதிகளும், ஸ்திரீகளும்
புடவை கட்டிக் கொள்ள ஆரம்பித்திருக்
கிறார்கள். 'முண்டு' கட்டும் வழக்கம் மாற
ஆரம்பித்திருக்கிறது. அத்துடன் தாலி கட்
டும் வழக்கமும் புகுந்திருக்கிறது. முன்பெல்
லாம் மணமகன், மணமகளுக்குப் புதுப்
புடவை கொடுத்தவுடனே அவ் விருவரும்
தம்பதியாக ஆகி விடுவது வழக்கமா
யிருந்திருக்கிறது! கால வேகத்துடன் கூடிய
மாறுதல்கள் எங்கேயும் புகுமல்லவா?
இதைத்தான் ''பண்பாட்டின் ஊடுருவும்
தன்மை'' என்று அழைக்கிறார்கள் போலும்!

*** *** ***

வர்க்கலை கிராம மக்களின் பழக்க வழக்
கங்கள் இருக்கட்டும். வர்க்கலை பிளாக்கில்
நடைபெற்று வரும் பல வேலைகளைப் பார்ப்
போம். படாடோபம் சிறிது மில்லாமல்
அமைதியாக, ஆனால் உறுதியாகச் செய
லாற்றவல்ல ஒருவரின் தலைமையின் கீழ்
இங்கே, சமுதாய நலத் திட்ட
வேலைகளின் முன்னேற்றம் ஆரம்
பத் தசையில்தான் இருக்கிறது
என்று சொல்ல வேண்டும்!....

கொட்டாரக்கராவில் உள்ள
'எக்ஸ்டென்ஷன் சென்டர்'
குறிப்பிடத் தக்கதாகும். 'கிராம
சேவக்'குகளுக்குப் பயிற்சி யளிப்ப



தற்கு முழுமூச்சுடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் முதலிடம் என்று இந்தப் பயிற்சிப் பள்ளியைக் குறிப்பிடலாம். இந்தப் பள்ளியின் பிரின்சிபாலான ஸ்ரீ நாராயண நாயர் தமிழ் நாட்டில், பல வருஷங்கள் - பல ஜில்லாக்களில் விவசாய அதிகாரியாகப் பணியாற்றியவராவார். இந்தப் பள்ளியில் எவ்விதப் பயிற்சி எவரெவருக்கு அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்வோம்.

மனோரம்மியமான இடத்தில் அமைந்திருக்கும் அழகிய கட்டடத்தில்தான் இந்தப் பயிற்சிக்கூடம் அமைந்திருக்கிறது. இங்கே இந்த மலைச்சாரல் வள நாட்டிலே மனோரம்மியமான காட்சிகளுக்குப் பஞ்சமா? இந்த நாட்டுக்கு - கேரள நாட்டுக்குத் ''தேங்காய்களின் நாடு'' என்று அர்த்தம் கூறுகிறார்கள். இந்த அர்த்தம்கூட இதன் பூரணமான அழகை எடுத்துரைப்பதாக இருக்க வில்லை! இந்தக் கோமள நாட்டின் அழகை அப்படியே மிகத் தெளிவாக எடுத்துரைக்கச் சரியான வார்த்தைகள் புலப்படவில்லை!

கோமளம் என்ற பதத்தை நான் உபயோகப்படுத்தியதும், எனக்குக் கோவலம் என்ற ஒரே பெயரைக் கொண்ட இரண்டு இடங்கள் ஞாபகத்துக்கு வருகின்றன. இந்த ஊர்களைப் பற்றி முன்னமேயே உங்களுக்குக் கூறியிருக்க வேண்டும்.

அதனால் என்ன? இப்பொழுது தெரிந்து கொண்டால் போகிறது. 'கோமளம்' என்ற வார்த்தையே 'கோவலம்' என்று திரிந்து போயிருக்க வேண்டும்!

ஒரு 'கோவலம்' தமிழ் நாட்டுடன் தற்போது இணைந்து விட்ட கன்னியாகுமரி ஜில்லாவில் உள்ளது; ஏன், கன்னியாகுமரி ஊரை அடுத்து-கடற்கரையிலேயே உள்ளது. மற்றொரு ஊரான 'கோவலம்' திருவனந்தபுரத்துக்கு அருகில் உள்ளது.

இந்தக் கோவலத்தைப் பற்றி எண்ணும் போது கன்னியாகுமரியைப் பற்றிய நினைவு வருகிறது. அழியாத வல்லமைக்கும் அன்புக்கும் சாகாவரம்அருளும் பராசக்தியாள்-தனது சகல சக்திகளையும் மறைத்துக் கொண்டு, பேரெழிலை மட்டுமே பூரணமாய் அள்ளி வீசுகின்ற அற்புத மெல்லியளாய், கருணைப் பொலிவுடன் நிமிர்ந்து கடலை நோக்கிய வண்ணம் நிற்கின்ற காட்சியைத்தான் என்னென்று உரைப்பது!

''இந்தியாவின் எல்லை இங்கேதான் முடிகிறது'' என்று பூகோளவியல் நிபுணர்கள் எழுதியதை ஒப்புக் கொள்ளமுடியவில்லை! பருவம் பருவமாய், பல பல வண்ணமாய், பேரொளி வீசியும்-பேரொலி முழக்கியும், இயற்கைவெளியினில் தாண்டவமாடும் கூத்தனின் நாடகம்-பூமண்டல நாடகம் - இங்கே தான் ஆரம்பமாகிறது. பொங்கித் ததும்பிப் பேரிரைச்சலுடன் எழும்புகின்ற அலைகடல், அணைத்துக் கொஞ்சும் மணல் பரப்பில் தீட்டுகின்ற எண்ணற்ற சித்திர வேலைப்பாடுகளைச் செருப்புக் காலால் அழித்துக் கொண்டே நடப்பவர்களைக் கண்டாலே மனத்தில் கோபம் பொங்கி யெழும்.

கன்னியாகுமரியை அடுத்து இருக்கும் கோவலம் இன்னும் சிறிது காலத்தில் கடல்

மணலால் மூடப்பட்டு விடுமோ என்ற துக்ககரமான நிலையில் இருக்கிறது. இங்கே உள்ள பிரும்மாண்டமான மாதாகோவில் கட்டடத்தையே பயமுறுத்திக் கொண்டிருக்கும் இந்த மணல் மூடு அபாயம், சின்னஞ்சிறு குடிசைகளை-ஏழை- எளியவர்களாய் வாழுகின்ற செம்படவர்களின் குடிசைகளை விட்டுவிடுமா?

இந்த அபாயத்தின் வேகத்தை நமது சர்க்கார் ஏனோ இன்னமும் உணராமல் இருக்கிறார்கள். இதற்கு முன்பிருந்த திருவாங்கூர் கொச்சி சர்க்கார்தான் உணர்ந்தார்களா, இல்லை! எத்தனையோ ஊர்களைக் கடல் கொண்டு விட்டது என்று படிக்கிறோம். தமிழ் நாட்டின் பெரும் பகுதிகூடக் கடலில் மூழ்கிவிட்டது என்றுதானே நமது இலக்கியங்கள் கூறுகின்றன! கடலுக்குப் பதிலாக அக்கடலின் மணல் இந்தக் கோவலம் என்ற சிற்றூரைக் கொண்டு விடுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. இந்தப் பரம ஏழைகளின் குரல்தான் நமது ராஜ்ய மத்திய சர்க்கார்களுக்குக் கேட்கவில்லையோ! இவர்கள் விம்மி அழவில்லை! ஆனால் உள்ளம் வெதும்பி வெதும்பிக் கொதித்து நிற்கிறார்கள் என்பதை இவர்களின் கோப முகங்களிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. கன்னியாகுமரியை அழகுபடுத்த எத்தனையோ ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

மகாத்மா காந்தியின் அஸ்தியின் ஒரு பகுதி இந்தக் கடலில் கரைக்கப்பட்டது என்பது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். அந்த இடத்தில் ஒரு ஞாபகார்த்த மண்டபம் எழுப்பியிருக்கிறார்கள்! சில லட்சம் ரூபாய்கள் இதற்காகச் செலவிடப்பட்டிருக்கின்றன! மண்டபம் கடலோரத்தில் காந்தியடிகளின் சத்திய வாழ்வினை எடுத்துக்காட்டுவதுபோலக் கட்டப்பட்டிருக்கிறது என்பதில் ஐயமில்லை. இந்த மண்டபத்தைப் பார்க்கும் எவர் மனத்திலும் அடிகளாரின் தியாகமே உணர்ச்சி ததும்பத் தோன்றும். ஆயினும், இந்தக் கருணைமூர்த்தியின், ஏழை பங்காளனின் நினைவுச் சின்னத்துக்குக் கொஞ்ச தூரத்திலேதான், தினந்தினம் கொஞ்சங் கொஞ்சமாக மணல் மூடு அபாயத்துக்கு வீடு-வாசல்களை இழந்து கொண்டிருக்கும் பரம ஏழைகளின் ஊராகிய கோவலம் இருக்கிறது! . . . இயற்கையின் வேகத்தைத் தடுப்பதில் பூரண வெற்றி ஏற்பட்டு விடாது என்றாலும், இந்தக் கிராமத்தை மணல் மூடு அபாயத்திலிருந்து காப்பாற்றத் தன்னால் முடிந்த ஏற்பாடுகளையெல்லாம் நிர்வாகம் அவசரமாகச் செய்ய வேண்டும்; தங்களைக் காப்பாற்ற எவருமே இல்லையென்று இந்தக் கிராமத்து மக்கள் நினைத்துவிடக் கூடாது!

மற்றொரு கோவலம்-அதாவது திருவனந்தபுரத்தை அடுத்து இருக்கும் கோவலம் மேலே கூறப்பட்டது போன்ற அபாயத்துக்கு ஆளாகவில்லை! இந்த நாட்டின் அகலம் கொஞ்சம்; நீளம் அதிகம். கிழக்கே மலைகள்; பிறகு மலைச் சாரல்; ஓரத்தில் அராபியக் கடற்கரை. இந்தக் கடல் ஆழக்கடலோடு, பயங்கரமாய் அலை வீசும் கடலுங்கூட. இந்தக் கடலின் தண்ணீர் சிறிய பரப்பில் ஊடுருவி உட்புகுந்து அலைகளின்றி— குளத்துத் தண்ணீர் போல அமைதியாக நிற்கிறது. இந்தக் கோவலம்

என்ற சிறிய ஊரில்! இதன் பின்னணியில்-படிப்படியாக உயர்ந்திருக்கும் மலைச் சாரல் நிலக் காட்சியும்—இந்த அமைதியான கடல் நீர் நிலையும் அப்பப்பா!... எவ்வளவு கோமளமாக இருக்கின்றன தெரியுமா!

இந்த அழகுக் காட்சி இருக்கட்டும். நாம் கொட்டாரக்கரை விஸ்தரிப்புத் திட்ட முகாமைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

கிராம சேவக்குகள், கிராம சேவிகைகள் முதலிய கிராம அடிப்படை ஊழியர்களுக்கு இந்த முகாமில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி யென்றால் வெறும் தத்துவப் படிப்புப் பயிற்சிமட்டுமல்ல. சரீர உழைப்பின் அடிப்படையில் தரப்படுகின்ற பயிற்சிக்குத்தான் இங்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. விவசாயம், கூட்டுறவு, கட்டட நிர்மாணம், கால் நடை அபிவிருத்தி, பொது சுகாதாரம் முதலிய முறைகளில் எல்லாம் கிராம சேவக்குகளுக்கு ஞானம் இருக்க வேண்டும் என்பதுதான் இம்மாதிரி முகாங்களின் நோக்கமாகும். கிராம சேவிகைகளுக்குக் குடும்பப் பொருளாதாரம் பற்றிய தத்துவ போதனைகளும், செயல்முறைப் பயிற்சிகளும் தரப்படுகின்றன. சமுதாயத்தின் அடிப்படை 'யூனிட்' அல்லது அளவு வீடு தான். இந்த வீட்டிலிருந்துதான், இங்கே தியாகங்கள் பல புரிவதன் மூலம், தார்மீகச் செல்வாக்கைப் பெறுகின்ற ஸ்திரீகளின் தாய்மைப் பண்பிலிருந்துதான், ஒரு நாட்டின் கலாசாரமே கம்பீரமான சக்தியாகப் பரிணமிக்கிறது என்பதை எவர் தாம் மறுக்க முடியும்? இந்த வீட்டில் அமைதியோ, ஆனந்தமோ, திருப்தியோ இல்லா விட்டால் பூராச் சமுதாயத்திலும் குழப்பமே ஏற்படும்! இப்படிப்பட்ட வீட்டின் குடும்பப் பொருளாதாரத்தைச் சகல வழிகளிலும் பலப்படுத்துவதற்குத் தான் இந்தக் கிராம சேவிகைகளுக்குப் பயிற்சி தரப்படுகிறது.

சமுதாயக் கல்வி அமைப்பாளர்கள், விஸ்தரிப்பு அதிகாரிகள், பிளாக் அபிவிருத்தி அதிகாரிகள், கல்லூரி மாணவர்கள், டெபுடி கலெக்டர்கள் இவர்களுக்குங்கூட இங்கே சேவாமனப்பான்மை பெறவும், 'சரீர உழைப்பிலேதான் ஒரு நாட்டின் உண்மையான முன்னேற்றத்துக்கான ஜீவ சக்தி பிறக்கிறது' என்ற அழியாத உண்மையை அறிந்து கொள்வதற்காகவும் குறுகிய காலப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

*** *** ***

பல குறுநில மன்னர்களை வென்று, ஒன்று பட்ட திருவாங்கூர் சமஸ்தானத்தை உருவாக்கியவர் மார்த்தாண்டவர்மன் எனப்படுகின்றவர். இவர் காலத்தில் பத்மநாபபுரம் என்ற ஊரே இந் நாட்டின் தலைநகரமாக இருந்திருக்கிறது. இப்போது இந்த ஊர் தமிழ் நாட்டுடன் சேர்க்கப்பட்டு விட்டது. இங்கே இருக்கின்ற பழைய அரண்மனை, மத்திய சர்க்காரின் புராதன சின்னங்களைப் பாதுகாக்கும் இலாகாவினரால் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இந்த அரண்மனை பார்க்கப்பட வேண்டிய இடம். இங்கே உள்ள ஓவியங்கள்-கட்டில்கள்-சிற்பங்கள்-படுக்கை அறைகள்-நடன மண்டபம்—இவை யெல்லாம் கீர்த்தி வாய்ந்த ராஜ பரம்பரையின் கலைப் பண்பினை நமக்கு நேரில் சொல்லுவது போன்றே இருக்கின்றன! எட்டு வீட்டுப் பிள்ளைமார்களின் பல கொலைகாரச் சதிகளை முறியடித்த மார்த்தாண்டவர்மனின் வீரதீரச் செயல்களையும்—அவருடைய தெய்வபக்தியையும் கேரள நாட்டு மக்கள் இன்று கூட மிகப் பெருமையாகப் பேசுகிறார்கள். அறுபத்து நான்கு மூலிகை மரங்களால் கலையழகுடன் செய்யப்பட்ட சயனக் கட்டில் அற்புதமானதொரு காட்சிப் பொருளாக இங்கே திகழ்கிறது.

பிரிட்டிஷாரால் இந்தப் பாரத பூமியில் முதலாவதாகக் கட்டப்பட்ட கோட்டை அஞ்சங்கோ என்ற கடலோர ஊரில் இருக்கிறது. இந்தக் கோட்டையின் உட்புறத்தில் எவ்விதக் கட்டடமும் இப்போது இல்லை. நாற்புறங்களிலும் எழுப்பப்பட்ட மதில் சுவர்களே இப்போது மிச்சமாய் நிற்கின்றன!

இந்த நாட்டில், தென்னை மரங்கள், பலா மரங்கள், மாமரங்கள், மரவள்ளிக் கிழங்கு, முந்திரிக் காடுகள், மிளகுத் தோட்டங்கள், ரப்பர் மரங்கள், தேயிலைத் தோட்டங்கள் பிரதானமாய் நிறைந்திருக்கின்றன.

வருஷத்தில் நூறு அங்குல மழை இப்பகுதியில் பெய்கிறது. எனினும் வருஷத்தில் நாலு மாதம் மக்கள் குடிதண்ணீர்கூட இல்லாமல் அவதிப்படுகிறார்கள்!

இந்த ராஜ்யத்தில் கம்யூனிஸ்டுகள் மந்திரி சபை அமைத்திருக்கிறார்கள். கம்யூனிஸ்டுகள் உலகத்திலேயே உலகசரித்திரத்திலேயே முதன் முதலாக வோட்டுப் பெட்டி மூலம் வெற்றி பெற்று, பார்லிமெண்டரி ஜனநாயக அடிப்படையில் மந்திரி சபை அமைத்து ஆட்சி புரிந்து வருகிறார்கள்!

இங்கே ஏற்பட்டிருக்கும் கம்யூனிஸ்டு 'பரண'த்தைப் பற்றித்தான் ஊரெல்லாம் ஒரே பேச்சு! சிலர் இந்த ஆட்சியை வரவேற்கிறார்கள். சிலர் அவர்களின் ஆட்சி தங்கள் நாட்டுக்கு ஏற்படவிருக்கும் அபாயத்தின் அறிகுறி என்றே வர்ணிக்கிறார்கள்.

இந்த ஆட்சியினர் புரியவிருக்கும் சாதனைகளை யெல்லாம் பொறுத்தே இவர்களின் வெற்றியிருக்கிறது. பலாத்கார வழியின்றி, இம்மாதிரியான வழிகளில்கூட கம்யூனிஸ்டு 'பரணம்' ஏற்படக்கூடும் என்ற அரசியல் உண்மையை உலகுக்கே எடுத்துக் காட்டிய 'பெருமை' கேரள நாட்டு மக்களுக்கே சாரும்! இதனால்தான் உலகத்தின் கவனம், முதலாளித்துவ-ஜனநாயக நாடுகளின் கவனம், கம்யூனிஸ-சர்வாதிகார நாடுகளின் கவனம் கேரள நாட்டின் பக்கம் திரும்பி யிருக்கிறது.

வெற்றிப் பெருமிதத்தில் மூழ்கி யிருப்பவர்களுக்கும் சரி, கர்வத்தால்-ஊழல் போக்கால்-அசிரத்தையால்-மக்கள் தொடர்பை மறந்த தன் வினைவால் தோற்றுப்போன தேசிய சக்திகளுக்கும் சரி, கேரள நாட்டின் மக்கள் அளித்த தீர்ப்பை ஒரு அதிர்ச்சி வைத்தியத்துக்கே ஒப்பிட வேண்டும். (தொடரும்)

Look Lovelier
Than Ever
Before

USE

PAN-STIK*


MAKE-UP

MAX FACTOR

HOLLYWOOD

Creamy make-up in convenient stick form

Keeps its petal - fresh look of perfection for hours.



Available at all Leading Cosmetic and General Stores

* PAN-STIK (trademark) means Max Factor Hollywood cream-type make-up



RHONDA FLEMING
Co-starring in PARAMOUNT'S
"GUNFIGHT AT THE O.K. CORRAL"

SOLE AGENTS IN INDIA: ORIENT COSMETICS PRIVATE LTD., MADRAS, BOMBAY, CALCUTTA.

Aiyars: PS 6

கந்தனுக்குக் கல்யாணம்!

வேலை இல்லாக் கந்தனுக்கு
விமரிசையாய்க் கல்யாணம்!

பந்தல் பெரிய பந்தல்
பாரில் சிறந்த பந்தல்
அந்தம் மிகுந்த பந்தல்
ஆஹா! அவரைப் பந்தல்!


கொட்டு மேளம் உண்டு
கோயிலுக்குப் போனால்.
பட்டுச் சேலை உண்டு
பஜாருக்குப் போனால்.

வாய்க்கினிய விருந்து
சத்திரத்தில் உண்டு.
பாக்கு வெற்றிலை நிறைய
பக்கத்துக் கடையில் உண்டு.

பாட்டு, கூத்து, நடனம்
பட்டணம் போனால் உண்டு.
போட்டு இருக்கப் பாபோ
போனவர் வேட்டி துண்டு!

வேலை இல்லாக் கந்தனுக்கு
விமரிசையாய்க் கல்யாணம்
நாலுநாளும் இவ்விதம்
நாடு போற்ற நடந்ததாம்!

– சசிதேவன்







மணல் நிறைந்த பாலை வனத்தைக் கடந்து விட்ட மகிழ்ச்சியால் காசிமின் உடலிலே புதிய தெம்பு பிறந்தது.

இனி மங்குவின் மந்திரமாளிகையான கற்கோட்டையை அடைய வேண்டியது தான். கொஞ்ச நேரத்தையும் வீணாக்காமல் வேகமாக ஓடலானான்.





இரவெல்லாம் பிரயாணம் செய்து அதி காலையில் ஒரு பாறை மீது வந்து நின்று பார்த்த போது தூரத்திலே மங்குவின் கற்கோட்டை கம்பீரமாகக் காட்சியளித்தது.


கோட்டை வாயிலை நெருங்கிய போது, 'டேய், பொடியா! இங்கே எங்கே வந்தாய்? இது மந்திரவாதி மங்குவின் கோட்டை என்பது தெரியாதா? அந்நியர்களை உள்ளே அனு





மதிப்பதில்லை' என்று தடுத்து நிறுத்தினர்கள் காவலர்கள். 'ஐயா! நீர் சேனாபதியாரோ! உமக்கு ஆயிரம் சலாம்! அரண்மனை சமையலறையில் ஏதாவது வேலை கிடைக்குமா என்று பார்க்க

வந்தேன். என்னை உள்ளே அனுமதியுங்கள்' என்றான் காசிம். காவல்காரனைப் பார்த்துச் சேனாபதியாரோ என்றதும் அவன் நெளிந்தான். 'அண்ணே! பய உள்ளேயே சாதியாக்கிட்



டான்" என்று கட கட வென்று சிரித்தான். சேனாபதி என்று காசிமால் அழைக்கப்பட்டவனுக்குப் பொறுமை தாங்கவில்லை. சிரிப்புடன் மீசையைத் தடவிக் கொண்டான். 'அண்ணே! வையர் மிக அதிகமா கிடைத்திருக்கிறது. பேரினை உன்னே அனுப்பப்போம். மந்திரவாதி அப்படிப் உணவு தேடி பார்த்துக் கொடுக்கும் வேலை வாய் கிடைக்கிறது. முன்பு கிடைத்தவன் விதவிதமாக உணவைச் சாப்பிட்டதால் மாணப் பசிக்காமல் இருக்கிறேன். பசித்துக்கொண்டிருக்கும் பயர்" என்றான்.




"அப்படியானால் நான் உடனே ஓடிப் போய் அந்த வேலையை ஏற்றுக் கொள்ளுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே பாபாப் புடன் முன்னால் ஓடி வந்தான்.



"அந்த மனைந்த வேலைக்கு இந்த லை அவனுடன் சென்ற வந்திருக்கிறேன் இந்தப் பயல்" என்று காவல்காரனுக்குக் காசிமின் துணிச்சலில் சந்தேகம் ஏற்பட்டது.




காசிமின் சட்டையைப் பிடித்து இழுத்து உலுக்கி, "டேய், பயலே! நீ எங்கிருந்து வருகிறாய்? உண்மையைச் சொல்லி விடு. யாரைத் தேடிவந்திருக்கிறாய்?" என்று கேட்-



டான். காசிம் நடுநடுங்கி விட்டான். பதில் சொல்ல முடியாமல் திணறினான். பயத்தினால் வார்த்தைகள் வெளி வர மறுத்தன. மென்று விழுங்கினான். (தொடரும்)

குருவியின் உதவி!



பூதக் கண்ணாடியை நாம் அட்டையிலேயே சித்திரித்துச் செய்யலாம். மூன்று அங்குல டயாமீட்டர் இருக்கும்படி ஒரு வட்டத்தை அட்டையில் ஒரு வெட்டிக் கொண்டு, அதற்குப் பிடியும் சேர்த்து வெட்டிக் கொள்ளுங்கள். வட்டத்தின் ஒரு புறம் கறுப்புக் காகிதத்தை ஒட்டிக் கொண்டு நடுவில் ஒரு கனத்த குண்டூசியால் துவாரம் செய்து கொள்ளுங்கள். பிறகு ஒரு கண்ணை மூடிக் கொண்டு அந்தத் துவாரம் வழியாகப் புஸ்தகத்தில் இருக்கும் எழுத்தைப் பார்த்தால் எழுத்தெல்லாம் பெரிதாகத் தெரியும்!



கணக்கு

அப்பாவுக்கு முப்பது வயது; பையனுக்குப் பத்து வயது. ஆனால் இன்னும் எத்தனை வருஷ காலத்தில், தகப்பனுடைய வயது, பையனுடைய வயதைக் காட்டிலும் இரண்டு மடங்கு இருக்கும்? கண்டு பிடியுங்கள், பார்க்கலாம்.

விடை:

இன்னும் பத்து வருஷங்களுக்குப் பிறகு, தகப்பனுக்கு வயது நாற்பது; பையனுக்கு வயது இருபது.





அவனைப் பொறுத்த மட்டிலும்
கவலையே வேண்டாம்
ஏனெனில் அவன்

லாக்டோஜனால்

வளருகிறான்.

LG/G/18A

ஸிலோன் ரேடியோ நிலையத்திலிருந்து
லாக்டோஜன் ஹிந்தி ப்ரோக்ராமில்
பீனு ராயின் சொற்பொழிவை கேளுங்கள்
பிரதி ஞாயிற்றுக் கிழமை
மாலை 7-45 முதல் 8 வரை
பிரதி வியாழக் கிழமை
மாலை 8-30 முதல் 8-45 வரை
41 மீட்டர் பாண்ட்

18

X

விவரங்களுக்கு எழுதுங்கள்:

நெஸ்ல்ஸ் ப்ராடக்ட்ஸ (இந்தியா) லிமிடெட்

தபால் பெட்டி	தபால் பெட்டி	தபால் பெட்டி
நெ. 396	நெ. 315	நெ. 160
கல்கத்தா	பம்பாய்	மதராஸ்



21. கலாவின் கவலை

ஒரு நாள் இரவு. மால்கோஷும் கலாவும் சிறையில் படுத்திருந்தார்கள். அன்று இரவு மால்கோஷுக்குத் தூக்கம் வரவில்லை. படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான். அன்று வேலை செய்த அசதியினால் கலா அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். அப்பொழுது மால்கோஷ் மனத்தில் பல எண்ணங்கள் தோன்றின. 'ஐயோ, பாவம்! எப்படி இருந்த கலாவின் உடம்பு இப்படி இளைத்து விட்டது! எப்படியாவது கலாவையும் அழைத்துக் கொண்டு வெளியே தப்பிப் போக வேண்டியதுதான். ஆனால் எப்படித் தப்பிப் போவது? வாசற்பக்கம் சிறையின் கதவு நன்றாகத் தாளிடப்பட்டுப் பூட்டப்பட்டிருக்கிறது. இரவு பகலாக இரண்டு காவற்காரர்கள் இருக்கிறார்கள். சிறையின் மற்ற மூன்று பக்கங்களிலும் முதலைகள் நிறைய உள்ள தண்ணீர்த் தேக்கம். அப்படி இருக்கும் பொழுது கலா எப்படி என்னுடன் தப்பி வர முடியும்?'

"கலா, கலா!" என்று இரண்டு முறை கூப்பிட்டான். அப்படிக் கூப்பிட்டது அவள் தூங்குகிறாளா, விழித்துக் கொண்டிருக்கிறாளா என்று பார்ப்பதற்குத்தான். மால்கோஷ் கூப்பிடுவதற்கு, வழக்கமாகக் கலா உடனே பதில் சொல்லுவாள். ஆனால் அவள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். உடனே மால்கோஷ் ஒரு முடிவுக்கு வந்தான். கலாவை விட்டு விட்டுத் தான் மட்டும் வெளியேறி எப்படியாவது அந்த ராட்சதனைக் கண்டு பிடிப்பது என்று அவன் தீர்மானித்தான்.

கலாவையும் எழுப்பி அழைத்துக் கொண்டு போகலாம் என்றால் அது சாத்தியம் என அவனுக்குத் தோன்றவில்லை. தன்னை விட்டுப் பிரிவதையும் அவள் விரும்ப மாட்டாள். பொழுது விடிந்த பிறகுதான் கலாவுக்குத் தன்னைப் பிரிந்து அவன் போனது தெரியப் போகிறது. அப்புறம் அவளே சமாதானம் ஆகிவிடுவாள் என்று தீர்மானித்துக் கொண்டான்.

இந்தத் தீர்மானத்துக்குப் பிறகு, மால்கோஷ் அங்கிருந்து தப்ப வழி இருக்கிறதா என்று யோசித்த வண்ணம் சிறையின் மேலே நோக்கினான். ஒரு பக்கத்துச் சுவரிலே ஒரு சிறிய ஜன்னல் இருந்தது. மிகவும் சிரமப்பட்டு அந்த ஜன்னலை அடைந்தான். ஒரு ஜன்னல் கம்பியைத் தனது முழு பலத்துடன் வளைத்தான். கம்பி வளைந்தது. மிகுந்த பிரயாசையுடன் மால்கோஷ் வெளியே வந்தான். கீழே கால்கள் வைப்பதற்கு இடம் இல்லாததால் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு தொங்கினான். அப்பொழுது சிறையின் மணி பன்னிரண்டு அடித்தது. மால்கோஷ் நிலா வெளிச்சத்தில் கீழே குனிந்து தண்ணீர்த் தேக்கத்தைப் பார்த்தான். தண்ணீர் தேக்கத்தில் இருந்த முதலைகள் வெகு வேகமாக வந்து எப்பொழுது மால்கோஷ் தண்ணீரில் விழுவான் என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தன.



பந்து

மால்கோஷ் அவைகளைப் பார்த்துப் பயப் படவில்லை. 'வருவது வரட்டும். நன்றி கெட்ட அரசனின் சிறையிலிருந்து கஷ்டப்படுவதை விட இந்த முதலைகளுக்கு இரையாவதே மேல். பாவம், நான் போய் விட்டால் கலாதான் கஷ்டப்படுவாள். கடவுள்தான் அவளைக் காப்பாற்ற வேண்டும்' என்று நினைத்துக் கொண்டான். பிறகு, ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக் கொண்டே சிறை யின் வெளிச் சுவரை மிகவும் பலமாக இரண்டு கால்களாலும் உதைத்தான்; அதே சமயத்தில் தான் பிடித்துக் கொண் டிருந்த கம்பிகளைக் கை நழுவ விட்டான். அடுத்த நிமிஷம் முதலைகள் கூடி இருந்த இடத்துக்குச் சற்று அப்பால் 'தடால்' என்று தண்ணீரில் குதித்தான்.

* * *

மறுநாள் காலையில் சிறையில் தூங்கிக் கொண்டிருந்த கலா வழக்கம்போல எழுந் திருந்து "அண்ணா!" என்று மால்கோஷைக் கூப்பிட்டாள். ஒன்றும் பதில் வரவில்லை. படுக்கையில் மால்கோஷைக் காணவில்லை. சிறையின் உட் புறத்தில் சுற்றிச் சுற்றிப் பார்த் தாள். மால்கோஷைக் காண வில்லை. மேலே பார்த்தாள். சிறையின் ஜன்னல்கம்பி வளைந் திருப்பதைக் கண்டாள். "ஐயோ, அண்ணா! சிறையி லிருந்து என்னை விட்டு விட்டுத் தப்பி ஓடி விட்டாயா? உனக்கு என்னைத் தனியே விட்டு விட்டுப் போக எப்படி அண்ணா, மனம் வந்தது? நன்றி கெட்ட இந்த மாயப் பட்டணத்தில் இருப் பவர்களை விட்டு எங்கேயாவது போய் விடலாம் என்று ஓடி விட்டாயா? அப்படி யானால் நான் எங்கே போவது, அண்ணா? நான் முன் பின் யோசியாமல் செய்த காரி யத்துக்கு நான்தானே கஷ்டங்களை அனு பவித்து ஆகவேண்டும்! ஐயோ அண்ணா, உன்னை எப்படி, எப்பொழுது காண்பேன்?" என்று விம்மி விம்மி அழுதாள்.

அந்தச் சமயத்தில் சிறையின் கதவு திறந் தது. மால்கோஷுக்கும், கலாவுக்கும் வழக் கம்போல இரண்டு சேவகர்கள் காலை ஆகா ரத்தைக் கொண்டு வந்தார்கள். கலாவின் ஆகாரத்தை அவள் எதிரில் வைத்து விட்டு, "உன் அண்ணா எங்கே?" என்று கேட்டார்கள்.

ஆனால் கலாவிடமிருந்து ஒன்றும் பதில் வர வில்லை. அதற்குப் பதி லாக அவளது கண்களி லிருந்து நீர்த்துளிகள் வந்து கொண்டிருந்தன. உடனே அவர்களுக்குச் சந்தேகம் ஏற்பட் டது. அப்பொழுது மேலே இருந்த ஜன்னல் கம்பி ஒன்று நன்றாக வளைந்திருப்பதைப் பார்த்தார்கள். உடனே சிறையின் வெளியே வந்து பார்த்தார்கள். "கைதி மால்கோஷ் தப்பி விட்டான்!" என்று கூச்ச லிட்டார்கள். உடனே கலா இருந்த சிறையின் கதவு மூடப்பட்டது.

சிறைக்கு வெளியே மாட்டப்பட் டிருந்த அபாய மணியைக் காவல் காரர்கள் அடித்தார்கள். மணியின் சத்தத்தைக் கேட்டவுடன் அபாயச் சங்கு ஊதப்பட்டது. கைதி மால்

ராஜி





கோஷ் சிறையினின்று ஜன்னல் கம்பியை வளைத்துக் கொண்டு தப்பி விட்டான் என்ற செய்தி காட்டுத் தீயைப்போல் நகரெங்கும் பரவியது.

"மால்கோஷ் தப்பி விட்டானு? அயோக்கியன். எனது குமாரியின் தொந்தரவினுல் அல்லவா அவனுக்கு இட்ட தண்டனையைக் குறைத்தேன். நன்றிகெட்டவன். அவனது தங்கை கலா சிறையில் இருக்கிருளா? அவளும் தப்பி விட்டாளா?" என்று பதற்றத்துடன் கேட்டான் அரசன்.

"அவள் சிறையில்தான் இருக்கிருள்" என்று பதில் வந்தது.

"தனது சகோதரன் தப்பி ஓடினதைப் பற்றி அவள் என்ன சொல்லுகிருள்?" என்று கேட்டான் அரசன்.

"அவள் ஒன்றும் சொல்லாமல் அழுது கொண்டே இருக்கிருள்" என்று அரண்மனைச் சிப்பந்திகள் சொன்னர்கள்.

"கலாவை இனிமேல் மிகவும் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள். அவளுக்கு மேலும் கடினமான வேலைகளைக் கொடுத்துச் செய்யச் சொல்லுங்கள். அவள் வேலை செய்யும் நேரம் போக அவள் சிறையிலே இருக்கும்பொழுது கைகளிலே விலங்குகளை மாட்டுங்கள். நான் ஏற்கனவே இட்டபடியிருந்தபடி மால்கோஷுக்கும் அப்பொழுதே விலங்குகள் போட்டிருந்தால் மால்கோஷ் இப்பொழுது தப்பியிருக்க முடியுமா? எல்லாம் எனது குமாரியினுல் தான் இந்தச் சங்கடமெல்லாம் வந்தது. அதைப்பற்றி இப்பொழுது நினைப்பதில் என்ன பிரயோசனம்? அதுபோகட்டும். மால்கோஷ் சிறையிலிருந்து எப்படித் தப்பினுன்? அவன் தப்பும்போது காவல் ஆட்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? உடனே சொல்லுங்கள். அந்த ஆட்களுக்குக் கடும்தண்டனை விதிக்கிறேன்" என்று கோபத்தினுல் அரசன் கத்தினுன்.

அதற்குள் அங்கு வந்த சிப்பந்திகள், "அரசே! அக் காவல்காரர்கள் மீது குற்றம் இல்லை. மால்கோஷ் வாசற்பக்கமாகத் தப்பி ஓடவில்லை. சிறையில் உள்ள ஜன்னல் கம்பிகளை வளைத்து அதன் வழியாக வெளியே வந்து தண்ணீரில் குதித்து விட்டான். முதலைகளிடமிருந்து தப்பியிருந்தானுல் பட்டணத்தை விட்டு வெளியே ஓடியிருக்க வேண்டும். சிறையின் பின்புறத்திலிருந்து முன் பக்கம் ஒரு வழியும் கிடையாது" என்றுர்கள்.

"அப்படியானுல் உடனே நாடு முழுதும் தண்டோரா போடச் செய்யுங்கள். யார் மால்கோஷை உயிருடனே அல்லது உயிர் இல்லாமலோ பிடித்துக் கொடுக்கிறர்களோ அவர்களுக்குப் பல பரிசுகள் தருவதாகச் சொல்லச் சொல்லுங்கள். நமது அரண்மனைச் சிப்பந்திகளைப் பட்டணத்தில் நாலா பக்கங்களிலும் அனுப்பிக் கைதி மால்கோஷை பிடித்து வர ஏற்பாடு செய்யுங்கள்" என்று உத்தரவு இட்டான் அரசன்.

பட்டணம் முழுவதும் மால்கோஷைப் பற்றித்தான் பேச்சு. நகரிலுள்ள அனைவரும் மால்கோஷைப் பிடித்துத் தருவதற்குப் பெரும் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தார்கள்.

வீதியில் தண்டோரா போட்டுக் கொண்டு போவதைச் சிறையிலிருந்து கலா கவனித்தாள். தன் அண்ணனுக்கு நேர்ந்த கதியை நினைத்துத் துக்கம் மேலிட்டு விம்மி விம்மி அழத் தொடங்கினுள். அந்தச் சமயத்தில் சிறைக் கதவு திறந்தது. கலா கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு வாசலை வியப்புடன் கவனித்தாள். (தொடரும்)

"கல்கி" செப்டம்பர் மாதச் சிறுகதைப் போட்டி

பரிசு ரூபாய் நூறு

மாதந்தோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் எழுத்தாளர்கள் எல்லோரும் கலந்து கொள்ளலாம். எழுத்தாளர்கள் சொந்தமாகவே கதைகள் புனைந்து அனுப்ப வேண்டும். போட்டிக்கு ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானுலும் அனுப்பலாம். கதைகள் "கல்கி"யில் ஆறு பக்கத்திலிருந்து எட்டு பக்கத்துக்குள் இருக்க வேண்டும். ஒவ்வொரு மாதமும் அந்தந்த மாதப் போட்டிக்கு வந்த கதைகளில் சிறந்ததற்கு நூறு ரூபாய் பரிசு வழங்கப்படும்.

முந்திய மாதப் பரிசுக் கதை அடுத்த மாத மூன்றுவது வாரத்தில் வெளியாகும். பிரசுரத்துக்குத் தகுதியுள்ள மற்றக் கதைகளும் "கல்கி"யில் பிரசுரமாகும். கதைகள் அந்தந்த மாதம் 20-ம் தேதிக்குள் "கல்கி" காரியாலயத்துக்கு வந்துவிட வேண்டும்.

கதைகளைத் திரும்பப் பெற விரும்பும் எழுத்தாளர்கள் கதைகளுடன் போதிய தபால் தலைகள் வைத்து அனுப்பவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேம்.

தேர்ந்தெடுத்த கதைகளைத் திருத்துவதற்கும், குறைத்து வெளியிடுவதற்கும் ஆசிரியருக்குப் பூரண உரிமை உண்டு.


'அனஸின்'
மிகச்சிறந்தது, அதில் நான்கு
மருந்துகள் சேர்ந்துள்ளன
1. க்வினையின் சல்பேட் 2. காப்பின்
3. பினஸிடின் 4. ஆஸிடில்ஸாலிஸிலிக் ஆஸிட்
வலிகளுக்கு நிவாரணமளிப்பதில் புகழ் பெற்ற 'அனஸின்' விஞ்ஞான முறையில் சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். இவைகள் நரம்புகளின் கேந்திர ஸ்தானங்களில் கூட்டாக வேலை செய்து, தலைவலி, ஜலதோஷம் ஜுரம், பல்வலி, மற்றும் தசைவலிகளுக்குத் துரிதமாயும் அபாயமின்றியும் நிச்சயமாயும் நிவாரணம் அளிக்கிறது. வலிகளுக்குத் துரித நிவாரணமளிப்பதில் அனஸினுக்கு இணையொன்றில்லை ... அனஸினைப் போல தீங்கு விளைவிக்காத வில்லை வேறொன்றில்லை. ஆகவே ஞாபகமிருக்கட்டும் 'அனஸின்' ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். அது ஹிருதயத்திற்குத் தீங்கு விளைவிக்கவோ அல்லது வயிற்றுக் கோளாறுகள் உண்டு பண்ணவோ செய்யாது. 'அனஸின்' வயதுக்கனக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கிறது. 'அனஸின்' வில்லை ஒவ்வொருவர் சக்திக்கும் ஏற்றது. ஒரு பாக்கெட்டின் விலை 12 நயா பைஸா மட்டுமே.
நான்கு
மருந்துகளின்
சேர்க்கையான
'அனஸின்'
வேண்டுமென்றே
கேளுங்கள்
WILL NOT UPSET THE STOMACH
DOES NOT HARM THE HEART
ANACIN
TABLETS
10 नये पैसे 1957
2 नये पैसे 1957
(ஒரு பாக்கெட்டின் விலை 12 நயா பைசா)

மகத்தான 2-வது வாரம் : சென்னை ஸ்டார் & மகாராணி



மாபெரும்
வித்தியாசங்களால்
உணர்ச்சிகளை
தட்டி எழுப்பும் !

BR FILMS PRESENT

நயா தௌர்

விழிகொண்டெழும் இந்தியாவின்
விறு விறுப்பான கதை


கீழ்க்கண்ட இடங்களிலும் 2-வது வாரம்

சேஷ்மஹால்	...	விஜயவாடா
செலக்ட்	...	விசாகப்பட்டினம்
தில்ஷாத்	...	ஹைதராபாத்
அஜந்தா	...	செகந்தராபாத்

ALL INDIA FILM CORPORATION RELEASE

ஆல் இந்தியா பிலிம் கார்ப்பொரேஷன், மவுண்ட் ரோடு, சென்னை-2





வாழ்க பல்லாண்டு

திரு ஈ. கிருஷ்ணய்யர் அவர்களின் பெயரைச் சொன்னதும் சிலருக்குப் பரதநாட்டியத்தின் நினைவு வரும்; சிலருக்குச் சங்கீதத்தின் நினைவு வரும். சிலருக்கு நாடகத்தின் நினைவு வரும். திரு ஈ. கிருஷ்ணய்யர் அவர்கள் இந்த மூன்று துறைகளிலும் நன்கு அனுபவப் பட்டவர். சென்ற முப்பதாண்டுகளில் சங்கீதம், நாடகம், நாட்டியம் இவை கலை வளர்க்கப் பாடுபட்ட பெரியவர்களில் கிருஷ்ணய்யரும் ஒருவராவர். நல்ல கலை விமர்சகர். 'இசைத் தேவி' என்ற பெயரில் அவர் செய்த சங்கீத விமர்சனங்கள் மறக்க முடியாதவை. ''தற்கால சங்கீத வித்வான்கள்'' என்ற பெயரில் அவர் ஆங்கிலத்தில் எழுதிய நூல் நல்ல விமரிசன நூலாகும். கலைகளுக்குத் தொண்டாற்றுவதுடன் திருப்தியடையாமல் தேச விடுதலைக்காகவும் அரும் பாடுபட்டிருக்கிறார். பல முறை சிறை சென்றிருக்கிறார். பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டு மிகச் சிறந்த முறையில் அவர் பணியாற்றி வந்திருக்கிறார்.

'பாகவத மேளா' என்னும் பழம்பெரும் நாட்டிய நாடகக் கலைக்குப் புத்துயிர் அளித்து, அதன் அருமை பெருமைகளையும் கலையின் உயர்வையும் நாடறியச் செய்தார். இப்பொழுது மறைந்து கொண்டிருக்கும் கிராமக் கலைகளுக்குப் புத்துயிர் அளிப்பதில் ஈடுபட்டு உழைத்து வருகிறார்.

இவ்வாறு தமிழ் நாட்டுக் கலைகளின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வரும் திரு கிருஷ்ணய்யர் அவர்களைப் பாராட்டுவதற்காக ஆகஸ்ட் எட்டாம் தேதி தியாகராய நகரிலுள்ள வாணி மகாலில் ஒரு விழா நடைபெற்றது. அன்று திரு கிருஷ்ணய்யர் அவர்களின் அறுபதாவது ஆண்டு விழாவும் சேர்ந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

விழாவுக்கு நிதிமந்திரி திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமை வகித்தார். விழாக் குழுத் தலைவர் திரு கே. எஸ். ராமசாமி சாஸ்திரி, திரு ம. பொ. சிவஞான கிராமணியார், உயர்நீதி மன்றத்து நீதிபதி திரு ஏ: எஸ். பி. ஐயர், திரு டி. ஜகந்நாதன், ஸ்ரீமதி ருக்மிணிதேவி, பேராசிரியர் சாம்பமூர்த்தி, திரு ஏ. ஜி. வேங்கடாச்சாரியார், சென்னை நகர மேயர் திரு கே. என்: சீனிவாசன் ஆகிய பல அறிஞர்கள் திரு கிருஷ்ணய்யர் அவர்களின் சேவையைப் பாராட்டிப்பேசினர். காதிபோர்டு டைரக்டர் ஸ்ரீ ஆர். பார்த்தசாரதி சென்னை சர்க்கார் சார்பிலும், பொதுமக்கள் சார்பிலும் திரு கிருஷ்ணய்யருக்கு ஒரு கதர் சால்வையை வழங்கினர். விழாக் குழுவின் சார்பில் திரு கிருஷ்ணய்யருக்கு வரவேற்புப் பத்திரம் ஒன்றும், கேடயம் ஒன்றும் வழங்கப்பட்டன.

தமக்கு அளித்த பாராட்டுதல்களுக்குத் திரு கிருஷ்ணய்யர் உள்ள நெகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்துக் கொண்டார். திரு ஆக்கூர் அனந்தாச்சாரியாரின் வந்தனோபசாரத்துக்குப் பின் மகாராஜபுரம் விசுவநாதய்யரின் சங்கீதக் கச்சேரி நடைபெற்றது. சங்கீத பூபதி அவர்களின் கச்சேரி அன்று பிரமாதமாக அமைந்து விட்டது. சங்கீதம், நாடகம், நடனம் முதலிய லளித கலைகளுக்கு அரும் பெரும் சேவை செய்துள்ள திரு கிருஷ்ணய்யரும் அவருடைய மனைவியாரும் பல்லாண்டு வாழப் பிரார்த்திக்கிறோம். மேலேயுள்ள படத்தில் திரு கிருஷ்ணய்யர் தம்பதியையும் விழாக் காட்சியையும் காணலாம்.

மலைச்சாரல் மாதவி

அத்தியாயம் 47

கண்ணீர் கசிந்தது

பாவம்! பேதை மாதவியும் விஜயராகவனைப் போலவே தன்னைப் பார்க்கத்தான் சிவசங்கரன் வருகிறார் என்று நினைத்தாள்; குதூகலம் அடைந்தாள். மாடியில் பெரிய ஹாலில் உட்கார்ந்திருந்தபோது கார் வரும் சத்தம் கேட்டு எழுந்து போய் யாரென்று எட்டிப் பார்த்தாள்.

சிவசங்கரனைப் பார்த்ததும் அவள் நெஞ்சு விம்மியது. கண்களில் நீர் துளித்தது. உணர்ச்சி மிகுதியினால் மாதவிக்குச் சிறிது நேரம் மூச்சு விடக்கூட முடியாமல் போயிற்று.

அவருடைய முகம் சோர்வாக இருப்பதைப் பார்த்ததும் மாதவியின் மனம் பச்சாத்தாபத்தினால் கரைந்தது. 'இன்று தான் வந்திருக்கிறார் போலிருக்கிறது. உடனேயே என்னைப் பார்க்க வந்திருக்கிறார். ஒருவேளை மலைச்சாரல் பங்களாவில் கூடப் போய்த் தேடியிருப்பார்' என்றெல்லாம் ஒரு கணத்தில் அவளுடைய மனம் கோட்டை கட்டியது. 'அவளுக்கு அவரைப் பார்த்ததில் சந்தோஷம் ஏற்பட்டதா? துயரம் ஏற்பட்டதா?' என்று சொல்வது மிகவும் கடினம். அழுகையும் வந்தது; சந்தோஷமாகவும் இருந்தது.

அவருடைய முகம் மறைந்தவுடனே உள்ளே ஓடிச் சென்று ஜயந்தியைத் தேடினாள். அவளைக் கண்டதும் அவளுடைய தோளைப் பிடித்துக் கொண்டு விம்மி அழுதாள்.


ஜயந்தி கலவரமடைந்து போய், ''என்ன அக்கா? என்ன நடந்தது?'' என்று பதற்றத்துடன் கேட்டாள்.

மாதவி விம்மிக் கொண்டே புன்னகையும் புரிந்தாள். ''ஒன்றுமில்லை, ஜயந்தி! என்னைப் பார்க்க அவர் வந்திருக்கிறார்'' என்று சொன்னாள்.



ஜயந்திக்கு விஷயம் புரிவதற்கு ஒரு கணம் ஆயிற்று. "சிவசங்கரனு? வந்திருக்கிருரா?" என்று சந்தோஷமாகக் கேட்டாள்.

இருவருமம சிவசங்கரனைப் பார்ப்பதற்குத் தயாரானுர்கள். மாதவி தலையை வாரிக்



கொண்டாள்.

'அடுத்த நிமிடம் வருவார். இதோ வந்து விடுவார்' என்று எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தார்கள். தங்களைக் கூப்பிட்டு அனுப்புவாரா, அல்லது மேலே வருவாரா என்று அவர்கள் பேசிக் கொண்டே இருக்கும் போது கார் புறப்படும் சத்தம் கேட்டது. இருவரும் வராந்தாவுக்கு ஓடிப் போய்ப் பார்த்தார்கள். சந்தேகமே இல்லை. சிவசங்கரனும், இன்னெருவரும்தான் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். மாதவியின் இதயத்தில் அளவிலாத வலி உண்டாயிற்று. அவள் திக்பிரமை அடைந்து நின்ருள்.

அவளுக்குத் தன்னைச் சிவசங்கரன் வேண்டுமென்றே அவமானப் படுத்தி விட்ட மாதிரி தோன்றியது.

ஜயந்திக்கு ஒருவாறு மாதவியின் நிலை புரிந்தது. "அக்கா, வருத்தப் படாதீர்கள். இன்று உங்களைப் பார்க்கா விட்டால் என்ன? நாளை கட்டாயம் வருவார். கூட வேறு யாரோ வந்திருந்தார் அல்லவா? அதனுல்தான் அவர் மேலே வரவில்லை, போயிருக்கிறது" என்று ஆறுதல் கூறினுள்.

"இருந்தால் என்ன? ஐந்து நிமிஷம் அவர் மேலே வந்து விட்டுப் போயிருக்கக் கூடாதா? அவருக்கு என்மீது உள்ள கோபம் இன்னும் தணியவில்லை போலிருக்கிறது."

"அதெல்லாம் இருக்காது, அக்கா! நீங்களாக எதையாவது கற்பனை செய்து கொண்டு வருந்தாதீர்கள்."

"இருந்தாலும் ஜயந்தி, மொத்தத்தில் நாம் இரண்டு பேரும் ரொம்பத் துர்ப்பாக்கியம் செய்தவர்கள்தான்!"

"அதுதான் தெரிந்திருக்கிறதே" என்ருள் ஜயந்தி.

மாதவியால் பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கொள்ள முடியவில்லை. ஹாலுக்குள்ளே சென்று சேலைத்தலைப்பினுல் கண்களை மூடிக்கொண்டு விம்மினுள். "ஏன் அவர் என்னைப் பார்க்க விரும்பவில்லை?" என்று குமுறினுள்.

அப்போது விஜயராகவன் "ஜயந்தி!" என்று கூப்பிட்டுக் கொண்டே மாடிக்கு வந்தார். மாதவி அவசரமாகத் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்து நின்ருள். விஜயராகவன் அவளைப் பார்த்ததும் பரிவுடன் "அழுதாயா, அம்மா?" என்று கேட்டார்.

மாதவி தொண்டையில் அடைத்துக் கொண்ட துயரத்தை விழுங்கி விட்டு, "ஏன் அவர் உடனே போய் விட்டார்?" என்று கேட்டாள்.

"ஏதோ வேலை இருக்கிறதென்று இருவரும் அவசரமாகக் கிளம்பி விட்டார்கள், அம்மா!" என்று மனமறிந்து பொய் சொன்னார் விஜயராகவன்.

"ஏன் அப்பா! மாதவி அக்கா இங்கே இருப்பது அவருக்குத் தெரியாதோ?" என்று கேட்டாள் ஜயந்தி.

"தெரியும். அவருடன் சீனிவாஸமூர்த்தியும் வந்திருந்தார் அல்லவா? அதனால்தான் மாதவியைப் பார்க்க அவர் இஷ்டப்படவில்லை. நாளைக்கு வந்தால் பார்த்துப் பேசுவார். இவ்வளவு கெட்டிக்காரியான உன் அக்கா இதற்கு ஏன் அழ வேண்டும் என்று எனக்குப் புரியவேயில்லை" என்றார் விஜயராகவன்.



"அழுகை இல்லை அப்பா! ஆனந்தக் கண்ணீர்" என்றாள் ஜயந்தி.

"சரி! நான் ஆபீஸுக்குப் போய்விட்டு வருகிறேன். உனக்கு உடம்பு சரியாக இருக்கிறதல்லவா?" என்று ஜயந்தியைக் கேட்டார் விஜயராகவன்.

"சரியாக இருக்கிறது அப்பா. நீங்கள் கவலைப்பட வேண்டாம். உங்களுடைய உடம்பையும் கவனித்துக்கொள்ளுங்கள். ரொம்ப நேரம் ஆபீஸில் சிரமப்படாதீர்கள். சீக்கிரம் வந்து விடுங்கள்" என்று ஜயந்தி சொன்னாள்.

விஜயராகவனும் ஜயந்தியும் ஒருவரைப் பற்றி ஒருவர் கவலைப்படுவதும், ஆதரவாகப் பேசிக் கொள்வதும் மாதவிக்குப் புதுமையாக இருந்தது.

எத்தனையோ நாட்களுக்கு முன்னால் இறந்துபோன தன் தந்தையின் ஞாபகம் அவளுக்கு வந்தது. மாதவிக்கு எப்போதும் தன் தந்தையிடம் பயம். அதனால் எதுவும் பேசமாட்டாள். அவர் ஏதாவது கூறினால் அதைச் செய்வாள். கேட்டால் பதில் சொல்லுவாள். அவ்வளவுதான்.

ஜயந்தி விஜயராகவனிடம் மனம் விட்டுப் பேசினாள். அவரைப் பற்றிக் கவலைப்பட்டாள். அவரிடம் அன்பு வைத்திருந்தாள். அளவற்ற மரியாதையும் பக்தியும் கொண்டிருந்தாள். ஆயினும் அவள் அவரிடம் சுதந்திரமாகப் பழகினாள். பயந்து நடுங்கவில்லை. விஜயராகவன் ஒரு ஆதர்ச தந்தை என்று மாதவிக்குத் தோன்றியது.

அவர் சென்றதும் ஜயந்தியிடம் தன் மனத்தில் தோன்றியதைக் கூறினாள் மாதவி. "நீ துர்ப்பாக்கியம் செய்தவள் என்று சொன்னேன் ஜயந்தி. அது எவ்வளவு தவறு தெரியுமா? இந்தமாதிரி ஒரு தந்தையை அடைய நீ ரொம்பப் புண்ணியம் செய்திருக்க வேண்டும். நானும் உன்கூடப் பிறந்த சகோதரியாக இருக்கக் கூடாதா என்று எனக்குத் தாபமாக இருக்கிறது!" என்றாள்.


"உங்களை நான் என் உடன்பிறந்த சகோதரியாகத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். அப்பாவும் அப்படித்தான் எண்ணிக் கொண்டிருக்கிறார். நாம் இருவருமே அந்த விஷயத்தில் கொடுத்து வைத்தவர்கள்தான். அதை நான் மறக்கவில்லை" என்றாள் ஜயந்தி.

"என்னையும் உன்னையும் ஒன்றாக எடை போடாதே, ஜயந்தி!" என்று மாதவி கசப்புடன் கூறினாள்.

"இப்போது அப்படித்தான் தோன்றும், அக்கா! நாளைக்குச் சிவசங்கரன் உங்களைப் பார்த்துப் பேசிவிட்டால் வேறு மாதிரி தோன்றும்."

"அவரைப் பற்றி என்னவெல்லாம் நினைத்திருந்தேன்! இப்படி மாறிப்போய் விடுவார் என்று நான் கருதவே இல்லை. வேறு சமயமாக இருந்தாலும் நான் பொருட்படுத்த மாட்டேன். நமக்கு இப்பேர்ப்பட்ட துரதிர்ஷ்டம் நேர்ந்திருக்கும்போது, நம்மைப் பார்த்து இரண்டு வார்த்தைகள் ஆறுதலாகச் சொல்லிவிட்டுப் போகக் கூடாது? சிநேகிதர் அப்படித் தவறாக எண்ணிக் கொண்டு விடுவாரா என்ன? அவர் என்னை இனிமேல் பொருட்படுத்த மாட்டார்" என்றாள் மாதவி வறண்டகுரலில்.

ஜயந்திக்கு மாதவி சமாதான மடையும் மன நிலையில் இல்லை என்பது தெரிந்து போயிற்று. தான் என்ன சொன்னாலும் மாதவி தற்போதைய மன நிலையில் ஒப்புக்கொள்ள மாட்டாள் என்று தெரிந்தபடியால் பதில் ஒன்றும் சொல்லாமல் மௌனமாக இருந்தாள்.



Firestone

பயர்ஸ்டோன்

நியூ டீலெக்ஸ் சாம்பியன்

ட்யூப்லெஸ் டயர்கள்

பொருத்த இதுவே தக்க சமயம்



பயர்ஸ்டோன் நியூ டீலெக்ஸ் சாம்பியன் ட்யூப்லெஸ் டயர் உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் வேறெந்த டயராலும், எந்த விலையிலும் இதுவரை அளிக்க முடியாத விசேஷ பாதுகாப்பை அளிக்கிறது. ஈரமானதும், வழுக்கும் ரஸ்தாக்களில், அது சறுக்காமல் செல்லுவதில் இணையற்றது. வெடிப்புகள் தொல்லை ஏற்படாது. மற்றும் அது அபாயமின்றி, நீடித்த மைல்கள் உழைக்கிறது. மன நிம்மதியுடன் பிரயாணம் செய்வதற்கென்றே தயாரித்த டயர் இது ஒன்றே.

'மன நிம்மதியுடன்' பிரயாணம் செய்வதற்கென்றே தயாரித்த முதல்முதலான டயர் இது ஒன்றே!

ஜயந்தியின் மௌனமும் மாதவிக்குக் கஷ்டமாக இருந்தது. 'நம்முடைய கஷ்டங்களை இன்னொருவரிடம் சொல்வது எவ்வளவு தவறு?' என்று எண்ணமிட்டாள். 'என்னதான் அன்பும், பிரியமும் இருந்தாலும் இன்னொருவருடைய மனக் கஷ்டத்தைச் சரியானபடி புரிந்து கொண்டு அனுதாபப்படுவது நடக்காத விஷயம். கருணாகரனுக்கே என் மனநிலை விளங்கவில்லை. என் மனத்தை மிகவும் நன்றாக அறிந்து கொண்டிருக்கும் அவருக்கே என் துயரம் தெரியவில்லை. அப்படியிருக்க ஜயந்தியும் அவர்கள் வீட்டாரும் என் கஷ்டத்தை எவ்வாறு உணரப் போகிறார்கள்? ஜயந்திக்கு அவள் தந்தை இருக்கிறார். சின்னம்மா இருக்கிறாள். போதாததற்கு நிறையச் சொத்தும் இருக்கிறது. எனக்கு என்ன இருக்கிறது? பெற்றோர் இல்லாத அநாதை நான். சித்தப்பாவுக்கோ என்னைக் கண்டால் வேப்பங்காயாக இருக்கிறது. அச்சுதனைக் கைது செய்த பிறகு என்னை அவர் ஏறிட்டுக் கூடப் பார்ப்பதில்லை. அவனுடைய கஷ்டத்துக்கு நான்தான் காரணம் என்று நினைக்கிறார். இது என்ன பாவமோ தெரியவில்லை.

நான் உள்ளன்பு செலுத்திய தம்பி அல்பாயுளில் போய்விட்டான். சிவசங்கரனும் என்னை நிராகரித்தால் நான் தனிக் கட்டைதானே? இவர்கள் வீட்டில் எத்தனை நாட்கள் இருப்பது? எப்படியிருந்தாலும் நான் தனியாக இருக்க வேண்டியவள்தானே? இவர்களுக்குக் கசந்து போவதற்கு முன்னால் மலைச் சாரல் பங்களாவுக்குப் போய் விட வேண்டும். தூரத்துப் பச்சைதான் கண்ணுக்கு அழகு. இவர்கள் என்ன சொன்னாலும் இனிமேல் இங்கே இருக்கக் கூடாது' என்று தீர்மானித்துக் கொண்டாள். இன்னும் இரண்டு நாட்களில் அங்கே போய் விடுவதென்று சங்கல்பம் செய்து கொண்டாள்.

வெளி மனம் இவ்வாறெல்லாம் வீறாப்பாக எண்ணமிட்டதே தவிர உள் நெஞ்சில் 'நான் தனியாக மலைச்சாரல் பங்களாவில் இருந்தால் அப்போதாவது சிவசங்கரன் வரமாட்டாரா?' என்கிற எண்ணம்தான் தோன்றிக் கொண்டிருந்தது. ஆனால் மாதவிக்கு அந்த எண்ணம் தன் மனத்தில் இருப்பதாக ஒப்புக்கொள்ளப் பிடிக்கவில்லை.

அன்று முழுவதும் மாதவிக்குப் பொழுது போவது மிகவும் சிரமமாக இருந்தது. தானே போய் அவரை நேரில் பார்த்துவிட்டு வந்தால் என்ன என்று தோன்றிக் கொண்டே இருந்தது. பல்லைக் கடித்துக் கொண்டு அப்படிச் செய்யாமல் இருந்தாள்.

அன்றிரவு படுத்துக் கொண்டபோது அவளுக்குத் தூக்கம் வரவில்லை. சிவசங்கரனும் தானும், முதன் முதலில் சந்தித்ததிலிருந்து அன்று சண்டை போட்டது வரை எல்லா நிகழ்ச்சிகளும் ஒன்றன் பின் ஒன்றாய் அவளுடைய மனத்திரையில் தோன்றின.

ஒவ்வொன்றாய் ஞாபகம் வந்தபோது அவளுக்குத் தவறு முழுவதும் தன்மீது இருப்பதாகவும், அவர் மீது தான் ஆத்திரப்படுவது மன்னிக்க முடியாத குற்றம் என்றும் தோன்றின. அவரைப் போன்ற உத்தமரை அன்பராக அடைய நான் பூர்வஜன்மத்தில் ஏதோ புண்ணியம் செய்திருக்க வேண்டும். அவரிடம் கோபித்துக் கொள்ள எனக்கு என்ன உரிமை இருக்கிறது? 'நாளைக் காலையில் போய் அவரிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டு விட வேண்டியது. பிறகு என்ன வேண்டுமானாலும் ஆகட்டும்' என்று உறுதி செய்து கொண்டு தூங்கிப் போனாள் மாதவி.

அத்தியாயம் 48

சுபாஷிணியின் மகிழ்ச்சி

அன்றிரவு சிவசங்கரனும் தூங்கவில்லை. எத்தனையோ விதமான எண்ணங்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு தூக்கம் வராமல் கெடுத்தன.

மாலையில் சுபாஷிணி, சீனிவாஸமூர்த்தி, சிவசங்கரன் மூவரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

சுபாஷிணி மலையாள நாட்டின் அழகைச் சொல்லிச் சொல்லி வியந்து கொண்டிருந்தாள். அதுவும் கமுக மலையின் பசுமையான அழகு அவள் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்து விட்டது.

''இந்த இடத்தைப் பார்த்தபிறகு எனக்குத் திரும்ப நாக்பூருக்கே போகப் பிடிக்காது போலிருக்கிறது. இங்கேயே இருந்து விடலாமென்று தோன்றுகிறது'' என்றாள் சுபாஷிணி.

''பேஷாக இருந்து விடு. எனக்கு ஒரு ஆட்சேபனையும் இல்லை'' என்றார் சீனிவாசமூர்த்தி.

''ரொம்ப அழகாக இருக்கிறது. நீங்கள் மாத்திரம் என்னை இங்கே விட்டு விட்டு நாக்பூர் போய் விடலாம் என்று பார்க்கிறீர்களா?'' என்று கேட்டாள்.

''நான் எங்கே அப்படிச் சொன்னேன்? 'சீதை இருக்குமிடம் அயோத்தி' என்று நானும் இங்கேயே இருந்து விடுவேன்'' என்று சீனிவாச மூர்த்தி சிரித்துக் கொண்டே கூறினர்.

''சிவசங்கரன் விவாகம் செய்து கொண்டு குடித்தனம் நடத்த ஆரம்பித்து விட்டால் நாம் எல்லோரும் ஒன்ருகவே இருந்து விடலாம்'' என்ருள் சுபாஷிணி.

சிவசங்கரன் ஒரு நெடிய பெருமூச்சு விட்டார்.



''மிஸ்டர் சிவசங்கரன்! நீங்கள் பாக்கியம் செய்திருக்கிறீர்கள். ஆனல் அதை உணர்ந்து அனுபவிக்க உங்களுக்குக் கொடுத்து வைக்கவில்லை. எதற்காக இப்படி எதையோ பறிகொடுத்தது மாதிரி உட்கார்ந்திருக்க வேண்டும்? இவ்வளவு அழகான பிரதேசத்தைப் பார்த்துப் பார்த்து சந்தோஷப் படலாமே?'' என்ருள் சுபாஷிணி.

''இந்த ஊரின் வனப்பைப் பார்த்துப் பார்த்து நான் எவ்வளவோ மகிழ்ந்திருக்கிறேன் அம்மா. இப்போது எனக்கு எதுவுமே பிடிக்க வில்லையே. என்ன செய்யச் சொல்கிறீர்கள்?'' என்று துயரத்துடன் கூறினர் சிவசங்கரன்.

''இதெல்லாம் நாமாக நினைத்துக் கொள்வதுதான். மேற்குக் கடற்கரைப் பிரதேசத்தில் இருக்கும் உங்களுக்கு அதன் அழகை ரஸிக்கத் தெரியா விட்டால் அது பெரிய குற்றம் என்று தான் நான் சொல்லுவேன். காரில் வரும் போது பார்த்த காட்சிகள் என் கண் முன்னல் வந்து நிற்கின்றன. வானளாவ உயர்ந்து வளர்ந்திருக்கும் தென்னை மரங்களும். அவற்றில் குலை குலையாய்ப் பொன் நிறத்தில் தேங்காய்களும், செம்மண் பூமியும், மேடும் பள்ளமுமான பிரதேசங்களில் வீடுகள் படிப்படியாக உயரத்திலும் பள்ளத்திலும் கட்டியிருக்கும் அழகும், செம்மண் பூமிக்கு ஏற்ற மாதிரி சிவப்பு ஓடு போட்ட சின்ன வீடுகளும், நடுநடுவே பலா மரங்களும், என்ன அழகாக இருக்கின்றன தெரியுமா?'' என்று சொல்லி நிறுத்தினள் சுபாஷிணி.

''ஒரு விஷயம் மறந்து விட்டாயே. சிகரெட்டுகளை வரிசை வரிசையாக நிறுத்தி வைத்த மாதிரி பாக்கு மரங்களும்..'' பரிகாசமான குரலில் கூறினர் சீனிவாஸமூர்த்தி.

அதைக் கேட்டுச் சிவசங்கரனின் முகத்திலும் புன்னகை அரும்பியது.

''ஐயோ! போகட்டும். உங்களுடைய பரிகாசம் உங்கள் நண்பரைப் புன்னகை செய்ய வைத்ததில் எனக்குத் திருப்தி தான்'' என்ருள் சுபாஷிணி.

''நீ சொல்லிக் கொண்டே போனல் அது வர்ணனை. நான் ஒரு உபமானம் சொன்னல் அது பரிகாசம். இது உனக்கே நியாயமாக இருக்கிறதா?'' என்ருர் சீனிவாசமூர்த்தி.

''இயற்கையன்னையின் அழகைக்கூட நீங்கள் பரிகாசமாகவே ரசித்தால் எனக்குப் பிடிக்கவில்லை. பாக்கு மரத்தைப் பற்றிச் சொன்னீர்களே! அதில் பூ பூக்கும் அழகை நீங்கள் பார்த்தீர்களா? இவர்கள் வீட்டுவாசலில் இருக்கும் பாக்கு மரத்தில் இன்றுதான் ஒரு பாளை வெடித்துப் பூக்கள் தெரிகின்றன. பச்சைப்

பசேல் என்ற காம்புகளில் அரிசியைக் கோத்த மாதிரி அவை என்ன அழகாக இருக்கின்றன தெரியுமா? இதைவிட ஒரு பெரிய அற்புதம் இருக்கிறதா என்று பார்த்து விட்டுச் சொல்லுங்கள்'' என்று அடுக்கினாள் சுபாஷிணி.

அந்தச் சமயத்தில் வாசலில் யாரோ வரும் சத்தம் கேட்கவே சீனிவாஸ மூர்த்தி எழுந்து சென்று பார்த்தார்.

கிருஷ்ணன் குட்டி சிவசங்கரனைப் பார்க்க வந்து கொண்டிருந்தார். அவரைப் பார்த்ததும் சிவசங்கரனுக்குப் பழைய ஞாபகங்கள் குமுறிக்கொண்டு வந்தன. அவர் வீட்டுக்குத் தாம் போனதும், அவரே தம்மைக் கருணாகரன் வீட்டுக்கு அழைத்துச் சென்று அறிமுகம் செய்து வைத்ததும் ஞாபகத்துக்கு வந்தன. 'இந்த மனிதர் அவ்வளவு தூரம் அக்கறையுடன் என்னை அழைத்துக் கொண்டு போயிருந்திருக்கா விட்டால் இத்தனை விபரீதங்களும் ஒருவேளை நிகழாமல் இருந்திருக்கலாம். கருணாகரனுக்கும் எனக்கும் இடையே மனஸ்தாபம் ஏற்பட்டிருக்காது. கருணாகரன் இறந்து போயிருக்க மாட்டான். மாதவியை நான் பிரிந்து வாடும்படி நேர்ந்திருக்காது. அச்சுதனைச் சிறையில் தள்ளியிருக்க மாட்டார்கள். நான் செய்த குற்றத்துக்காக வேறு ஒருவனை நானே தண்டிக்கும்படியான நிலையும் ஏற்பட்டிருக்காது' என்றெல்லாம் எண்ணமிட்டார் சிவசங்கரன்.

குசலப்பிரச்னம் விசாரித்தபிறகு பேச்சு கருணாகரனைப் பற்றித்தான் திரும்பியது. அதைத் தடுக்கச் சீனிவாஸ மூர்த்தி எவ்வளவு முயற்சி செய்தாலும் கிருஷ்ணன் குட்டி விடவில்லை. திரும்பத் திரும்பக் கருணாகரனின் அகால மரணத்தைப் பற்றியும், மாதவியின் அநாதரவான நிலையைப் பற்றியுமே அவர் பேசினார்.

''அந்தப் பாவி இப்படிப்பட்ட காரியம் செய்ய எப்படித்தான் துணிந்தானோ, தெரியவில்லை. அச்சுதன் இப்படிப்பட்ட ராட்சதன் என்று எனக்கு இத்தனை நாட்களாகத் தெரியாது. எனக்கு முகுந்தன் வீட்டுக்குப் போகவே கொஞ்சமும் பிடிக்கவில்லை'' என்றார்.

சீனிவாஸமூர்த்திகடைசியில், ''என்னை மன்னிக்க வேண்டும். ஆனால் நீங்கள் இந்த விஷயங்களைப் பற்றிச் சிவசங்கரனிடம் பேசக்கூடாது'' என்றார்.

''ஏன்?'' என்றார் கிருஷ்ணன்குட்டி.

''சிவசங்கரன் இந்த வழக்கில் தீர்ப்பு கூறப்போகும் நீதிபதி. சாதாரணமாக நீதிபதிகள் வழக்கு நடப்பதற்குமுன்னால் அதைப் பற்றி எந்த அனுமானமும் செய்து கொள்ளக் கூடாது. நீதிபதியிடம் குற்றவாளியைப் பற்றி அவதூறாகவே பேசிக்கொண்டிருந்தால் அவரை அறியாமலே குற்றவாளி மீது வன்மம் ஏற்படலாம் அல்லவா? ஆகவேதான் நீதிபதிகளும் ஜூரர்களும் வழக்கைப் பற்றி யாரிடமும் விவாதிக்கவே கூடாது என்று சட்டமே இயற்றி இருக்கிறார்கள். இதெல்லாம் உங்களுக்குத் தெரியுமல்லவா?'' என்றார்.

''தெரியும். ஆனால் என்னுடைய வருத்தத்தில் அதையெல்லாம் மறந்து போய் விட்டேன். அதுசரி, சிவசங்கரன்! இன்று மாதவியைப் போய் பார்த்தீர்களா? சௌக்கியமாக இருக்கிறாளா?'' என்று பேச்சை மாற்றினார் கிருஷ்ணன் குட்டி.

சிவசங்கரனுக்கு இன்னும் தர்மசங்கடமாகப் போயிற்று. ''இன்று அவளைப் பார்க்க முடியவில்லை'' என்றார்.

''ஏன் பார்க்கவில்லை? நாளைக்காவது போய்ப் பாருங்கள். பாவம்! ரொம்ப மனம் ஒடிந்து போயிருக்கிறாள். அந்தச்



சமயத்தில் உங்கள் அன்னைதான் அவளைப் பார்த்துக் கொண்டார். உங்கள் அன்னையின் கவனிப்பினால்தான் மாதவி கொஞ்சம் மனம் தேறினாள். அம்மா எப்போது வருவார்?''

''தெரியவில்லை. நாளை அல்லது நாளை கழித்துக் கடிதம் வரும் என்று நினைக்கிறேன்'' என்றார் சிவசங்கரன்.

இதையெல்லாம் நினைத்துக் கொண்டே இரவு முழுவதும் பொழுது போக்கினார் சிவசங்கரன். 'காலை மாதவியைப் பார்க்காமல் வந்தது கிருஷ்ணன் குட்டிக்கே அவ்வளவு வியப்பை அளித்ததே. மாதவி என்ன நினைப்பாள்? என்ன நினைத்தாளோ என்னமோ. பாவம்! அவளை நான் எப்படிப் பார்ப்பேன்? அவளிடம் என்ன பேசுவேன்? கருணாகரன் இறந்து போனதைப் பற்றி எப்படி ஆறுதல் கூறுவேன்? இதை விடச் சித்திரவதை வேறு ஏதேனும் இருக்க முடியுமா!' என்று அவர் எண்ணமிட்டார்.

(தொடரும்)

தமிழ் கூறும் நல்லுலகம்

தமிழ்நாட்டிலிருந்து தொலை தூரத்தில் குடியேறியுள்ள தமிழ் அன்பர்களுக்குத் தமிழ் மீதுள்ள ஈடுபாடும் ஆர்வமும் நாளுக்கு நாள் பல்கிப் பெருகி வளர்ந்து கொண்டே வருகின்றன.

ஜெம்ஷெட்பூரிலுள்ள டெல்கோ, தமிழ்ச் சங்கத்தினர் ஜூலை மாதம் 18ம் தேதியி லிருந்து ஐந்து நாட்கள், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடத்தைச் சேர்ந்த ஸ்ரீ அம்பல வாணர் அவர்களை அழைத்துத் தமிழ் இலக்கியச் செல்வத்தின் பெருமையை எடுத்துரைக்க வேண்டிக் கொண்டனர். ஔவைப் பிராட்டி, திருவள்ளுவர், திருநாவுக்கரசர், கம்பர், இராமலிங்க அடிகள் ஆகியோரது கவிதைச் செல்வங்களைப் பற்றி அவர் இலக்கியச் சொற்பொழிவுகளாற்றினார். தமிழ் அன்பர்கள் திரளாக விஜயம் செய்து தமிழ் இன்பத்தை நுகர்ந்தனர்.

★

சென்ற மாதம் திருச்சி தேவர் மன்றத்தில் திரு ஜி. உமாபதி தலைமையில் திரு ஆர்வி வளரும் எழுத்தாளர் சங்கத்தைத் துவக்கி வைத்தார். அவ்வமயம் எழுத்தாளர்கள் திரு. கஙி, அகிலன், ஸ்ரீரங்கம் நரசிம்மன், திருலோக சீதாராம் முதலான பலர் சொற்பொழிவாற்றினார்கள்.

வளரும் எழுத்தாளர் சங்கத்தின் தலைவர் திரு பாரதி தங்கராசன் வந்திருந்தோரை வரவேற்றார். துணைத் தலைவர் திரு தே. பார்த்தசாரதி சங்கத்தைப் பற்றிப் பேசினார். செயலாளர் திரு எஸ். பி. அமலன் சங்க அறிக்கை படித்தார். வந்திருந்த வாழ்த்துச் செய்திகளைத் திரு ஜி. பாலகிருஷ்ணன் வாசித்தார். துவக்க விழாப் போட்டி முடிவுகள் துணைச் செயலாளர் திரு பொன்னனால் அறிவிக்கப்பட்டு, தலைவரால் பரிசுகள் வழங்கப்பட்டன.

திரு பாரதி தங்கராசவின் நன்றி உரைக்குப் பின் வாழிய செந்தமிழ் வானளாவ ஒலிக்க விழா இனிது முடிவுற்றது.

★


டில்லி, கர்க்கி கலாமந்திரத்தின் ஆதரவில் 21-7-57 அன்று "எனது அபிமான தமிழ் எழுத்தாளர்" என்ற தலைப்பில் ஒரு சொல் அரங்கம் நடைபெற்றது. அவ்வமயம் திரு பி. எஸ். சந்தானம், திரு தியாகராஜன், திரு ராமகிருஷ்ணன், திரு பட்டாபிராமன், திரு எம். கே. சாமி, திரு எஸ். ரங்கநாதன், திரு வெங்கட சுப்பிரமணியன் ஆகியவர்கள் பேராசிரியர் கல்கி முதலிய பல எழுத்தாளர்களின் கற்பனை ஓவியங்கள் பற்றி மிக அழகாகப் பேசினார்கள். மற்றும் சில அன்பர்கள் இதில் பங்கெடுத்துக் கொண்டு அரங்கத்தினைச் சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சிக்குத் திரு என். ஆர். சேஷகிரி ராவ் அவர்கள் தலைமை தாங்கினார்கள். செயலாளர் வேங்கடராமன் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவடைந்தது.

★

அமெரிக்காவிலிருந்து இந்தியா திரும்பும் வழியில் பேராசிரியர் திரு லட்சுமணன் செட்டியார் அவர்கள் சிங்கப்பூரிலுள்ள நகரத்தார்கள் ஸ்ரீ தண்டாயுதபாணி கோவிலில் 'மேற்கத்திய நாடுகளில் சர்வகலாசாலைக் கல்வி' என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். திரு லட்சுமணன் செட்டியார் அவர்களை, மேற்படி கோவிலின் காரியஸ்தர் திரு அ. அரு. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் வந்திருந்தவர்களுக்கு அறிமுகம் செய்வித்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இரசாயன இன்ஜினியரிங் பகுதியில் திரு லட்சுமணன் செட்டியார் அவர்கள் பத்தாண்டுகளுக்கு மேல் பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார்களென்றும், அமெரிக்காவில் நார்த் டகோட்டா பல்கலைக் கழகத்தில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றினார்களென்றும், தமிழகத்தில் நெய்வேலியில் நிலக்கரி வெட்டி எடுக்க முடியுமென்று நிரூபித்து அத் திட்ட வேலையைத் தொடர்ந்து நடத்த அடிப்படைக் காரணகர்த்தாவாக இருந்தார்கள் என்றும் கூறினார்.

திரு லட்சுமணன் செட்டியார் அவர்கள் மேனாட்டு சர்வகலாசாலைக் கல்வி பற்றி மிக விளக்கமாகக் கூறினார். கலாசாலையில் பயிலும் மாணவர் வேறு இடங்களில் சம்பளத்துக்கு வேலை பார்த்துக்கொண்டே கல்வியைத் தொடர்ந்து பயின்று வருகிறார்களென்றார். காரியஸ்தர் திரு அ. அரு. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் வருகை தந்தோருக்கு நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.



ஜய்பூர் நபாப் இன்கம் அதிகாரி திரு பி. எஸ். ராகவாச்சாரியார் அவர்களின் சகோதரி சௌபாக்கியவதி ஜயலக்ஷ்மிக்கும், ஓய்வு பெற்றுள்ள இன்ஜினியர் திரு ஆர். ரங்கநாத தாத்தாச்சாரியாரின் புதல்வர் சிரஞ்சீவி ஆர். கண்ணனுக்கும் சென்னையில் ஜூலை மாதம் 8-ந் தேதி வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. வாழ்க மணமக்கள்!

தண்டனை

ஜி. கே. பொன்னம்மாள்

"இருந்தாலும் உங்களுக்கு இத்தனை ஞாபக மறதி வேண்டாம். ஊருக்கு எடுத்துக்கொண்டு போனது ஒரே ஒரு தோல் பெட்டி. அதைக் கூடவா மாற்றி எடுத்துக் கொண்டு வர வேண்டும்?'' என்று குற்றம் சாட்டினாள் என் மனைவி.

''நான் மறந்து விட்டேன் என்று சொல்லாதே. ஒரேமாதிரி இருந்ததால் அவசரத்தில் கவனியாமல் பெட்டியை மாற்றி எடுத்துக் கொண்டு வந்து விட்டேன். அவ்வளவு தான். இது யார் பெட்டியோ, தெரியவில்லை. ''ஆர். வி'' என்று பெயர் எழுதி யிருக்கிறது. ஆபீஸ் சம்பந்தமான சில முக்கிய காகிதங்களை வேறு என் பெட்டியில் வைத்திருக்கிறேனே! இப்பொழுது என்ன செய்யலாம்?'' என்று மிகுந்த கவலையுடன் மனைவியிடம் கேட்டேன்.

''முதலில் இந்தப் பெட்டியைத் திறந்து பாருங்கள். 'டயரி' ஏதாவது இருந்தால் விலாசம் கிடைக்கலாம்'' என்று யோசனை சொன்னாள் என் மனைவி.

அதுவும் சரியாகவே பட்டது. சாவி இல்லாமல் பெட்டியைத் திறப்பது மிகவும் கஷ்டம். அந்த அழகான பெட்டியின் பூட்டை உடைக்கவும் மனம் வரவில்லை. கடைசியில் மிகுந்த சிரமத்துடன் பூட்டுக்குச் சேதமேற்படாமல் பெட்டியைத் திறந்தேன்.

அதிலிருந்து 'கம்'மென்று உயர்ந்த 'சென்டி'ன் வாசனை மூக்கைத் துளைத்தது. பச்சை, சிவப்பு, நீலம் என்று பல நிறத்தில் புடவைகளும், அவற்றுக்கு இசைந்த சோளிகளும், பவுடர், ஸ்னோ என்று அலங்காரப் பொருள்களும் நிறைந்திருந்தன.

எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. அடடா! ஒரு பெண்மணியின் பெட்டியை அல்லவா எடுத்துக் கொண்டு வந்து விட்டேன்! அவள் எடுத்துப் போயிருக்கும் என் பெட்டியைத் திறந்து பார்க்கும்போது, 'பேண்டும்' 'கோட்டு'மாக இருப்பதைக் கண்டு எப்படி அதிர்ச்சியடைவாளோ? இதனால் என்னென்ன விபரீதங்கள் நேருமோ என்று மனம் குழம்பினேன்.

''நீங்கள் இருந்த 'கம்பார்ட்மென்டி'ல் வேறு யார் யார் இருந்தார்கள்?'' என்று குறுக்குக் கேள்வி போட்டாள் என் மனைவி.

'அந்த முதல் வகுப்புப் பெட்டியில் என்னைத் தவிர இருவரே இருந்தார்கள். முஸ்லிம் கனவான் ஒருவர். இன்னொன்று ஒரு பெண்மணி'' என்றேன்.

''அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டே உங்கள்பெட்டியைத் தாரை வார்த்து விட்டீர்களாக்கும்'' என்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள். பிறகு, ''சரி, நீங்கள் நகருங்கள். நான் பார்க்கிறேன்'' என்றபடி பெட்டியைக் குடைய ஆரம்பித்தாள். அந்தப் பெண்மணியின் பெட்டியை நான் தொடுவது கூட அவளுக்குப் பொறுக்கவில்லை போலும்!

பெட்டியின் அடியிலிருந்து கறுப்பு நிறம் கொண்ட ஒரு 'டைரி'யை வெளியே எடுத்தாள். மேலும் கீழுமாகப் புரட்டிப் பார்த்து விட்டு, ''அடடா, இது யாரோ ஆண்பிள்ளையின் டைரியல்லவா? இவன் பெயரையும் விலாசத்தையும் காணவில்லையே?'' என்றாள்.

டைரியில் முதல் பக்கத்தைத் திருப்பிப் படித்தாள். ''இன்று புதிதாகக் கொண்டுவரப்பட்ட புலியைப் பார்த்தாலே பயமாக இருக்கிறது. இதைப் பழக்குவது சற்றுக் கஷ்டமாகத்தான் இருக்கும் போலிருக்கிறது.—வி.'' என்றிருந்தது.

''ஒரு வேளை புலி என்று குறிப்பிட்டது அவன் மனைவியைக் குறிப்பிடுகிறதோ?'' என்றேன், கண்களைச் சிமிட்டிக் கொண்டே.

'ரொம்பச் சமர்த்தாகத்தான் பேசுகிறீர்கள். இப்பொழுதும் வேடிக்கைப் பேச்சு வேண்டி யிருக்கிறதே. உங்கள் பெட்டியில் கலை கலையாக முந்நூறு ரூபாயும், தங்கக் கடிகாரச் செயினும் வைத்திருக்கிறீர்களே. அதற்கென்ன சொல்லுகிறீர்கள்?'' என்று திருப்பிக் கேட்டாள்.

''என் பெட்டியில் என் விலாசம் இருக்கிறது. அந்தப் பெண்ணே, திரும்பப் பெட்டியைக் கொடுத்து விடுவாள், பார்'' என்று சவால் விட்டேன் நான்.

''நினைத்துக் கொண்டிருங்கள். நாலு பவுன் செயினும், முந்நூறு ரூபாயும் அவளுக்குக் கசக்கிறதாக்கும். இந்தப் பெட்டியிலிருக்கும் புடவைகளை யெல்லாம் சேர்த்தால்கூட நானூறு ரூபாய் வராது'' என்று கூறி விட்டுப் பெட்டியை மூடினாள்.

''எப்படியாவது போகிறது. ஆபீசுக்கு நேரம் ஆகிறது'' என்று கூறி, இரண்டு வாய் சாப்பிட்டு விட்டுப் புறப்பட்டேன்.

காரியாலயத்தில் காலெடுத்து வைத்ததும், ''உங்களைக் காலையிலிருந்து யாரோ 'போனி'ல் கூப்பிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். நீங்கள் இன்னும் வரவில்லை என்றேன். இதோ, மறுபடியும் கூப்பிடுகிறார் போலிருக்கிறது'' என்றார் தலைமைக் குமாஸ்தா. டெலிபோனைக் கையிலெடுத்து ''ஹல்லோ'' என்றேன்.

''என்னப்பா கணபதி! இப்படித் தினம் பன்னிரண்டு மணிக்குத்தான் ஆபீஸுக்கு வருகிறாயா? அந்த நாளில் தெருவில் பந்து விளையாடிவிட்டு 'லேட்டாக' பள்ளிக்கூடத்துக்கு வந்து அடி வாங்குவாயே, அந்தப் பழக்கத்தை இன்னும் விடவில்லை போலிருக்கிறது. என்னைத் தெரிகிறதோ உனக்கு? நான்தான் விக்டர்'' என்று கூறினான் 'போனில்' பேசியவன்.

எனக்கு எத்தனை யோசித்தும் நினைவு வரவே இல்லை. யாராக இருக்கலாம், இப்படி ஏக வசனத்தில் பேசுகிறானே, என்று நினைத்து, ''மன்னிக்க வேண்டும். எத்தனையோ ஞாபகப் படுத்திப் பார்த்தும் எனக்கு உங்களை யாரென்று தெரியவில்லை. தயவுசெய்து நீங்கள் யார் என்று சொல்லி விடுங்கள்'' என்றேன் மரியாதையாக.

"உனக்குத்தான் ஞாபகசக்தி இல்லையென்பது தெரியுமே! போகிறது. இன்று காலையில் ஒரு பெண்மணியின் பெட்டியை மாற்றி எடுத்துக் கொண்டு போனாயே, அதாவது நினைவு இருக்கிறதா?" என்றான் கேலிக்குரலில்.

"ஆமாம், ஆமாம்!" என்று இடைமறித்தேன். "அந்தப் பெண் சாட்சாத் என் மனைவிதான். உன் பெட்டி என்னிடம் இருக்கிறது. பெட்டியிலிருந்து உன் விலாசம் கிடைத்தது. பெட்டியை நீ வந்து வாங்கிக் கொள்ளுகிறாயா? இல்லை, நான் கொண்டு வந்து தரட்டுமா? நீ வந்தால் நான் ரொம்ப சந்தோஷப் படுவேன். இப்பொழுதாவது உனக்கு என்னைப் புரிகிறதா, பார். பள்ளிக்கூட நாடகத்தில் திருடன் வேஷம் போடுவதில் கெட்டிக்காரனாக இருந்தானே. விளையாட்டுக்களில் முதல் சன்மானம் வாங்குவானே, நீங்களெல்லாம் அவனை 'ஸாண்டோ விக்டர்' என்று கூப்பிடுவீர்களே அத்துடன் ஒவ்வொரு வகுப்பிலும் மும்மூன்று வருஷங்கள் தங்கி விடுவானே.—அவன்தான் நான். போதுமா என் பிரதாபம்? சரி, மாலை வந்து சேர். ஐந்து மணிக்குக் கார் அனுப்புகிறேன்" என்று கூறி டக்கென்று போனை வைத்து விட்டான்.

எனக்கு ஏற்பட்ட சந்தோஷத்துக்கு அளவே இல்லை. நண்பனை அடையாளம் தெரிந்து விட்டது. இவ்வளவு கலபமாகப் போன பொருள் திரும்பக் கிடைத்து விடும் என்று நான் நினைக்கவே இல்லை. அத்துடன் பழைய நண்பனைச் சந்திக்கலாம் என்ற சந்தோஷம் வேறு சேர்ந்து கொண்டது.

ஐந்து முறை மணி அடித்து ஓய்ந்ததும் காரியாலய 'பைல்'களிலிருந்து கண்களைத் திருப்பினேன். வாசலில், என் நண்பனின் கார் வந்து விட்டது. நான் போய் ஏறிக் கொண்டேன்.

'சர்க்கஸ்' கூடாரங்களுக்கு இடையே கட்டப்பட்டிருந்த ஒரு சிறிய கூடாரத்தின் முன் கார் நின்றது.

காரிலிருந்து இறங்கிச் சுற்றிலும் ஒரு கண்ணோட்டம் விட்ட பிறகு விக்டரின் கூடாரத்துக்குள் நுழைந்தேன்.

"வா அப்பா, கணபதி. உனக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன். உன்னை எழுந்து வரவேற்க முடியாமல் இருப்பதற்கு வருந்துகிறேன்" என்று என்னைக் குஷியாக வரவேற்றான் விக்டர்.

நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு அவனை உற்றுப் பார்த்தபோது தான் அவன் கூறியதன் பொருள் விளங்கியது. விக்டரின் இடது கால் முடமாக இருந்ததை இப்பொழுதுதான் கவனித்தேன்.

"அடடா! இது எப்படி விக்டர் ஏற்பட்டது?" என்றேன் மிகவும் மனஅதிர்ச்சியடைந்தவனாக.


விக்டர் தனது காலைப்பற்றிக் கவலைப்பட்டவனாகவே தெரியவில்லை. சற்று நேரத்தில் சூடான தேநீரும் பிஸ்கோத்தும், பழ வகைகளும் வந்தன. 'சாப்பிடு, சாப்பிடு' என்று அன்பாக உபசரித்தான் விக்டர்.

எனக்காக வெற்றிலைத் தட்டைக் கொண்டு வந்தாள் ஸ்ரீமதி விக்டர்.

"இதோ பார், ரோஸ். உனக்கும் உன் ஞாபக மறதிக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதனால்தானே என் நண்பனைப் பார்க்க முடிந்தது? சரி, நண்பனுக்கு நம் வரலாற்றைச் சொல்லுகிறேன்!" என்று கூறி விக்டர் சொல்ல ஆரம்பித்தான்.

"என் இஷ்டப்படியே படிப்பு முடிந்ததும் சர்க்கஸில் சேர்ந்து விட்டேன். சர்க்கஸ் வேலைகள் பழகுவதில் எனக்கு நாட்கள் போனதே தெரியவில்லை. இரண்டு வருஷங்கள் ஓடி மறைந்து விட்டன. இப்பொழுது நான் புலியுடனும் சிங்கத்துடனும் அனாயாசமாகப் பழகும் முதல்தர சர்க்கஸ்காரனாகி விட்டேன். கம்பெனி முதலாளிக்கு என்னிடம் மிகுந்த பிரியம் உண்டாகி விட்டது.

"நான் சிங்கத்தின் வாயில் தலையை நுழைக்கும் போது, ஜனங்கள் எல்லோரும் கையைத் தட்டி ஆரவாரம் செய்வார்கள். ஆனால் படுதா மறைவில் என்னையே கவனித்துக் கொண்டிருக்கும் ஒரு தாமரை அழகு முகம் மட்டும் பயத்துடன் இருக்கும். இது எனக்கு வெகு நாட்களாகத் தெரியாது. ஒரு நாள் கண்டு பிடித்து விட்டேன். அந்த அழகு முகம் யாருடையது, தெரியுமா?" என்ற கேள்வி



யுடன் ஸ்ரீமதி விக்டரைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டி ளுன் விக்டர்.

''போதுமே, உங்கள் அசட்டுத்தனத்தை ஆரம்பித்து விடாதீர்கள். உங்கள் கதையை மட்டும் சொல்லுங்கள்!'' என்று வெட்கத்துடன் கூறினுள் அவன் மனைவி ரோஸ்.

''அதெப்படி உன்னை விட்டு விட முடியும்? நீதானே கதாநாயகி!'' என்று கதையைத் தொடர்ந்தான் விக்டர்.

''சர்க்கஸ் கம்பெனி முதலாளியின் மகள்தான் இந்த ரோஸ். ரோஸும் 'பார்' வேலைகளெல்லாம் மிக நன்ருகச் செய்வாள். ஒவ்வொரு ஊரிலும் முகாமிட்டு லாபமும் நஷ்டமுமாக ஓடிக் கொண்டிருந்தது எங்கள் கம்பெனி. இடையே கோயமுத்தூரில் ஆட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, பாலாமணி என்ற பெண் வந்து சேர்ந்தாள். அவள் கயிற்றின்மேல் சைக்கிள் விடுவதில் கெட்டிக்காரி. நான் அதிகமாகப் பாலாமணியிடம் பேச்சு வைத்துக் கொள்ள மாட்டேன். ரோஸிடம் மட்டும் அப்படி இருக்க முடியாது. அவள் கண்கள் என்னைக் காந்தம்போல் இழுத்துவிடும். ஆட்டம் முடிந்ததும் ஆனந்தமாகக் கூடாரத்துக்கு வெளியே நிலவு ஒளியில் உட்கார்ந்து நானும், ரோஸும் பொழுது போவது தெரியாமல் பேசிக்கொண்டிருப்போம். கூடாரத்து மறைவிலிருந்து பாலாமணியின் கண்கள் குரோதமாக எங்களைப் பார்ப்பதை நாங்கள் கவனிக்கவே இல்லை. நாங்கள் இருவரும் காதல் உலகில் தங்கு தடையின்றிச் சஞ்சரித்துக்



கொண்டிருந்தோம். விருந்துக்கிடையே படம் விரித்தாடும் கருநாகம் புகுந்தது போல் எங்கள் வாழ்க்கையில் குறுக்கிட்டான் ஸ்ரீகாந்தன். 'பாண்டு' வாத்தியம் வாசிப்பதில் கெட்டிக்காரன் என்று கூறிக் கொண்டான். அப்படியே நன்றாகவும் வாசிப்பான். ஸ்ரீகாந்தனிடம் எனக்குப் பிடிக்காதது என்னவென்றால், பிறர் விஷயத்தில் தலையிடும் அவனது குணம்தான். முதலாளியிடம் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி, அவர் அன்பைப் பெற நினைப்பான். அதில் அவன் சிறிது வெற்றியும் கண்டு விட்டான் என்று தான் சொல்ல வேண்டும். இடையே நேரம் கிடைத்தபொழுதெல்லாம் என்னிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் சர்க்கஸ் வேலைகளைப் பழகிக் கொண்டான். நாளடைவில் அவன் 'பாண்டு' வாசிப்பதை விட்டு விட்டு, சர்க்கஸ் வேலைகளில் எனக்குப் போட்டியாக வந்து விட்டான்.

அன்று காலை வழக்கத்துக்கு மாறாக, எட்டு மணி வரையில் அயர்ந்து தூங்கிவிட்டேன். எழுந்து டீ சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுதே எனக்கு முதலாளியிடமிருந்து அழைப்பு வந்து விட்டது. டீ கோப்பையை அப்படியே வைத்து விட்டு முதலாளியைப் பார்க்கச் சென்றேன். ஒரு பெரிய இரும்புக் கூண்டினுள் பயங்கரமான புலி ஒன்றைக் கொண்டு வந்திருந்தார்கள். அந்தப் புலி சுமார் ஏழடி நீளம் இருக்கும். அதன் அனல் கக்கும் விழியைப் பார்த்தாலே பயமாக இருந்தது.



முதலாளி வெகு சந்தோஷமாக இருந்தார். "இதோ பார், விக்டர்! இந்தப் புலியை அஸ்ஸாம் காட்டிலிருந்து மிருந்த பிரயாசையுடன் பிடித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். நானும் அதிகமான விலை கொடுத்து வாங்கி விட்டேன். இதை அடக்கிச் சர்க்கஸுக்குப் பழக்கும் வேலையை நீயாவது ஸ்ரீகாந்தனாவது ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தப் புலி அவ்வளவு சீக்கிரம் அடங்கிவிடும் என்று நான் நினைக்கவில்லை. இந்த வேலையை மட்டும் வெற்றிகரமாக முடித்து விட்டால், நம் சர்க்கஸில் நல்ல பண வசூலை எதிர்பார்க்கலாம். இதில் தான் உங்கள் திறமையை நான் பார்க்கப் போகிறேன்" என்று என்னிடமும் ஸ்ரீகாந்தனிடமும் சவால் விட்டார்.

ஸ்ரீகாந்தனோ இந்த உயிர்ப் பந்தயத்துக்கு 'நான் தயாராக இல்லை' என்று ஒதுங்கிக் கொண்டு விட்டான்.

காலையிலும் மாலையிலும், புலிக்குத் தீனி போடும்போது மெதுவாக அதனுடன் பழக நினைத்தேன். இதை வேடிக்கை பார்ப்பதற்காகவே, பாலாமணியும் ஸ்ரீகாந்தனும் என்னுடனேயே சுற்றிக் கொண்டிருப்பார்கள். ரோஸ் மட்டும் நான் ஒவ்வொரு முறை கூண்டினுள் நுழையும்போதும் கவலையுடன் இறைவனை வேண்டிக் கொள்வாள்.

என் விடாமுயற்சியின் பயனாகப் புலி ஒருவாறு எனக்குக் கட்டுப்பட்டது. நாங்கள் அப்பொழுது மலபாரில் ஒரு ஊரில் முகாமிட்டிருந்தோம். அங்குதான் நான் முதன் முதலாக அந்தப் புலியைக் கொண்டு வேடிக்கை காட்ட ஏற்பாடாகி யிருந்தது. வட்டமான இரும்பு வளையத்தில் தீயைப்பற்ற வைத்து அந்த வளையத்துக்குள் புகுந்து புலி வெளிவர வேண்டும். அப்படி அதைப் பழக்கி யிருந்தேன்.

என்னையும் புலியையும் பலவிதமான கோணங்களில் படம் பிடித்து விளம்பரப்படுத்தி அதிகமான பண வசூலை எதிர்பார்த்தார் முதலாளி.

இடையே எனக்கு மற்றொரு தொந்தரவும் ஏற்பட்டது. அதுதான் பாலாமணிக்கு என் மீது ஏற்பட்ட காதல். அவள் வலையில் விழாமல் தப்பித்துக் கொண்டே வந்தேன். கடைசியில் அவள் என்னிடம் கோபமாக இருக்கிறாள் என்று தோன்றியது.

அன்று சர்க்கஸுக்குக் கூட்டம் அதிகம். 'பாண்டு' வாத்தியம் முழங்கியது. மக்கள் கரகோஷம் செய்து ஆட்டத்தை ஆரம்பிக்கும்படி தூண்டினார்கள். முதலாளிக்கு ஏற்பட்ட சந்தோஷத்தில் "விக்டர்! இன்றைய வெற்றி உன் கையில்தான் இருக்கிறது. சீக்கிரம் தயாராகி விடு" என்று குஷிப்படுத்தினார். அன்று முன் யோசனையுடன் புலிக்குக் குறைவாகவே தீனி வைத்திருந்தேன். புலிக் கூண்டை ஆட்கள் நகர்த்திக் கூடாரத்தின் நடுவே கொண்டு வந்து வைத்தார்கள். நான் என் கறுப்பு 'வெல்வெட்' உடையைப் போட்டுக் கொண்டேன்.

மிருதுவான கர ஸ்பரிசம் முதுகில் படவே திரும்பிப் பார்த்தேன். கலங்கிய கண்களுடன் ரோஸ் நின்று கொண்டிருந்தாள்.

"விக்டர், எனக்கென்னமோ பயமாகத்தானிருக்கிறது" என்றாள். அவள் கண்களைத் துடைத்து விட்டு "இதென்ன, ரோஸ், அசடு மாதிரி. எனக்கொன்றும் நேர்ந்து விடாது. வெற்றியுடன் திரும்புகிறேன் பார். அப்படியும் உனக்குத் தைரியம் ஊட்ட இதோ 'ரிவால்வர்' — தோட்டாக்கள் நிறைத்து வைத்திருக்கிறேன். புலி ஏதாவது வாலை ஆட்டினால் சுட்டுத் தள்ளி விடுவேன். பயப்படாதே!" என்று தைரியமூட்டினேன்.

கூண்டை நெருங்க நெருங்க ரோஸின் கண்ணீர் நிறைந்த முகம்தான் என் கண் முன்னால் நின்றது.

புலியை ஒரு நோட்டம் பார்த்தேன். அதுவும் என்னைப் பார்த்தது. கூண்டினுள் சென்று புலியைத் தாஜா செய்து அதன் முதுகில் தட்டிக் கொடுத்தேன். அது உடலை வளைத்துக் கொண்டு என்னைப் பார்த்து உறுமியது. பிறகு வாயைத் திறந்து பெரிய கொட்டாவி விட்டுவிட்டு ஓரமாகப் போய்ப் படுத்துக்கொண்டது. சற்றுத் தள்ளி நின்று கொண்டிருந்த வேலையாள் வளையத்தில் தீயை வைத்து விட்டான். எனக்குப் புலி முரண்டுகிறது என்று தெரிந்து விட்டது. அதை எழுப்புவதற்காக அதன் விலாவில் விரலால் குத்தினேன். ஒரு முறை சீறிவிட்டு எழுந்து மறு பக்கம் போய்ப் படுத்துக் கொண்டது. புலியைத் தாஜா செய்வதிலேயே பதினைந்து நிமிஷங்கள் போய்விட்டன.

புலியின் பிடிவாதத்தைப் பார்த்து எனக்குக் கோபமும் அவமானமும் ஏற்பட்டன.

பொறுமையை இழந்தவனாகக் கையிலிருந்த 'சவுக்'கினால் புலியை இரண்டு முறை அடித்தேன். வலி தாளாமல் துள்ளி எழுந்த புலி கூண்டினுள் வட்டமிட்டது. மேலும் இரண்டு அடிகள் வைத்துத் தீ எரியும் வளையத்தருகே கொண்டு வர நினைத்தேன். புலியும் வளையத்தை நெருங்கியது.

முக்காலும் வெற்றி என்று எண்ணிக் கொண்டு கடைசி முறையாகச் சாட்டையை வீசினேன். அடிபட்ட புலி என்னைப் பார்த்துத் திரும்பியது. கண் இமைக்கும் நேரத்தில் என் மீது பாய்ந்தது.

ஒரு கணம் எனக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. தொலைந்தேன் என்று நினைத்து உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ரிவால்வரால் இரு முறை சுட்டேன். துப்பாக்கி வெடிக்கவே இல்லை!

மின்னலைப்போல் எனக்கு ஸ்ரீகாந்தனின் துரோகம் புரிந்து விட்டது. நான் ரோஸுடன் கூடாரத்துக்குள் சென்றிருந்தபோது அவன் துப்பாக்கியிலிருந்து தோட்டாக்களை எடுத்து விட்டிருக்கிறான்!

வேறு வழியின்றிச் சாட்டையைச் சுழற்றினேன். எப்படியோ மறு விநாடி புலி என் இடது காலைக் கவ்விக்கொண்டு விட்டது. வலி பொறுக்க முடியாமல் தரையில் சாய்ந்தேன். மறு நிமிஷம் 'படார்' 'படார்' என்று துப்பாக்கிச் சத்தம். புலி ரத்த வெள்ளத்தில் மிதந்தது. என் மங்கிய கண்களுக்கு வேறு ஒன்றுமே தெரியவில்லை.

பிறகு நடந்ததெல்லாம் ரோஸ் கூறித்தான் எனக்குத் தெரியும்.

ஜனங்களிடையே பெரிய ஆரவாரம் எழுந்தது. கூட்டத்தில் கலவரமேற்பட்டதை உணர்ந்த முதலாளி ஜனங்களை அமைதியாக இருக்கும்படி கேட்டுக் கொண்டு என்னை ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தார்.

அடுத்த நிகழ்ச்சியை ஆரம்பிக்க வேண்டியது ஸ்ரீ காந்தன். காரணமின்றி அவன் உடல் பதறியது. மேஜையின் மேலிருந்த 'சர்பத்'தை மடமடவென்று உறிஞ்சி விட்டு உயரத்தில் இருக்கும் ஊஞ்சலில் ஏறினான். எதிரே இருக்கும் ஊஞ்சலில் பாலாமணி.

இப்பொழுது மறுபடியும் 'பாண்ட்' முழங்கியது. கூட்டத்தில் நிசப்தம் நிலவி ஆட்டம் ஆரம்பித்தது. இருவரும் வீசி வீசி ஊஞ்சலில் ஆடினார்கள். தலை கீழாகவும், இடம் மாறியும் பல வேடிக்கைகள் செய்தார்கள். கடைசியாக இருவரும் ஊஞ்சலை மாற்றிக் கொள்ள வேண்டிய முறை. பாலாமணி ஸ்ரீ காந்தனின் ஊஞ்சலைப் பற்றிக் கொண்டு விட்டாள். ஆனால் ஸ்ரீ காந்தன் தவற விட்டு விட்டான். யாரும் எதிர்பாராமல் கீழே விழுந்தான். அன்று அதற்கு மேல் ஆட்டம் நடைபெறவில்லை. ஸ்ரீகாந்தனின் தலையில் பலமான காயம். மனநிலை சரியில்லாததால் தான் இப்படி நேர்ந்தது போலும்! எத்தனை முயன்றும் இரண்டு நாட்களுக்கு மேல் அவனது உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. கடைசியில் அவனுக்கு நினைவு வந்தபோது என்மேலுள்ள பொறாமையினால் எனது துப்பாக்கியிலிருந்து தோட்டாக்களை எடுத்து மறைத்ததை ஒப்புக்கொண்டு மன்னிப்பு கோரினான். அப்படியாக அவன் கதை முடிந்து விட்டது. நானும் எனது இடது காலைப் பறிகொடுத்து விட்டு இப்படி இருக்கிறேன். இந்தப் பொறாமை எத்தனை கெடுதல் பார்த்தாயா, கணபதி?'' என்று நிறுத்தினான் விக்டர்.

'' அது சரி, அந்தப் பாலாமணி என்ன ஆனாள்?'' என்ற கேள்வியைப் போட்டேன்.

'' என் உடம்புதேறியதும் நானும்ரோஸும் கல்யாணம் செய்துகொண்டோம். பொறாமை பிடித்த பாலா மணி ஓடி விட்டாள். அப்புறம் எங்கோ ரயில் விபத்தில் இறந்து விட்டாள் என்று கேள்விப்பட்டேன்'' என்று விக்டர் கதையை முடிக்கவும் கூடாரத்துக்கு வெளியே பாண்டு வாத்திய முழக்கம் கேட்கவும் சரியாயிருந்தது.

'' அடடா! உன் கதையைக் கேட்டதில் பொழுது போனதே தெரியவில்லை. ஆட்டம் ஆரம்பிக்கப் பொழுதாகி விட்டது. நான் விடைபெற்றுக் கொள்கிறேன். அது சரி! இந்த அபாயகரமான தொழிலை இன்னும் ஆசையாக நடத்திக் கொண்டிருக்கிறாயே! அதைப் பார்த்து என்னால் வியக்காமலிருக்க முடியவில்லை!'' என்றேன்.

வழக்கப்படி ஒரு அதிர்வேட்டுச் சிரிப்பு சிரித்து விட்டு, ''இந்தத் தொழிலில் அபாயமெதுவும் இல்லையப்பா. போட்டி பொறாமை தான் மிகவும் அபாயமானது. இப்பொழுது எங்கள் கம்பெனியில் இதற்கெல்லாம் இடமில்லை. கம்பெனி ஒற்றுமையாக நடைபெறுகிறது. நாளை உன் மனைவியையும் குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு வாயேன். மறந்து விடாதே. வண்டியில் உன் பெட்டி இருக்கிறது'' என்று விக்டரும் ரோஸும் கூப்பிய கரங்களுடன் எனக்கு விடை கொடுத்து அனுப்பினார்கள்.

அந்த அன்புத் தம்பதிகளைப் பார்த்துப் பேசியதில் ஒருவிதமான மகிழ்ச்சி என் இதயத்தில் இடம் பெற்றிருந்தது.



அன்னமிட்ட கை

மஞ்சுவின் உடல் தேறுவதற்காக அவள் கணவர் அவளோடு உதகமண்டலம் போய்த் தங்குவதற்கான ஆயத்தங்களைச் செய்தார்; போகும் மார்க்கத்திலேயே அவளது பிறந்தகம் இருந்தபடியால், அங்கு தங்கிவிட்டுப் போவது நல்லது என்று அபிப்பிராயப்பட்டார். மஞ்சுவோ உற்சாகமின்றி, "போனாலும் என் தங்கை தேவகி ஒருத்திக்காகத்தான் போகவேண்டும். பாவம், தாயில்லாப் பெண்; ஏற்கனவே கறிவேப்பிலைக் குச்சி மாதிரி ஒடிந்துவிழும் தேகம்!" என்று அங்கலாய்த்தாள்.

அப்பெண்களின் தகப்பனாரான அருணாசலம் தமது உள்ளூர்ப் பள்ளிக்கூடத்தில் டிரில் உபாத்தியாயர். முதல் மனைவி இறந்தபின் மறு விவாகம் செய்துகொண்டவர்; அதன் பிறகு அகத்துக்காரி அன்னபூரணியிடம் அவரே டிரில் பழகுவதாக கிண்டல்காரர்கள் பேசுவதுண்டு.

பிறந்தகம் போய்ச் சேர்ந்ததும் தகப்பனாரிடமிருந்து கிடைத்த அமோகமான வரவேற்பு, சித்தியானவள் மூத்த பெண்ணுக்கு ஆரத்தி எடுத்த வைபவம் — எல்லாமே ஒரு மாய்மாலம் போலத் தோன்றியது மஞ்சுவுக்கு.

"இன்றிரவே நீலகிரி எக்ஸ்பிரஸைப் பிடிக்கவேண்டும். இப்போதெல்லாம் என் உடம்புக்கு ஏதும் ஒத்துக் கொள்வதில்லை—அதுசரி, தேவகி எங்கே?" என்றாள் மஞ்சு.

"அவளுக்கு ஸ்கூல் பைனல் பரீட்சை கடைசி நாள் இன்னிக்கு. சாயங்காலந்தான் வருவாள்" என்று அருணாசலம் பதிலளித்துவிட்டு, மூத்த பெண்ணின் அந்தஸ்துக் கேற்றபடி முதல்தரமான விருந்து சமைக்க மனைவியிடம் அச்சாரம் கொடுத்து விட்டு, கொல்லைப்புறம் வாழையிலை பறிக்கப்போனார்.

தனிமையிலிருந்த சமயம் மஞ்சு தன் கணவரிடம் "என்ன சமையல் தடபுடலோ! தேவகியை இவர்கள் வளர்க்கும் இலட்சணம் எனக்குத் தெரியாதா. இப்போது அந்தப் பெண் மேலும் இளைத்துத் துரும்பாயிருப்பது நிச்சயம். ஆடு மாதிரிப் பச்சைக் கறிகாய்களை சாப்பிடச் சொல்கிறாளாம்!" என்றாள்.

"பேஷ். நீ சமைக்கும் வேகாத சமையலைவிட பச்சைக் கறிகாய்கள் மோசமில்லையே. எனக்கும் நீ எப்போதுதான் முழுப் பச்சைக் கறிகாய்கள் தரப்போகிறாயோ!" என்று தமாஷ் செய்தார் அவள் கணவர்.

"சித்தியைப்போல எனக்குமென்ன அடுப்பு மூட்ட சோம்பலா? அப்படி அவள் சமைத்தாலும் என்ன சமைக்கிறாள்—கீரை, கோவைக்காய், வாழைத் தண்டு... காசு போட்டுக் கறிகாய் வாங்க கை வராது அவளுக்கு. அப்படி சிக்கனம் செய்து சேர்த்த பணத்தால் என்னதான் கோட்டை கட்டப் போகிறாளோ—ஆனா, நான் சமைப்பது எவ்வளவு ஒசத்தி ஒசத்தியா . . . !"

"தெரியாதா, உன்னோட ஒசத்திச் சமையல்தானே இப்போ உதகமண்டலத்துக்கு டிக்கெட் வாங்கும்படி கேட்கிறது!" என்று கேலி செய்தார் அவர்.

பேசிக் கொண்டிருந்தபோது, தரையில் உடைந்து கிடந்த கண்ணாடி வளையல் துண்டுகள் மஞ்சுவின் கண்களில் பட்டன. "என்ன அபசகுனம்! தேவகியின் வளையல் போலிருக்கிறதே!" என்று துணுக்குற்றாள் அவள். சித்தியின் பிடியிலே தேவகி சிக்கித் தவிப்பதுபோலவும், வளையல்கள் உடைபட்டு, மூளிக் கையுடன் தேவகி உலவுவது போலவும் கற்பனை செய்துகொண்டு ஆத்திரப்பட்டாள் மஞ்சு. அப்பா வந்ததும் தன் ஆத்திரத்தை வெளியிட்டாள். அவரோ சமாதானமாக, "வளரும் பெண்ணுக்கு அடிக்கடி வளையல் உடைவது சகஜந்தானே, மஞ்சு. தேவகிக்கு ஒரு குறையுமில்லை. வீணாக ஏன் அலட்டிக் கொள்கிறாய்.

HVM. 299A-X29 TM

என்னைப் பார். அவள் சாப்பிடும் சாப்பாட்டைத்தானே நானும் சாப்பிடுகிறேன். பொழுதெல்லாம் ட்ரில் செய்தால்கூட இப்போதெல்லாம் எனக்குச் சோர்வு ஏற்படுவதில்லை!'' என்று கூறிவிட்டு, எல்லோரையும் சாப்பிடக் கூப்பிட்டார்.

உண்மையிலேயே அருணாசலம் பத்து வயது குறைந்தவராகக் காணப்பட்டதாக மஞ்சுவே ஒத்துக் கொள்ளும்படி இருந்தது. அன்றைய சாப்பாடும் ருசியாகத் தான் இருந்தது.

''எல்லாமே எண்ணெயில் செய்திருப்பீர்களோ என்று முதலில் பயந்தேன். நல்ல வேளையாக...'' என்றாள் மஞ்சு

''மஞ்சு, நாலு வருஷம் ஏகாங்கியாயிருந்தபோது, ஹோட்டலிலிருந்து வந்த எடுப்பு சாப்பாட்டால் இளைத்துப்போன அனுபவம் எனக்கு உண்டு. அன்ன பூரணி வந்தபிறகு எங்கள் சமையலே மாறிவிட்டது. பற்பல கடைகளில் திறந்து கிடக்கும் டின்களில் விற்கும் தூசிபடிந்து நாற்றமெடுத்த எண்ணெய்களை நாங்கள் வாங்குவதில்லை. சிக்கனம் செய்யும் கையாலேயே ருசிக்க ருசியான புதுப்புது ஆகாரங்களை அவள் பண்ணிப் போடும் அழகே அழகு. சில நாட்கள் நீங்கள் தங்கிவிட்டுப் போனால் உங்களுக்கே தெரியும்'' என்றார் அருணாசலம்.

''எண்ணெய்களுக்குப் பதிலாக டால்டா வனஸ்பதி உபயோகிக்கிறீர்களா?'' என்று கேட்டாள் மஞ்சு.

''ஆம். சுத்தம்புதிய தாவர எண்ணெய்களிலிருந்து பரிசுத்தத்தோடு தயாரிக்கப் பட்டு அடக்கமான டின்களில் கிடைக்கும் உயர்தர தாவரக் கொழுப்பே டால்டா வனஸ்பதி. சேர்த்துள்ள அதே அளவு வைட்டமின் ஏ, டி ஆகிய இரண்டும் டால்டாவிலும் இருப்பதனால் அவை நமது பற்களுக்கும் எலும்புகளுக்கும் பலம் தந்து, நோய்நொடி வராமல் பாதுகாக்கின்றன. டால்டாவில் எந்தப் பண்டம் தயாரித்தாலும் அதன் பூரணமான ருசி பரிமளிக்கும்', என்றார் அருணாசலம்.
''வனஸ்பதியை சாப்பிட்ட எலிகளின் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டதாக கேள்விப் பட்டதுண்டு'' என்று குறுக்கிட்டார் மாப்பிள்ளை.

''பாதிக்கப்பட்ட காரணம் வனஸ்பதியல்ல; மற்ற சத்துள்ள உணவுகள் ஏதும் எலிகளுக்குக் கொடுக்காததுதான் காரணம். பிற்பாடு அரசாங்கமே மூன்று வருஷகாலம் வனஸ்பதியைப் பூரணமாகப் பரிசோதித்துவிட்டு, ஆரோக்யத்திற்கு உத்தமமான கொழுப்பு வனஸ்பதி என்று நிர்மாணித்து விட்டனர். சர்வ சத்துக்களும் அடங்கிய பல்வேறான ஆகாரங்களையும் டால்டாவில் சமைத்து உண்டு, தினசரி பாலும் பருகி வருவோரின் ஆரோக்யத்திற்கு எந்தவிதமான பழுதும் வராது!'' என்று அழுத்தமாகக் கூறினார் அருணாசலம்.

''அப்படியானால் நாமும் ஒரு ஜாடி டால்டா வாங்கிப் பார்க்கலாமா, மஞ்சு?'' என்று கேட்டார் மாப்பிள்ளை.

''ஜாடியில் விற்காது டால்டா. பச்சை மரத்தின் படமும் 'டால்டா' என்ற பெயரும் உடைய பக்குவமான டின்களில் கிடைப்பதுதான் டால்டா வனஸ்பதி'' என்று அருணாசலம் தொடர்வதற்குள், ''அம்மா'' என்ற குரல் வாசற்புறம் ஒலித்தது. வாசலுக்கு விரைந்தாள் சித்தி; கையோடு அவள் அழைத்து வந்த வடிவழகியைப் பார்த்ததும் மஞ்சுவுக்கே அடையாளம் தெரியவில்லை. தங்கச் சிலைபோல் கொழித்து வளர்ந்திருந்த அந்தக் கட்டழகியே திடீரென்று ''அக்கா'' என்று கூவியதும் அப்படியே பூரித்துப் போனாள் மஞ்சு.

அதே சமயம், வெள்ளைக் காகிதம் சுற்றிய பொட்டலம் ஒன்றைத் திறந்து அதிலிருந்த இரு ஜோடி பொன் வளையல்களை தேவகியின் கரங்களில் அணிவித்தாள் சித்தி!

இதயமிளகிவிட்ட மஞ்சு, ''சித்தி, உங்கள் பொன்னான கைக்குத்தான் இந்தப் பொன் வளையல் பொருந்தும்—அன்னமிட்ட கையல்லவா, அம்மா'' என்றாள். ''அம்மா'' என்றழைத்த அந்த ஒரு வார்த்தையே மஞ்சுவின் உள்ளத்தை விளக்கிவிட்டது.

HVM. 299B-X29 TM

படித்துப் பாருங்கள்

கடலும் கிழவனும்

மீன் பிடிக்கும் தொழிலைப் பரம்பரையாகக் கொண்டுள்ள ஸாந்தியாகோ என்ற கிழவன் மீன் பிடிப்பதற்காகக் கடல் மீது சென்று மாபெரும் மீனை அரும்பாடு பட்டு, வெகு நேரத்தோடு வெற்றி கொண்டு கரைக்குத் திரும்புகிறன். அவன் கரை வந்து அடைவதற்குள் அந்த மீனைக் கடலிலுள்ள மற்ற மீன்கள் எல்லாம் கொத்தித் தின்று வெறும் கூட்டைத்தான் விட்டு வைக்கின்றன. அந்தக் கூட்டுடன் கரை சேர்கிறன். அதனால் கிழவனின் முயற்சி பயனற்ற முயற்சியாகவே இருக்கிறது. ஆனல் இந்தக் கதையில்லாத கதையை எழுதத் துணிந்த 'எர்னஸ்ட் ஹெமிங்வே' என்ற பிரபல அமெரிக்க ஆசிரியரின் முயற்சி மிகுந்த பலன் அளிக்கிறது. 'மனித முயற்சி' என்பதற்கு ஸ்தூல வடிவமுள்ள இலக்கியம் ஏதாகிலும் உண்டா என்று கேட்டால் கடலும் கிழவனும் என்ற இந்த நூலை எடுத்துச் சொல்லலாம். இதன் ஆசிரியர் இந் நூலுக்காக நோபல் பரிசு பெற்றிருக்கிறர்.

கிழவனும், மீனும்தான் இந்தக் கதையில் மிக முக்கியமான பாத்திரங்கள். மீன் கிழவனுடன் போராடுவதும், கிழவன் அந்தப் போராட்டத்தைச் சமாளிப்பதும்தான் கதை. போராடும் போதெல்லாம் கிழவன் பேசுகிறன். யாருடன்? தனக்குத் தானே பேசிக் கொள்கிறன். கிழவன் தனக்குத்தானே பேசிக் கொள்ளும் முறையிலேயே கதை முழுதும் ஆசிரியர் சொல்லுகிறர். இந்தப் புதுவிதமான உத்தியை மிக ஆச்சரியகரமான முறையில் அலுப்புத் தட்டாத வகையில் ஆசிரியர் கையாண்டிருக்கிறர்!

மீனைக் கொன்று தனது படகில் கட்டிக் கொண்டு வரும்போது அவன் உள்ளத்தில் எத்தனையோ எண்ணங்கள் எழுகின்றன. அவற்றில் பாவத்தைப் பற்றி எண்ணம் வருகிறது. அப்போது அவன் தன்னைப் பார்த்துச் சொல்லிக் கொள்வதைக் கேளுங்கள்: "நீ உயிரோடிருக்கவும், மற்றவர்களுக்கு உணவாக விற்கவும் மாத்திரம் நீ அந்த மீனைப் பிடிக்கவில்லை. நீ ஒரு வலைஞன். உன் தற் பெருமைக்காகவே அதைக் கொன்ருய். உயிரோடிருந்த போதும், இறந்த பிறகும்கூட நீ அந்த மீனை அன்புடன் பாராட்டினுய், அன்பு கொண்ட ஒன்றைக் கொல்வது பாவமல்ல. அல்லது பாவந்தானு?"

"கிழவனே! நீ தேவைக்கு அதிகமாகச் சிந்திக்கிருய்."

மீனுடன் உக்கிரமாகப் போராடும் கிழவலைஞனின் உள்ளத்தில் கூடவே அன்பு பரிணமிப்பதை மிக விந்தையான முறையில் இதன் ஆசிரியர் சித்திரித்திருக்கிறர். இதுதான் இந்தக் கதையின் விசேஷம்! நோபல் பரிசு கிடைத்ததின் ரகசியம்.

சாதாரணமாகக் கதை படிப்பவர்கள் 'இதில் என்ன இருக்கிறது! கதையே இல்லையே!' என்று சொல்லி விடலாம். 'எதைக் கண்டு இவ்வளவு பெரிய நோபல் பரிசு கொடுத்தார்கள்?' என்று கேட்கலாம். அப்படிக் கேட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மொழிபெயர்ப்பு: ச. து. சு. யோகியார். பிரசுரம்: ஏ. கே. கோபாலன், திருவல்லிக்கேணி சென்னை-5. விலை: ரூ. 1-25

புதுத் தமிழ்க் கவிமலர்கள்

ஸ்டீபன் ஸ்பெண்டர் என்ற ஆங்கில ஆசிரியர் சில ஆண்டுகளுக்கு முன் சென்னைக்கு வந்திருந்தபோது பின்வருமாறு பேசினர். "கவிதையை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அதாவது ஒன்று கவிதை, மற்றையது தற்காலக் கவிதை" என்ருர். அவர் கூறிய தன் பொருள் தற்காலக் கவிதையில் அவ்வளவு கவிதைச் சுவையில்லை என்பதுதான். ஆனல் அவர் கூறியது அவருடைய ஆங்கில மொழிக்குப் பொருந்துமோ என்னமோ, தமிழ் மொழிக்குப் பொருந்தாது என்பதை புதுத் தமிழ்க் கவிமலர்கள் என்ற நூல் கட்டியம் கூறிக் கொண்டிருக்கிறது!

நண்பர் திருலோக சீதாராம் அவர்களது இந்தத் தொகுப்பில் கவிமணியில் தொடங்கி ஐம்பத்தைந்து தற்காலக் கவிஞர்களை அறிமுகப் படுத்துகிறர். பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், கல்கி, ச. து. சு. யோகியார், சுத்தானந்த பாரதி, சோமு, நாணல் ஆகிய தமிழ் மக்களுக்கு அறிமுகமான கவிஞர்கள் இத் தொகுப்பில் இடம் பெற்றிருக்கிறர்கள்.

'தமிழழகன்' என்ற இளம் கவிஞர் சூரியன் உதயமானவுடன் நிகழும் காட்சிகளை எவ்வளவு கவிதைச் சுவை துலங்க வருணிக்கிறர், பாருங்கள்:


முன்னிருட் கங்குலில் மின்னிய
மீன்கணம்
முத்துப் பனியாச்சு — புல்மேல்
இறைத்த மணியாச்சு — வயதுக்
கன்னியர் செப்பொடு தம்மில்லம்
விட்டாற்றைக்
காண நடந்தாச்சு — கன்னத்தில்
நாணம் படர்ந்தாச்சு.

"மாறன்" என்ற மற்ரேர் கவிஞர் தாரகைப் பெண்களைப் பற்றிப் பாடியுள்ள பாட்டைப் பாருங்கள்:

நீலநிறத் திற்குப் பொட்டிடவே — அவள்
நீள்நிலப் பெண்ணிடம் கற்றனளோ
கோலமிடும் போது பொட்டு வைக்கும்
தமிழ்க்
குமரிப் பெண்களைக் கண்டதுண்டோ!
ஆதித்தன் முன்னுலே தோன்றுவதால்
— கற்பு
அழிந்து விடுமென்று எண்ணுவதோ.
நாதிகள் போலவே சந்திரனை — இரவில்
சந்தித்துச் சல்லாபம் செய்வதேனே!

இப்படிப் பல சுவை மிக்க பாடல்களை இத் தொகுதியில் காண்கிறேம். வளரும் தமிழ் கவிதைத் துறையில் எவ்வளவு தூரம் முன்னேறி வருகிறது என்பதைக் காணும்பொழுது புது உற்சாகம் பிறக்கிறது.

பிரசுரம்: ஹிமாலயப் பிரசுரங்கள், 59/1 வாலாஜா ரோடு, சென்னை-2. விலை. ரூ.1-25.



நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

28. தந்தை சொல்லிய மந்திரம்

"மாமா! நேற்று முதல் அத்தான் ஒருமாதிரியாக இருக்கிறதைக் கவனித்தீர்களா? கொஞ்சமாவது கலகலப்பே இல்லை; கையுங்களவுமாக போலீஸாரிடம் பிடிபட்ட கைதியைப் போல முகத்தைத் தொங்கப் போட்டபடியே—கவலை தேங்கிய களையுடன் சாப்பிடவும் செய்யாமல் நேற்றையப்பொழுது கழிந்தது. இன்று காலையிலிருந்து பல் தேய்க்கவில்லை, குளிக்கவில்லை'' என்று துளஸியம்மாள் தன் மாமனாரான வில்வாத்ரியிடம் தன் புருஷனைப்பற்றிச் சொன்னாள்.

தொண்டு கிழமான வில்வாத்ரி இதைக் கேட்டுச் சிறிது நேரம் சிந்தனையிலாழ்ந்தார். பிறகு ''அம்மா! துளஸி! விச்வத்தை வரச்சொல். நான் அவனை என்னவென்று கேட்கிறேன்'' என்றார்.

ராஜவைத்தியர் பரம்பரையில் வேறொரு விசேஷமும் இருந்தது. குடியில் பிறக்கும் குழந்தைகளுக்கும், புகும் குழந்தைகளுக்கும் பெயரிடுவதில் ஒரு விசேஷம். அச்வத்தன், ஆரக்வதன், கர்ணிகாரன், வேலன், வேம்பன், அக்ஷன்' என்று ஆண்களுக்கும், துளஸி, அபயா, நீலி, நாராயணி, கமலம், குமுதம் என்று இப்படிப் பெண்களுக்கும் வைக்கும் பெயர்கள் யாவும் மருந்துகளின் பெயராகவே இருக்கும்.

அரசன் சந்திரசூரன் காலமான பிறகு சந்திரஹாஸன் சிம்மாஸனம் ஏறினான். அரசனான ஒன்றிரண்டு ஆண்டுகளில் அர்க்க நகரத்தரசுடன் நெடுநாட்கள் பகைமை கொண்ட திந்திரிணிபுரத்தரச குமாரி மாயாதேவியை மணம் புரிய நிச்சயித்தான். நயவஞ்சகி என்று ஸாமுத்ரிகா லக்ஷணம் சொல்லும் குறிகளை மாயாதேவியிடம் கண்ட ராஜ வைத்தியர் வில்வாத்ரி, இத் திருமணத்தை ஆட்சேபித்து அரசனிடம் அந்தரங்கத்தில் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். அரசன் காமாந்தகாரனா யிருந்ததால் அதை ஏற்கவில்லை.

அதி யௌவனம், அப்ரதிமரூபம் என்னும் காரணங்களும் சேர்ந்து அரசனின் அறிவை மழுங்கச் செய்தன. ஆகவே 'கர்பேச்வரத்வம், அதியௌவனத்வம், அப்பிரதிமரூபத்வம், அவிவேகத்வம்' என்ற நால்வகை வைரிகளும் ஒன்று சேர்ந்து அரசனுக்கு 'அனர்த்தத்தை' விளைவிக்கும் 'குழுவாக' ஏற்பட்டன. இத் திருமணத்தினால் இரு அரசாங்கத்துக்குமிடையில் நெடுநாட்களாயிருந்த பகை தீரும் என்று சில அரசியல் சாணக்கியர்கள் சொன்னதை அரசன் விரும்பி ஏற்றான். ஆனால் இதில் இருந்த ஒரு பரம ரகசியத்தை அரசன் அறியவில்லை. ஆப்தர் சொன்ன புத்திமதிகளை ஏற்கவும் மறுத்தான். இதனால் மனம்நொந்த ராஜ வைத்தியர் வில்வாத்ரி தமது உத்தியோகத்தி லிருந்து தாமாகவே விலகிக் கொண்டார். இதற்குத் தமது முதுமையைக் காரணமாகச் சொன்னார் வில்வாத்ரி. அரசனும் இதை ஏற்றான்; வில்வாத்ரியின் மகன் விச்வம் மிராசு உரிமைப்படி ராஜ வைத்தியனானான்.

மாயாதேவியை அரசன் சந்திரஹாஸன் மணம் புரியும்போது, ராஜகுமாரி மாயாதேவி கண்டிப்பான ஒரு நிபந்தனையின்பேரில் அரசனின் காதலை ஏற்றாள். அதாவது 'வெள்ளாடு' என்னும் பிராணி அர்க்க நகரத்தின் எல்லைக்குள் இருத்தலாகாது. அரசன் வெள்ளாட்டின் பால், தயிர், மோர், இறைச்சி என்பது ஒன்றையும் ஏற்றல் தகாது என்பதுதான் நிபந்தனை.

ராஜகுமாரி ஏதோ ஒரு தேவதையை உபாஸிப்பவளாம். அதனால்தான் இவ்வித 'கனிவு' வெள்ளாட்டின் பால் ஏற்படலாயிற்றாம்! இந்த நிபந்தனையால் அரசனுக்கு மீளாத இன்னலை யூட்டிப் பழி தீர்க்கவேணு மென்ற எண்ணத்துடன் அரசகுமாரி இந்த நயவஞ்சகத் திட்டத்தை நிறுவினாள் என்ற இரகசியத்தை அரசன் அறியவில்லை. ஆனால் ராஜ வைத்தியன் வில்வாத்ரி இதை அறிந்திருந்தான்.

திருமணமான நாளிலிருந்து அரசன் தனது நிர்வாகப் பொறுப்புக்களை எல்லாம் அறவே மறந்து அல்லும் பகலும் அரசி மாயாதேவியுடன் களிகளிலும் கேளிகளிலும் தன்னை மறந்து மதுபானம் ஏற்றுக் 'காமாந்தகூபம்' என்னும்பாழுங் கிணற்றில் வீழ்ந்தவனானான். இப்பாழுங் கிணற்றின் ஆழத்துக்கு முடிவே இல்லை என்ற வகையில் வீழ்ந்த அரசன் விழுந்து கொண்டே இருந்தான். இதன் விளைவாகக் கடுமையான காச நோய் ஏற்பட்டு அதுவும் முற்றி க்ஷய ரோகமாயிற்று. அந் நிலையில்தான் புதிய ராஜ வைத்தியன் விச்வம் அரசனுக்குச் சிகிச்சை செய்ய அழைக்கப்பட்டான்.

அரசனைக் கண்ட பிறகு வீடு திரும்பிய விச்வம் ஒருவிதமான கவலையுடன்

னன் உறக்கமின்றி இருந்த நிலையைப் பற்றித்தான் அவன் மனைவி துளஸி தன் மாமனார் வில்வாத்ரியிடம் ஆரம்பத்தில் கண்ட விதம் தெரிவிக்கலானாள்.

வில்வாத்ரி தன்னை விளித்து அழைத்ததைக் கேட்டு விச்வம் தந்தையிடம் சென்றான். சற்று நேரம் தந்தையும் தனயனும் ஏதோ அரண்மனை விஷயமாகப் பேசிக் கொண்டிருந்தனர். பிறகு வில்வாத்ரி மகனைப் பார்த்துச் சொன்னார் :

''மகனே! அரசனின் நோயைப் பற்றி நீ இவ்வளவு கவலைப்படுவானேன்? வெள்ளாட்டின் பால், மோர், வெண்ணெய், நெய், இறைச்சி இவை ஒன்றும் உன்னுடைய நினைவுக்கே வரவில்லையா ?''

'' வெள்ளாட்டுப்பாலுக்கு மேவியநற்றீபனமாந்
தன்னாட்டு வாதபித்தஞ் சாந்தமாம்—
உன்னிரைப்புச்
சீதமந்தாரஞ் சிலேஷ்ம மறும், புண்ணாறும்
வாதக்லேசமும் போ மாய்ந்து...''

'உம்! இந்தப் பசியின்மை, ஆகாரத்தில் வெறுப்பு ஜீரணக் குறைவு, சாப்பிட்டால் வயிறு கழிதல், இரைப்பு, ஈளை இவை யாவும் ஒரு வாரம் ஆட்டின் பாலைச் சாப்பிட்டு வந்தால் தீருமே!

'' வெள்ளாட்டின் வெண்டயிரோ! மிக்க
நலமாகும் : அதற்
குள்ளாடையாள் மந்தமுண்டென்பார்—
வெள்ளாட்டின்
மோரோ மேகத்தை முத்ராதடித்துவிடும்
பாரோ ரறியப் பகர்.''

'வெள்ளாட்டின் தயிரின் மேலாடையை நீக்கிவிட்டு, பசையற்ற தயிரைக் கூட்டியுண்டால், ஜெரிக்கப்பட்ட ஆகாரத்தின் சத்துப் பொருள்கள் எல்லாம் கிரஹிக்கப்பட்டுத் தாது பரிணாமத்தின் தரம் பன்மடங்கு அதிகரிக்கும்; புஷ்டியுண்டாகுமே!

'' வெள்ளாட்டு வெண்ணெயது விற கரந்தான்
போக்கும்
தன்னாடு பித்தந் தணிக்கும்கான்.....

'க்ஷயமாவது, ஈளையாவது, இருமலாவது! எல்லாவற்றுக்கும் நல்லதாயிற்றே வெள்ளாட்டின் வெண்ணெய்!

'' ஐயைப்போக்கு மதிவாதத்தையுந் தணித்து
மெய்யை வளர்க்கும், விழியைத்துலக்கும்
—வையகத்திற்
பத்தியத்திற்காகும் பயமில்லைவெள் ளாட்டின்
னெய்
நித்தியம்கொண்டாலும் கோண் ணீ''

'கபரோகமெல்லாம் போமே! வாதந் தணிந்து மெய் வளருமே! வெள்ளாட்டின் நெய்யைத் தினந்தோறும் உணவில் கூட்டி வந்தால் எவ்வளவு நல்லது!

''ஏன் ? வெள்ளாட்டின் இறைச்சிதானென்ன?....இதையெல்லாம் நீ அரச

னிடம் தெரிவிக்க வில்லையா? தலைமுறை தலைமுறையாக அரண்மனை உப்பைத் தின்று வருகிறோமே! மகனே! ஏன் மௌனம் சாதிக்கிறாய்?'' என்று கேட்டார் வில்வாத்ரி.

''அப்பா! போதும். இதையெல்லாம் நான் அரசனிடம் தெரிவித்தேன். கூடுமானால் வெள்ளாட்டு மந்தையில், ஆடுகளின் இடையில் புழங்கிக் கொண்டிருப்பதும் நல்லதென்று சொல்வோரும் உண்டு என்றும் சொன்னேன்.

''ஆனால் அரசன் இதொன்றையும் ஏற்கமறுத்தார். அரசியை மணம் புரியும் முன்பு அவருக்குத் தாம் செய்த வாக்குறுதிப்படி வெள்ளாடு என்ற பிராணியே தமது ராஜ்யத்தில் இல்லாமல் செய்து விட்டாராம். வெள்ளாட்டின் பால், தயிர், மோர், வெண்ணெய் இவையொன்றையும் மனத்தாலும் சிந்திப்பது தனது வாக்குறுதியைப் புறக்கணிப்பதாகுமாம். 'வேறு வழியில்லையே அரசே!' என்று கெஞ்சினேன். தாங்கள் சொன்னது போலவே 'தலை முறை தலை முறையாய் அரண்மனை உப்பைத்தின்றதற்கு இதுதானா கடமையைச் செலுத்தும் அழகு? ஒருவாரம் தவணைக்குள் மாற்று மருந்தொன்றைத் தெளிந்து தெரிவிக்க வேண்டும். போ!' என்றார் அரசன். இதுதானப்பா எனது கவலை. நேற்று முதல்...'' என்றான் மகன்.

இதைக்கேட்ட வில்வாத்ரி சிந்தனையில் ஆழ்ந்தார். சிறிது சென்றதும் அவர் முகத்தில் ஒரு குறுநகை ஏற்பட்டது. ''ஆம்! மகனே! ஏதோ பழி வாங்க வேணுமென்று ஒரு சதிகாரத் திட்டமிட்டுள்ளார் என்று அன்றே எனக்கொரு சந்தேகம் ஏற்பட்டது. சொன்னேன். அரசன் ஏற்கவில்லை. இப்போது....? நமது அரசன் இச் சதியினின்றும் மீள வேண்டும்'' என்று சொல்லி மகனை அருகில் அழைத்து ஏதோ ஒரு திட்டத்தை இரகசியமாகச் சொன்னார்.

திட்டத்தைக் கேட்டு வரும்போதே விச்வத்தின் முகம் மலர்ந்தது. இரகசியம் முழுவதும் கேட்ட வுடனே ஒரு குதூகலமடைந்தான். ''அப்படியே ஆகட்டும், அப்பா!'' என்று அவன் மிகுந்த ஆவேசத்துடன் சொன்னான்.

இதைக் கேட்டுக் கொண்டே வந்த துளஸி ''என்ன அத்தான்! திடீரென்று இவ்வளவு உற்சாகம்!'' என்றாள்.

கட்டுக்கடங்காத சந்தோஷத்துடன் விச்வம் ''வெவ்வெவ்வே! போ. சீக்கிரம் குளித்துச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு நான் அரண்மனை செல்ல வேண்டும்'' என்றான்.



கணக்கு வாத்தியார் தம் குழந்தைக ளுடன் போகிறார்!

இருவரும் குதிப்பும் களிப்புமாகச் சிரித்தபடி வீட்டின் பின்கட்டுக்குச் சென்றனர். அந்த அவசரத்தில் கிழவர் வில்வாத்ரி அங்கிருப்பதையே மறந்து விட்டனரோ என்று தோன்றிற்று.

இரண்டுமாத காலமாயிற்று. அரசன் பரிபூர்ண ஆரோக்கியம் பெற்றவனாய்த் தனது அலுவல்களைப் பொறுப்புடன் நோக்கி வருகிறான். அரசிக்குத் தாய்மைப்பேறு கிடைத்து அன்றுதான் இளம் ராஜகுமாரனுக்கு நாமகரணம். தர்பார் மண்டபத்தில் சகல பிரமுகர்களையும் அரசன் வரவேற்றுப் பரிசுகள் வழங்கி வாயார மனமார முகமன் கூறினான். எல்லோரும் விடைபெற்றுச் செல்லும்போது வில்வாத்ரி விச்வம் இருவரையும் சிறிது தன்னுடன் உரையாடிச் செல்ல வேணுமென்று விரும்பினான். அவ்வாறே தனியறையில் சென்று மூவரும் அமர்ந்ததும், அரசன் கேட்டான்:

''வைத்தியப் பிரமுகர்களே! அசட்டுத்தனமான எனது இளமைப் போக்கினால் நான் கொடியதொரு நோய்வாய்ப் பட்டேன். அதனின்றும் என்னை மீட்டதற்கு நானும், அரசியும், அரசகுமாரன் சந்திரபிம்பனும் இந்த ராஜ்யமும் தங்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருப்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். தேகம் தேய்வுபடும் நிலையைத்தரும் கொடிய நோய்க்கு வெள்ளாட்டின் பால், தயிர், மோர், வெண்ணெய், நெய், இறைச்சி ஆகியவை மிகவும் சிறந்த ஔஷதங்களும் ஆகாரமும் ஆகும் என்று தக்க சான்றுகளுடன் ஆஸ்தான வைத்தியர் சொன்ன ஆலோசனையை ஏற்கமுடியாத நிலையிலிருந்த என்னை நீங்கள் மீண்டும் ஆரோக்கிய நிலையைப் பெறச் செய்த விஷயத்தின் சூட்சுமமான தத்துவத்தை அறிய விரும்புகிறேன்.''

இவ்வாறு அரசன் சொன்னபோது, வில்வாத்ரி குறுக்கிட்டார். ''அரசே! காராம் பசுக்களின் பால், தயிர், மோர், வெண்ணெய் நெய்களை உபயோகித்தோம்.

'' கண்ணோயகற்றும், சயரோகந்தான் போக்கும்
மண்ணிலுள்ள பால்தோஷம் மாற்றுங்காண்
—பெண்ணே
இரத்தபித்தம் போக்குமிராச வசியம்...
கறுத்தபசும் பாலதனைக் காண்.''

என்றபடி க்ஷயரோகத்தையும் ரத்த பித்தத்தையும் போக்கும் இயல்பு பெற்றது காராம்பசுவின் பால். ஆனால் வெள்ளாட்டின் பாலுக்குள்ள சில தனிச் சிறப்புக்கள் காராம் பசுவின் பாலுக் கில்லை. வெள்ளாட்டின் பாலுக்கு அத்தனை சிறப்புக்கள் வரக் காரணமென்ன? மேடு பள்ளங்களில் ஏறி இறங்காமல் தாவிக் குதித்தும் தாண்டியும் செல்வதாலும், இரண்டு கால்களை ஊன்றிக் கொண்டு இரண்டு கால்களை மேலே தூக்கித் தாங்கி, எட்டவிருக்கும் தழைகளை எட்டி மேயும் சுபாவமுள்ளதாலும், ஒருவகையான தேக உழைப்பு—தேகப் பயிற்சி அல்லது வியாயாமம் பெறுகிறது வெள்ளாடு. இதனாலும், மிக மிகச் சிறிதளவே தண்ணீர் குடிப்பதாலும் வெள்ளாட்டின் பால் எளிதில் ஜெரித்து உடலில்சேரும் சிறந்த தன்மையைப்பெறுகிறது. மேலும் காரம், கசப்பு என்ற சுவையுள்ள தழைகளையும் பூண்டுகளையும் மேய்வதால் வெள்ளாட்டின் பாலுக்கு வேறு சில தனிக் குணங்களும் உண்டாக வாய்ப்பு ஏற்படுகிறது. தங்களைக் கேட்டுப்பெற்ற காராம்பசுக்களை, தண்ணீரில்லாத—மலைப் பிராந்தியங்களில் ஓட்டிச்சென்று பத்து நாட்கள் மடக்கிவைத்திருந்தபோது வேறுவழியில்லாததால் அப்பசுக்களுக்கும், கிடைத்த பூண்டுகளைத் இன்றால்தான் உயிர் வாழ முடியுமென்ற நிலை ஏற்பட்டது. வெள்ளாட்டைப்போல் தமது ஆகாரங்களை மாற்றிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இந்தப் பசுக்களுக்கு ஏற்பட்டது. ஆகவே அக்காராம் பசுக்களின் பால் முதலியவற்றுக்கு வெள்ளாட்டுப்பாலின் தனிச் சிறப்புகளும் வந்து கூடின. அவற்றை உபயோகித்த தங்களுக்குப் பலனும் கிடைத்தது. வாழ்க எமது அரசன்!'' என்றார்.

அரசன் பூரிப்புடன் முறுவலித்தான்.


பத்மினி கூறுகிறார்: "எப்பொழுதும் நான் உபயோகிப்பது தூய, வெண்ணிற லக்ஸ் டாய்லெட் சோப்!"
பாரதக் கலைச் செல்வியான பத்மினி மிகவும் சுறுசுறுப்பான நட்சத்திரம். எனினும், மணம் கமழும், தூய, வெண்ணிற லக்ஸ் டாய்லெட் சோப்பை உபயோகித்து தமது மேனியை மென்மையுடனும் மழமழப்புடனும் வைத்திருக்க அவர் மறந்து விடுவதில்லை.
லக்ஸ் டாய்லெட் சோப்பை நீங்களே உபயோகித்துப் பாருங்கள். அதி விரைவிலேயே அதன் பேரில் உங்களுக்கும் பற்றுதல் ஏற்பட்டுவிடும்.
லக்ஸ் டாய்லெட் சோப்
LUX TOILET SOAP
சினிமா நட்சத்திரங்களின் அழகுசாதன சோப்
LTS. 543-50 TM

வெள்ளித்திரை



புதுமைப் பித்தன்

நடிகர்கள்: எம். ஜி. ராமச்சந்திரன், டி. எஸ். பாலையா, சந்திரபாபு, சகாதேவன், டி. ஆர். ராஜகுமாரி, பி. எஸ். சரோஜா, ஈ. வி. சரோஜா மற்றும் பலர்.

கதை: கடற் பிரயாணம் செய்து நாடு திரும்பிய இளவரசன் ஜீவகன், தன் தந்தை, மகாராஜா இறந்து விட்டார் என்னும் செய்தியைச் சிறிய தந்தை மூலம் அறிகிறான். ஆனால் மகாராஜா இறக்கவில்லை, சிறிய தந்தையின் சதியினால் இரகசியமாகக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார் என்னும் செய்தி, ஜீவகனின் காதலி வேல்விழியின் மூலம் தெரியவருகிறது. ஜீவகனின் சிறிய தந்தை அரண்மனை வைத்தியரின் உதவியைக் கொண்டு ஜீவகனைப் பைத்தியமாக மாற்ற முயன்று தயாரிக்கிறான். ஆனால் விழிப்புடன் இருந்த வேல்விழி, சாமர்த்தியமாக அந்தச் சதியைத் தவிர்க்கிறாள். சதிகாரர்களின் சதியை அம்பலமாக்குவதற்கும், மகாராஜாவைக் கண்டு பிடிப்பதற்கும் ஜீவகன் காரியப் பைத்தியமாகிறான்; இரவு வேளைகளில் முகமூடியுடன் வெளிப்பட்டுச் சதிகாரர்களைக் கலங்க அடிக்கிறான். இடையில் நாடக நடிகை இன்பவல்லியின் நட்பு கிட்டுகிறது. இன்பவல்லியின் உயிர்த் தியாகத்தினால் காதலர்கள் ஒன்று சேருகிறார்கள்.

நடிப்பு: வேல் விழியாக வரும் பி. எஸ். சரோஜா காதலனோடு சந்திக் கண்டை போடுகிறார்; தாடியுடன் ஆண் மகனாக வருகிறார்; காதலைத் துறந்து கண்ணீர் விடுகிறார்; காதலனோடு கைகோர்த்துக் கொண்டு சந்திர மண்டலத்தில் பவனி வருகிறார். பேர்கூறிய கட்டங்களில் அவர் தோற்றமும் நடிப்பும் நன்றாகவே இருக்கின்றன.

நாடக நடிகை இன்பவல்லியாக டி. ஆர். ராஜகுமாரி நடிக்கிறார். அவர் பல படங்களில் பலகாலமாக நடித்துப் புகழ் பெற்ற பழம் பெரும் நடிகை. "சந்திரலேகா"வில் இன்பமூட்டும் இளநங்கையாக வந்து, வீறு கொண்ட தம் விழிகளின் வீச்சினால் ஒரு வீரனைக் கோழையாக்கி விடுகிறார். இன்னொரு படத்தில் பதிக்கேற்ற பத்தினியாகத் தோன்றி, படம் பார்ப்பவர்களின் பார்வையைப் பனித்திரை மூடச் செய்கிறார். மற்றுமொரு படத்தில் சிற்றன்னையாக வந்து, மாதாவின் மாசற்ற அன்பின் மாண்பை மக்கள் மனத்தில் மலரச் செய்கிறார்.

நடிகர்கள் தங்களுக்கேற்ற பாத்திரங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுவார்களானால் அவர்கள் நடிப்பு சோபிக்காமல் இராது. எப்பொழுதோ ஒரு காலத்தில் ஒரு நடிகர் ஒரு குறிப்பிட்ட பாத்திரத்தை ஏற்று நடித்துப் புகழ்பெற்றுவிட்டால், அதே பாத்திரத்துக்கு அந்த நடிகர் நிரந்தர வாரிசாக இருப்பார் என்று நினைப்பது தவறு.

இது சம்பந்தமாக என் அநுபவத்தில் கண்ட ஓர் உண்மையைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அமெச்சூர் நடிகர்கள் சங்கத்தில் ஒருவர் கிருஷ்ண பரமாத்மாவாக நீண்ட காலம் நடித்து வந்தார். கடைசியில் நாடக ரஸிகர்கள் பலர் ஒன்று கூடி, அவரிடம் சென்று, "தாங்கள் இனிமேலும் நடிக்க விரும்பினால், தசரத பூபதியாகவோ, ராஜரிஷி ஜனக

ராகவோ நடிப்பதுதான் உகந்தது!'' என்று வற்புறுத்தும் வரையில் அவர் நிறுத்தவில்லை.

இன்பவல்லி ஜீவகனைக் காதலிக்க முயன்று தோல்வி யடைகிறாள். அந்தத் தோல்வி இன்பவல்லியாக நடிக்கும் ராஜகுமாரிக்கு வெற்றியைத் தந்து விட்டது! அவர் நடிப் பிலும், ஒரு துடிப்பும் திருப்பமும் ஏற்பட்டு விட்டன. நமக்கும் அது ஒரு வெற்றிதான்! இன்னொரு காதல் காட்சியைப் பார்க்காமல் தப்பினோம் அல்லவா? ஜீவகனைத் தப்புவிக்க முயன்று இன்பவல்லி மரணத்தை ஏற்கிறாள். இந்தக் கட்டங்களில் ராஜகுமாரி நன்றாய் நடித்திருக்கிறார். நாடக நடிகையாக வந்து ஜீவகனின் சிறிய தந்தையை மயக்கிய கட்டத் தில் அவர் நடிப்பு நன்றாயிருந்தது.

(இன்பவல்லி இறப்பானேன் என்பது என் நண்பரின் கேள்வி: அவள் இறக்கா விட்டால் திரைக் கதையில் ஒரு கொலை நஷ்டம்! மேலும், இன்பவல்லி தன் இறுதி மூச்சை விடுவதற்கு முன்பு, காதலர்களின் கரங்களை ஒன்று சேர்த்து வைக்கும் அரும் பணியும் அநியாயமாக நின்றுவிடும் என்பதை மனத் திற் கொள்க!)

எம். ஜி. ராமச்சந்திரன் நாடக மேடையி லேயே நடித்து நல்ல அநுபவம் பெற்றவர்; வெள்ளித் திரையிலும் பல பாகங்களில் நடித்துப் புகழ் பெற்றவர். இந்தப் படத்தில் அவர்தான் ஜீவகன்-புதுமைப் பித்தன். அவர் நடித்திருக்கும் பாத்திரங்களை நாடகபாணியில் குறிப்பிடுவதானால் 'வேலன், வேடன், விருத் தன்' என்பது போல் அடுக்கிக் கொண்டே போக வேண்டும். இந்தப் படத்தில் அவர் என்னென்ன செய்கிறார் என்று பார்ப்போம்.

வேல் விழியைக் காதலிக்கிறார்; வேகமாகக் குதிரையில் போகிறார்; வஞ்சகர்களுடன் வாட்போர் புரிந்து வாட்டமுறச் செய்கிறார். பித்தனாக வந்து பிதற்றுகிறார்; பெண் உடை யுடன் நாடக மேடையில் நடனமாடுகிறார்; முகமூடியுடன் திரிகிறார்; நீரில் மூழ்கு கிறார்; மந்திரவாதியாக வந்து மிரட்டு கிறார்; மகுடி ஊதி நாகங்களை மயக்குகிறார்; சிறிய தந்தையைப் பழி தீர்த்துக் கொண்டு, வேல்விழியின் கரம் பற்றுகிறார்.

ஜீவகனின் தோழனாக வரும் சந்திரபாபு நன்றாய் நடித்திருக்கிறார் என்று சொன்னால் மட்டும் போதாது. ஈ. வி. சரோஜாவுடன் நடனமும் அருமையாக ஆடியிருக்கிறார். ஜீவகனின் தோழனாக நடிக்கும் அவர் நடிப்பும் முக பாவங்களும் பல இடங்களில் ஜீவனோடு விளங்குகின்றன.

ஈ. வி. சரோஜாவின் நடிப்பைவிட இந்தப் படத்தில் அவருடைய நடனமே இடம் பெற் றிருக்கிறது; கவர்ச்சியாகவும் இருக்கிறது.

இந்தப் படத்தைப் பார்த்த என் நண்பர் ''இந்தக் கதையின் பெயர் எவ்வளவு தூரம் படத்துடன் சம்பந்தப்படுகிறது? இது வரை யில் ராஜா ராணி கதைகளிலே வராத புது அம்சம் இந்தப் படத்தில் என்ன இருக்கிறது? சம்பவங்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் முக்கியத்துவம் ஏன் கதைக்குக் கொடுக்கப் படவில்லை....?'' என்று ஏதேதோ கேள்வி கள் கேட்டு என்னைத் துளைத்தெடுத்தார்.

''சர்க்கஸில் வாசிக்கும் வாத்தியங்களுக்கும் அங்கே நடை பெறும் நிகழ்ச்சிகளுக்கும் என்ன சம்பந்தம்? யானையின் தலை மேல் புலியை ஏற்றுவதற்கும், சிங்கத்தின் வாயில் மனிதன் தன் தலையை நுழைப்பதற்கும் என்ன சம்பந்தம்? சுற்றிலும் தீப்பற்றி எரியும் இரும்பு வளையத்தில் புகுந்து வரும் குதிரைக் கும், சர்க்கஸ் காட்சிகளின் இடையே வரும் கோமாளியின் கோணங்கிக் கூத்துகளுக்கும் என்ன சம்பந்தம்?'' என்று அவரைப் பதிலுக்குக் கேட்டேன் நான்.

''....வருகிறேன், ஸார்!'' என்று கூறி அவர் நடையைக் கட்டினார்.

நல்ல அம்சம்: படப் பிடிப்பு பல இடங் களில் பிரமாதமாக அமைந்திருக்கிறது. தொலைவுக் காட்சிகளும், இடிந்த கோட்டை, கொத்தளங்களும் நன்றாய்ப் படமாக்கப் பட்டிருக்கின்றன.

படத்தின் டெம்போ: எம். ஜி. ராமச் சந்திரனும் பாலையாவும் ஏறிச் சண்டை போட்டுக் கொண்டே செல்லும் வண்டி தான் நல்ல 'டெம்போ'வுடன் செல்லுகிறது!

உணர்ச்சியூட்டும் அம்சம்: வணக்கம்!

இந்தப் படத்தை எம். ஜி. ராமச் சந்திரனின் பலவிதப் புகைப் படங் கள் அடங்கிய 'ஆல்பம்' என்று கூறு வதில் தவறில்லை. நடிப்புக் கலையில் அவர் அறிந்திருக்கும் சாகசங்களை யெல்லாம் எல்லோரும் அறிந்து கொள்ளும் வகையில் வெளுத்துவாங்கி விட்டார். ''புதுமைப் பித்தன்'' படத்தில் அவர் ஏற்று நடிக்காத பாகமே இல்லை.

பாலையாவைப் பற்றிக் கூற என்ன இருக்கிறது? படத்தில் சதி செய்யும் சிறிய தந்தை அவர்தான் என்று கூறி விட்டால், இறுதிவரையில் இறுமாப் புடன் இடையூறுகளை எழுப்பும் வில்லன் அவர் என்பதையாரும் எளிதில் தெரிந்து கொள்ளு வார்கள். தம் பாகத்தை அவர் ஒழுங்காக நடித்திருக்கிறார்.





ஹம் பஞ்சி ஏக் டால்கே

உயிர் வாழுவதற்கு மூச்சு இன்றியமையாதது; சினிமாப் படத்துக்குக் காதல் இன்றியமையாதது. ஆனால் அந்தக் காதல் இல்லாமல் ஒரு படம் வந்திருக்கிறது என்றால் அந்தப் படம் உயிரில்லாத உடம்பு மாதிரி என்று நினைப்பீர்கள். அதுதான் இல்லை.

படத்தில் காதல் மட்டும்தான் இல்லை என்று நினைக்க வேண்டாம். காதலனும் இல்லை. காதலியும் இல்லை. கதையும் இல்லை; பிரமாதமான 'சஸ்பென்ஸும்' இல்லை; விசேஷக் காட்சி ஜோடனைகளும் இல்லை; திடுக்கிடும் சம்பவங்களோ, ரயில் விபத்தோ, விமான விபத்தோ (ஒரு சைக்கிள் விபத்துக் கூட) இல்லை. கத்திச் சண்டை, மல் யுத்தம் முதலியன எதுவும் இல்லை. பின் என்னதான் இருக்கிறது?

தேச சேவை இருக்கிறது: 'ஏழை யென்றும் அடிமை என்றும் எவனும் இல்லை ஜாதியில்' என்ற உயர்ந்த தத்துவம் இருக்கிறது: புத்திர வாஞ்சை இருக்கிறது: வஞ்சமற்ற பிஞ்சு உள்ளங்களின் இனிமையான பிரதிபலிப்பு இருக்கிறது: நட்பின் பெருமை இருக்கிறது: குழந்தைகள் நடிக்கும் நாடகம் இருக்கிறது: நாடகத்தில் நல்ல பாட்டுக்கள் இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் மேலாகப் படம் பதினோராயிரத்துச் சொச்சம் அடிகள் தான் இருக்கிறது! இன்னும் என்ன வேண்டும்?

ராவ்பகதூர் கைலாசநாத்தின் ஏக புத்திரன் ராஜன்; அந்தஸ்து மோகம் கொண்ட கைலாசநாத் தம் புதல்வன் மற்றப் பள்ளி மாணவர்களுடன் சேர்ந்து விளையாடுவதையே வெறுக்கிறார். ஆனால் ராஜனுடைய மனம் மாணவர்களுடன் பயிலுவதையே நாடுகிறது.

விடுமுறை நாட்களில் மாணவர்களுடன் வெளியூருக்குச் சென்று பொதுநல சேவையில் ஈடுபடுகிறான் ராஜன்; நாடகங்கள் நடத்தி நிதி வசூல் செய்து பள்ளிக்கூடங்களுக்கு உதவுகிறான். கைலாசநாத் ராஜனை அழைத்து வருவதற்குத் தம் வேலைக்காரனை அனுப்புகிறார்; காரியதரிசி மிர்ஸாவை அனுப்புகிறார்; ஒன்றும் பயன்படாமல் போகவே, தாமே அந்த ஊருக்குச் செல்லுகிறார். அவர் அங்கு போவதற்குள் மாணவர்கள் ஊர் திரும்பிவிடுகின்றனர். இதனால் ஏமாற்றம் அடைந்து ஊர் திரும்பிய கைலாசநாத் ராஜனைக் கடுமையாகத் தண்டிக்கத் தீர்மானிக்கிறார்; அவனை முதலில் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பாமல் வீட்டிலேயே வைத்துக் கொள்ளுகிறார்; ஒரு மாஜி ராணுவ அதிகாரியை 'ட்யூஷன்' உபாத்தியாயராக ஏற்பாடுசெய்கிறார்; அவர் வந்த சமயம் ராஜனும் அவன் நண்பன் சட்பட் என்னும் சிறுவனும் அறையில் இருக்கின்றனர். அவரைக் கண்டதும், பையன்கள் இருவரும் தப்பியோடிச் சுவர் ஏறிக் குதிக்க முற்படும் போது சட்பட் அவர் கையில் அகப்பட்டுக் கொள்கிறான்; தப்பி ஓடிய ராஜன் அப்பாவுக்குத் தெரியாமல் தினந்தோறும் பள்ளிக்கூட நாடக ஒத்திகைக்குப் போய் வருகிறான். ராஜனுக்குப் பதிலாக, சட்பட் உபாத்தியாயரிடம் பாடம் சொல்லிக்கொள்கிறான். கைலாசநாத்துக்கு வந்த கடுங்கோபம் ஒரு ஏழை மாணவனுடைய தாயின் அறிவுரையால் தணிகிறது; அவர் அறிவும் விசாலமடைகிறது.


இந்தக் கதையில் பையன்கள்தான் முக்கியமானவர்கள்; அவர்களுள் ராஜனாக நடிப்பவனும், தெருவில் பத்திரிகை விற்கும் பையனாக வரும் சதீஷ்வியாஸும் மிகவும் உணர்ச்சியுடன் நட்சத்திர நடிகர்களும் வியக்கும் வண்ணம் அபாரமாக நடித்திருக்கின்றனர். பல இடங்களில் படம் பார்க்கிறோம் என்கிற எண்ணமே எனக்கு மறந்துவிட்டது. உண்மை நிகழ்ச்சிகளையே நேருக்கு நேர் பார்ப்பது போல் இருந்தது.

சட்பட் என்ற குறும்புக்கார இளைஞன் பாகத்தை, சிறுமி டெய்ஸி இரானி ஏற்று அழகாக நடித்திருக்கிறாள். அவள் பார்வையும், பேச்சும், நடிப்பும் பிரமாதம். அதிகமாகப் பாராட்டினால் கண்பட்டு விடும்.

'' நாங்கள் ஒரே கிளையிலுள்ள பறவைகள்'' என்னும் பொருள் கொண்ட இப்படம் ஏ.வி. எம். புரொடக்ஷன்ஸார் துணிந்து புனைந்த சித்திரம் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய படங்களை யாரும் வரவேற்பார்கள். பழக்கப்பட்டுப் போன காதல் காட்சிகளும், ஏமாற்றங்களும், சதிகளும் இல்லாமற் போனதினால் படத்தின் கவர்ச்சி குறைந்து போய்விடவில்லை.

ஒவ்வொரு 1000 மைல்களுக்கும் 150 மைல்கள் வரை இலவச ஓட்டம்



கால்டெக்ஸ் ஆர்பிஎம் 20-40 ஸ்பெஷல்

உபயோகித்துப் பெறலாம்


SAE ரகங்கள் 20, 30, 40 இவைகளின் எல்லா குணங்களும் ஒருங்கே சேர்ந்துள்ள இந்த மோட்டார் ஆயில், 15 சத விகிதம் வரை பெட்ரோல் மற்றும் 33 சத விகிதம் எண்ணெய் இவைகளை மிதப்படுத்துவதுடன், சக்தியையும் உற்பத்தி செய்கிறது இதோ அது வேலை செய்யும் விதம்,



இது SAE 20

சுலபமாக ஸ்டார்ட் செய்யும்பொழுது

நீங்கள் கார் எஞ்சினை ஸ்டார்ட் செய்யும்பொழுதெல்லாம், உங்கள் கார் எஞ்சினுக்கு, இலேசானதும் எளிதில் ஓடக்கூடியதுமான SAE 20 எண்ணெய் அவசியம். அப்பொழுதுதான் தேயும் உறுப்புகளுக்குப் பாதுகாப்பு ஏற்படுகின்றன. பெட்ரோல் மிச்சமாகிறது. பாட்டரி செலவு குறைகிறது. ஏனெனில், கெட்டியான எண்ணெய்களைக் காட்டிலும் சுமை குறைகிறது.



இது SAE 30

நீங்கள் ஓட்டிச்செல்லும்பொழுது


உங்கள் கார் எஞ்சினில் சூடேறும்பொழுது, எஞ்சின் சூட்டைக் குறைக்க, வழிந்தோடாத 'இறுகி' நிற்கும் SAE 30 அதற்கு அவசியம். உங்களுக்கு அவசியமானபொழுது, SAE 30 ஆயில் போல் பயனளிக்கும் ஆர்பிஎம் 20-40 ஸ்பெஷல் உபயோகியுங்கள்.



இது SAE 40

திறந்த வெளி ரஸ்தாவில் போகும்பொழுது

உங்கள் கார் எஞ்சின் இயங்கச் சரியான உஷ்ணத்தை அடையும்பொழுது, வழிந்தோடாத 'இறுகிய' தன்மையுள்ள SAE 40 எண்ணெயின் பாதுகாப்பு அவசியம். இந்தப் புதிய ஆர்பிஎம் மோட்டார் எண்ணெய், எவ்வித மோட்டார் ஓட்டும் நிலைகளிலும் உங்கள் கார் எஞ்சின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.




கால்டெக்ஸ் ஆர்பிஎம் 20-40 ஸ்பெஷல்

உபயோகித்து



அது எப்படி ஓடுகிறதென்பதைக் கவனியுங்கள்!



திலகம் கையில் ஒரு தபால் கார்டை வைத்துக்கொண்டு வெகு நேரமாக நின்றுகொண்டிருந்தாள். வெகு தூரத்துக்கு அப்பால் ரன்னர் ரங்கபாஷ்யம் வந்துகொண்டிருப்பது தெரிந்தது. அவன் தலையைக் கண்டதும் அவளுக்கு உள்ளத்தில் ஒருவகை மகிழ்ச்சி பொங்க ஆரம்பிக்கும்.

அவன் அருகில் வந்தவுடன் கையிலிருந்த கார்டை அவனிடம் கொடுத்து, "இதைத் தபாலிலே சேர்த்துவிடு. அப்புறம் மதியத்துக்குத் திரும்பி வருகிறபோது இரண்டு கவர் இரண்டு கார்டு வாங்கிக்கொண்டு வா. காசு அப்புறமா தரேன்!" என்ருள் திலகம்.

"உத்தரவுப்படியே ஆகட்டும். ஏது இப்போதெல்லாம் காகிதம் எழுதுகிறது ரொம்ப அதிகமாகப் போச்சு போலிருக்குதே. இனி மேல் இங்கேயிருந்தே ஸ்பெஷலா ஒரு மெயில் பை கட்டி, பெரிய போஸ்டாபீஸுக்குக் கொண்டு போகணும் போலிருக்குதே!" என்ருன் ரங்கபாஷ்யம், திலகத்தை ஒரு குறும்புப் பார்வை பார்த்துக் கொண்டு.

"இந்தா, இந்த அக்கப்போரெல்லாம் உனக்கு ஏன்? எவ்வளவு தபால் குவிந்தாலும் சுமந்து போகிறதுக்குத்தானே இருக்கே நீ? இதெல்லாம் என்ன கேள்வி? எங்கப்பா சர்க்கார் கண்டிராக்டராயிட்டாரே. இனிமேல் கடுதாசு போக்குவரத்து அதிகமாகத்தான் இருக்கும்!" என்ருள்.

"சர்க்கார் கண்டிராக்டராயிட்டாரா? சரி; பணத்துக்குக் குறை கிடையாது இனிமேல்! மாடி வீடு கட்டிடுவீங்க. நீ ஏற்கனவே பணக்காரப் பொண்ணு. இன்னும் பணக்காரியாகப் போனுல் உனக்கும் எனக்கும் அவ்வளவுதான்!" என்ருன் ரங்கபாஷ்யம்.

"ஏன் அப்படியெல்லாம் சொல்றீங்க? நான் எப்பொழுதும் ஒரே மாதிரியேதான் இருப்பேன். நீங்களும் எப்பொழுதும் இப்படியேவா இருந்துடுவீங்க?..."

"எனக்கு என்ன வாழ்வு வரப் போவுது, திலகம்? பத்து வருஷமா இந்த ரன்னர் உத்தியோகம்தான். தொடர்ந்து இதுதான் நிலைக்கும். நான் ஒண்ணு வேணுமானுல் செய்ய முடியும். மெயில் பையைத் தூக்கிக் கொண்டு இப்போ ஓடுகிறதைவிட இன்னும் கொஞ்சம் வேகமாக ஓடலாம்! அதுதான் எனக்கு ஏற்படக்கூடிய முன்னேற்றம்!"

ரங்கபாஷ்யம் இப்படிச் சொன்னபோது தானும் கொஞ்சம் சிரித்துக் கொண்டேதான் சொன்னுன். திலகமும் சிரித்துவிட்டாள். அந்தச் சிரிப்பு அவளது அழகின் ஒளியை மெருகிட்டு விட்டது. ரங்கபாஷ்யம் மௌனமாக அவளை ஏறிட்டு நோக்கினுன். அவள் வெட்கத்தினுல் தலை குனிந்தாள்.

கொள்ளிடத்தின் கிளையான ராஜன் வாய்க்கால் வயல் கரையோரமாக இருந்த ஒரு கிராமத்திலிருந்து தினமும் மெயில் பை எடுத்துக் கொண்டு போகும் உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்தான் ரங்கபாஷ்யம். அவன் தகப்பனுர் பார்த்து வந்த உத்தியோகம் அது. சின்ன வயசிலேயே அவரிடமிருந்து தன் பெயருக்கு அதை மாற்றிக் கொண்டு விட்டான்.

அந்தக் கிராமத்தின் சிறிய தபாலாபீஸில் ஒரு தூணில் கட்டியிருந்த தபால் பெட்டியில் இன்றைக்கெல்லாம் ஏழெட்டு எண்ணிக்கைக்குமேல் தபால்கள் விழாது; ஆனுல் ரங்கபாஷ்யம் மெயில் பையுடன் ஏழு மைல்கள் நடந்து (அல்லது ஓடி) சப் போஸ்டாபீஸை அடையும்போது இருபது இருபத்தைந்து தபால்களுக்குக் குறையாமல் அவன் கையில் இருக்கும். அவ்வளவும் அந்த ஏழு மைல் தூரத்துக்கிடையே அங்கங்கே கையில் பெறும் தபால்கள் ஆகும்! இந்தக் கையிலும் அந்தக் கையிலும் இடுப்பிலுமாக ஒரே கார்டு கவர் மயமாகத்தான் பெரிய தபாலாபீசுக்குள் நுழைவான் அவன்.

கிராமத்துத் தபாலாபீஸில் கட்டிச் சீல் இடப்பட்ட மெயில் பையைத் தோளில் மடித்துப் போட்டுக் கொண்டு கையில் அந்த ஈட்டியையும் எடுத்துக் கொண்டு ரன்னர் ரங்கபாஷ்யம் கிளம்பி விட்டானுல் வழியிலே மரம் மட்டைகள் இருந்தால்கூட அவை வழி விலகி நிற்கும் என்று சொல்லலாம். இது அவனுடைய இயல்பான ரன்னர் கோலம்!

சப் - போஸ்டாபீஸுக்குச் சிதம்பரத்திலிருந்து பஸ் மூலமாக 'மெயில்' வரும். அந்த மெயில் பஸ் வருவதற்குச் சரியாக ஐந்து நிமிஷம் முன்னுல் வந்து விடுவான் ரங்கபாஷ்யம். முதல் காரியமாக, தங்களூர் மெயில் பையை உடைத்து, போஸ்ட்மாஸ்டர் பார்வையிட்டபின் தபால்களுக்கு முத்திரை குத்தி விடுவான். பிறகு, அந்த போஸ்டாபீஸ் சிப்பந்திகளுடன் கலந்து கொண்டு மற்றுமுள்ள காரியாலய வேலைகளில் ஈடுபடுவான்.

சப் - போஸ்டாபீஸ் தபால்காரர் தபால்களைப் பிரித்துக் கொண்டு பட்டுவாடாவுக்காகக் கிளம்பிய பிறகு ரங்கபாஷ்யம் தங்கள்

கிராமத்துக்குரிய பட்டுவாடாத் தபால்களை முத்திரையிட்டு, பையில் போட்டுக் கட்டிச் சீல் வைத்து விடுவான். பிறகு கையில் ஈட்டியுடன் பையையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டால் நடுப்பகல் சரியாக ஒரு மணிக்குத் தன் கிராமத்துத் தபாலாபீஸை அவன் அடைந்து விடுவான்.

அந்த வேகாத வெயிலில் அப்படி அவன் வரும்போது வெயிலிடையே நிழல்போலத் திலகம் அவனுக்காகக் காத்திருப்பாள். இந்தச் சந்திப்பு ஒரு நாளில் இரண்டு முறைகள் நடைபெறுவதாகும். நீர்மோர், இளநீர், பனை நுங்கு இப்படி ஏதாவது அவனுக்குத் தாக சாந்திக்கான பொருளை வைத்துக் கொண்டு விழிகளை வழிமேல் வைத்தபடி திலகம் நின்றிருப்பாள். அவனைக் கண்டவுடன் வெயில் நிழலாகத் தோன்றி விடும் ரங்கபாஷ்யத்துக்கு! உடல் களைப்பு புனிதமாகத் தோன்றும்.

திலகத்தை இப்படி யதேச்சையாகத்தான் சந்தித்தான் அவன். சாதாரண மெயில் ரன்னரிடம் தபாலில் சேர்க்க வேண்டிய தபால்களைக் கொடுப்பதற்கென்று திலகமும் அவனுக்காக முதலில் சாதாரணமாகத்தான் சாலையோரமாகக் காத்திருந்தாள். நாளாவட்டத்தில் தபால்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவனைச் சந்திப்பதற்கென்று காத்திருக்கும் அளவுக்கு அவளது உள்ளத்தில் ஒரு உணர்வு ஏற்பட்டு விட்டது. அது காதல் என்பதை, பாவம், அந்தக் கள்ளங் கபடமற்ற கிராமியப் பெண்ணான திலகம் எப்படி அறிந்து கொள்வாள்?



ரங்கபாஷ்யத்தின் தபால் மார்க்கத்தின் நடுவில் ஒரு பர்லாங்கு தூரத்திலிருந்த கிராமத்தைச் சேர்ந்தவள் திலகம். கோபுரத்துக் கூண்டிலிருந்து புறப்படும் புறாமாதிரி யதேச்சையாக ஒரு மைல் சுற்று வட்டாரத்துக்கு எங்கே வேண்டுமானாலும் அவள் போவாள்.

ரங்கபாஷ்யத்தை அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. தபால் பையுடன் அந்தக் கட்டிளங் காளை கிராமத்திலிருந்து வரும்போதும் சரி, திரும்பிப் போகும்போதும் சரி, அவனுடைய கம்பீரமான தோற்றத்தைக் கண்டு வியந்தபடி சாலையோரம் இருந்த சுமைதாங்கியின் மீது உட்கார்ந்திருப்பாள்.

திலகமும் நல்ல அழகி. அவளது சுழலும் விழிகள் ரங்கபாஷ்யத்துக்கு இந்த உலகத்திலேயே இரு விந்தைப் பொருள்களாகத்தான் தோன்றின. அடிக்கடி அவளிடம் அதைப் பற்றிக் கூடச் சொல்வான்:

''அம்மா, பரதேவதையே! நீ அந்தக் கண்களை மாத்திரம் அப்படிச் சுழற்றிச் சுழற்றிப் பார்க்காதேயேன்! என் உடலை என்னவோ செய்கிறதே!'' என்பான் அவன்.

''நானும்தான் என் கண்ணைமூடிக்கொண்டு விடவேணும் என்று உன்னைப் பார்க்கும் போதெல்லாம் நினைக்கிறேன்...''

''ஐயையோ ! என்னைக் கண்டால் பார்க்கவே பிடிக்கவில்லையா உனக்கு?''

'' உன்னைப் பிடிக்கிறது! ஆனால், உன் கையிலே இருக்கிறதே, அந்த ஈட்டியைக் கண்டால்தான் பிடிக்கவில்லை. அதைக் கண்டால் எனக்கும்தான் என்னமோ போல இருக்கிறது !''

''அந்த ஈட்டியை எனக்குச் சர்க்காரிலே தற்காப்புக்காகக்

கொடுத்திருக்கிறாங்க. மெயில் பைக்கு ஒன்றும் ஆபத்து வராமல் இருக்க இது ஒரு முக்கியமான ஆயுதம் !''

''நல்ல வேளை ! என் கண்கள் ஏதோ கழுது துன்னு சொன்னீங்களே; அது பிடிக்காமல் அதைத் தோண்டத்தான் இந்த ஈட்டியைத் தினம் எடுத்து வருகிறீர்களோன்னு நினைச்சேன். இன்றோடு அந்தப் பயம் விட்டுப் போச்சு...அது சரி, இந்த ஈட்டிக்குக் குண்டலம்மாதிரி பித்தளை வளையங்கள் மாட்டியிருக்குதே, எதற்காக ?''

''அதுவா ? நீ அழகாயிருந்தால் மட்டும் போதாது என்று விதம் விதமான நகையெல்லாம் போட்டிருக்கே, இல்லையா? அதேமாதிரி தான் இதுவும்!''

'' ஆமாம் ; ஒன்னு கேட்கிறேன். இந்த ஈட்டிக்கு இதுவரை ஏதாவது இரை கிடைச்சிருக்கா? உங்கள் தபால் பை மேலே யாராவது ஆசைப்பட்டிருக்கிறாங்களா ?''

''இதுவரை அதுமாதிரி ஒன்றும் நடக்கவில்லை ! உன்னுடைய வாய் முகூர்த்தம் இனிமேல் எப்படியோ ?''

''ஆனால் அந்தத் தபால் பையிலே ஒன்றும் இருக்காதென்றும், இருக்கிற நாலைந்து கார்டு கவர்களும் உங்க கையிலேயும் மடியிலேயும் தான் இருக்கின்றன என்றும் தெரியாதவங்க இந்தப் பக்கங்களிலே இருக்கிறாங்களா ?''

திலகம் குறும்பாகக் கேட்ட இந்தக் கேள்விக்கு ரங்கபாஷ்யம் பதில் ஒன்றும் சொல்லவில்லை. தலை குனிந்தபடி ஒரு புன்னகை புரிந்தான். அந்தப் புன்னகையிலும் திலகம் மெய்ம்மறந்தாள்.

ரங்கபாஷ்யத்தின் தற்காப்பு ஆயுதத்துக்கு இதுவரையில் ஏதாவது இரை கிடைத்திருக்கிறதா என்று திலகம் விளையாட்டாகத்தான் அன்று கேட்டாள். அவள் அப்படிக் கேட்ட சில நாட்களுக்கெல்லாம் 'ஈட்டி' என்றும், 'இரை' என்றும் அந்தக் காதலர்கள் நிஜமாகவே பேசுகிற சந்தர்ப்பம் வந்து விட்டது.

திலகத்தைக் கல்யாணம் செய்து கொள்வதற்காகக் கனவு கண்டு அவளது அழகில் மயங்கி அவள் தகப்பனாரை வசப்படுத்த முயன்று கொண்டிருந்தான் சந்திர காக என்ற ஆசாமி. அவனது குணமும் நடத்தையும் திருப்திகரமானதாயில்லை என்று திலகத்தின் தகப்பனார் தெரிந்து வைத்திருந்தார். ஆனாலும் அவன் முரடன் என்ற காரணத்தால் திலகத்தின் கல்யாண விஷயமாக அவனிடம் அவர் உண்டு என்றோ, இல்லை என்றோ ஒரு முடிவும் சொல்லாமல் இருந்தார்.

இந்த நிலையில்தான் ஒரு நாள் சந்திரகாக திலகத்தின் தகப்பனாரிடம் வந்து, ''எனக்குத் தெரியுது, மாமா. திலகம் கல்யாண விஷயமாக அந்த ரன்னர் பயல் குறுக்கே நிற்கிறான் என்றுதான் நீங்க மறுப்புகிறீங்க. அவனிடம் ஒரு அடாவடி சண்டை பிடித்து, அவன் கையிலே இருக்கிற மெயில் பையைப் பிடுங்கி என் ஓட்டுக் காளவாயிலே போட்டு விடுகிறேன். பையைத் தொலைச்சதாக அவன் பேரிலே நாமே சர்க்காரிலே வழக்கு எழுதச் சொல்லி அவனை ஜெயிலுக்கு அனுப்பிவிடச் சொல்லலாம்!'' என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

இதைப் பற்றிச் சொல்வதற்காகத் திலகம் ரங்கபாஷ்யத்தைச் சந்திக்கப் பறந்து ஓடினாள். ஏறு நடை போட்டு வந்து கொண்டிருந்தான் அவன். ஈட்டி வளையங்கள் ' கிண் கிண் ' என்று சப்தித்தன.

'' சந்திரகாகக்குப் புத்தி கோணலா வேலை செய்யுது. உங்களை வலுச் சண்டைக்கு இழுத்து, சர்க்கார் மெயில் பையைப் பிடுங்கிக் காளவாயிலே போட்டுவிடப் போகிறானாம். ஜாக்கிரதை! ஜாக்கிரதை ! நீங்கள் இந்த விஷயத்திலே ரொம்பக் கவனமாக இருக்க வேணுமே. உங்களுக்கும் ஆபத்து ஒன்றும் வராமல் பார்த்துக் கொள்ள வேணுமே !'' என்று கவலையும் பதற்றமும் தொனிக்கக் கூறினாள் திலகம்.

'' எனக்கா ஆபத்து ! ஆபத்துத்தான் தனக்கு வேணும்னு அச்சாரம் கொடுக்க முன் வந்திருக்கானே அந்தப் படுபாவிப் பயல் !...ம் ...இப்பொழுதுதான் நாலு நாள் முந்தி வேடிக்கையாகப் பேசிக்கொண்டோம். விளையாட்டு வினையாகப் பார்க்கிறது. அந்தப் பயல் இந்த ஈட்டிக் கம்பியை யெல்லாம் தாண்டி ஜெயில் கம்பி மேலே ஆசைப்பட்டு விட்டான் போலே இருக்குது ! என்னை ஜெயிலுக்கு அனுப்ப வேணும்னு உளறுகிறான் போலிருக்கு. சரி ; நீ கவலைப்படாமல் போய் வா, திலகம். நாம் இனிமேல் நாலு நாட்கள் பொறுத்துச் சந்திப்போம். நானே உங்கள் அப்பாவை வந்து சந்திக்கிறேன். நடுவிலே ஏதாச்சும் அர்ஜண்ட் தபால்னு சாலையிலே சுமைதாங்கிக்கிட்டே வந்து நில்லு. இல்லாத போனால் வர வேண்டாம் !'' என்று சொல்லி விடை பெற்றுக் கொண்டான் ரங்கபாஷ்யம்.

அதற்கு மறுநாள் எதிர்பாராவிதமாக மீண்டும் திலகம் அவனைச் சந்தித்தாள். '' நாளைக்கு உங்களிடம் வம்பு பண்ண வரப் போகிறதாக அந்தப் பாவி சந்திரகாக சொல்லிக்கிட்டிருக்கிறான் '' என்று எச்சரிக்கை கொடுத்து விட்டுப் போனாள்.

ராஜன் வாய்க்காலில் தண்ணீர் அமைதியாக ஓடிக் கொண்டிருந்தது. வாழ்க்கையின் பல நிலையாமை நிலைகளுக்கிடையில் அந்த நீரோட்டம் ஒரே நிலையாக ஓடிக் கொண்டிருந்ததை நிம்மதியா



கப் பார்த்து அநுபவித்துக் கொண்டே மிக மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தான் ரங்கபாஷ்யம். அவன் தோள் மேல் வழக்கம் போல் தபால்பை தொங்கிக் கொண்டிருந்தது.

லயன்கரையை விட்டுக் கீழே இறங்கிக் குறுக்குச் சாலையில் பத்தடிகூட நடந்திருக்க மாட்டான் ரங்கபாஷ்யம்; 'டேய்! நில்லுடா' என்ற குரல் கேட்டுத் திரும்பினான். சந்திர காசுவும் இரண்டு ஆட்களும் மரத்தின் மீதிருந்து கீழே இறங்கி வந்தனர்.

'' துரைவாள் நினைச்ச நேரத்துக்குக் கட்டு எடுத்துக்கிட்டுப் போகிறாப்போல இருக்கு!'' என்று ஆரம்பித்தான் சந்திரகாசு.



'' கட்டுப் போய்ச் சேர ஒரு குறிப்பிட்ட நேரம் உண்டு என்று அந்தப் பெரிய துரையை விட எனக்குத் தெரியும்!'' என்று ரங்கபாஷ்யமும் விறைப்பாகப் பதில் சொன்னான்.

இப்படி ஆரம்பித்த வாக்குவாதம் முற்றியது. கடைசியில் தபால் பையைப் பிடுங்கிக் கொண்டு சந்திரகாசு, '' போடா! எந்த நேரத்துக்குப் போகணுமோ அந்த நேரத்துக்குத் தபாலாபீசுக்குப் போ!... இன்றைக்குத் தான் கடைசி நாள் உத்தியோகம்; போ!'' என்று கர்ஜனை புரிந்தான்.

ரங்கபாஷ்யம் திரும்பித் தன் கிராமத்துக்கே போய் விட்டான். சந்திர காசு, தான் கங்கணம் கட்டியபடியே அந்தப் பையைக் கொண்டு போய்க் காளவாயில் விட்டெறிந்து விட்டு வீட்டுக்குப் போய்விட்டான்.

மறுநாள் சப்-போஸ்டாபீஸ் முன் ஒரு பெரிய கும்பல் கூடியிருந்தது. சந்திரகாசுவும் இன்னும் சிலரும் கையில் ஒரு மகஜருடன் நின்று கொண்டிருந்தார்கள்.

'' ரங்கபாஷ்யம் தபால் கட்டோடு ஓடி விட்டானாமே!'' என்று ஜனங்கள் பேசிக் கொண்டார்கள்.

'' சிதம்பரத்திலிருந்து போலீஸ் வருகிறதுக்காகக் காத்துக்கிட்டிருக்காங்க அதிகாரிகள்!'' என்று அவர்கள் பேசிக் கொண்டார்கள்.

சிதம்பரத்திலிருந்து போலீஸ் வந்தது. கொஞ்ச நேரத்துக் கெல்லாம் ரங்கபாஷ்யத்தை யாரோ அழைத்து வந்தார்கள்.

அதன் பிறகுதான் தான் கொணர்ந்திருந்த மகஜரைப் போஸ்ட் மாஸ்டரிடம் கொடுத்தான் சந்திரகாசு. அதை வாங்கிப் பார்த்த போஸ்ட்மாஸ்டர், '' சந்திரகாசு வீணாக ஏகமாகச் சிரமம் எடுத்துக் கொண்டிருக்கிறார். தபால் கட்டு தபாலாபீஸுக்குப் போய்ச் சேரவில்லை என்று புகார் கொணர்ந்திருக்கிறார். தபால்கட்டு இந்த ஆபீஸுக்கு வர வேண்டிய நேரத்தில் வழக்கம் போல் வந்து விட்டது!'' என்று பேசி, தீர்மானம் வைத்தாற்போல் மௌனமாக இருந்தார்.

'ஆ!' என்று ஓரடி பின் வாங்கிச் சென்றான் சந்திரகாசு.

மீண்டும் போஸ்ட்மாஸ்டர் பேசினார்: '' சர்க்கார் உத்தியோகஸ்தனை வழிமறித்துத் தகாத முறையில் நடந்து கொண்டதற்காக, ரன்னர் ரங்கபாஷ்யம் குறிப்பிடும் நபர்களைப் போலீஸார் தங்கள் பாதுகாப்பில் அழைத்துச் செல்லலாம் என்று உத்தியோக தோரணையில் கூறுகிறேன்!'' என்றார்.

அடுத்த கணம் ரங்கபாஷ்யம் காண்பித்த சந்திரகாசு கோஷ்டியாரைப் போலீஸார் கைது செய்தனர். சந்திரகாசு ஓரேயடியாகக் கூச்சலிட்டான்: '' அந்தத் திருட்டுப் பயல் ரங்கபாஷ்யம் பையைக் காளவாயில் எறிந்து விட்டு அதிலிருந்ததை சுருட்டிக் கொண்டு போனதை நான் கண்ணால் பார்த்தேன்!'' என்றான். அவன் பேச்சை யாரும் லட்சியம் செய்யவில்லை. போலீஸார் அந்தக் கோஷ்டியுடன் சிதம்பரத்துக்குப் புறப்பட்டு விட்டனர்.

சுமைதாங்கி மேல் ஏறி வாகவமாக உட்கார்ந்திருந்தான் திலகம். ரன்னர் கோலத்தில் ரங்கபாஷ்யம் ஒரு கையில் மெயில் பையுடனும் இன்னொரு கையில் சதங்கை குலுங்கும் ஈட்டியுடனும் நின்று கொண்டிருந்தான்.

''ஒரு சந்தேகம்; சொல்ல முடியுமா?'' என்று கேட்டான் திலகம்.

''உன் சந்தேகத்தை யெல்லாம் தீர்த்து வைக்கிறதுதானே என் முதல் வேலை! என்ன சொல்லு?'' என்றான் அவன்.

''இப்போ எனக்கு எதிரிலே யிருக்கிற ரங்கபாஷ்யம் ஒரே ரங்கபாஷ்யம்தானே? இவரிலே இரண்டு பேர் இல்லையே! அதுமாதிரி உங்கள் ஊர் தபாலாபீஸுக்கு மெயில் பை ஒன்றுதானே இருக்க முடியும்! காளவாய்க்கு அர்ப்பணமான அந்தப் பை ஏது?''

''ஓ! அதுவா? எங்கள் ஆபீசுக்கு மெயில் ஒண்ணுதான். பைகள் ஒன்றுக்கு மேலே நிறைய இருக்கு. அன்றைக்கு மெயில் பையை, பாவம், எனக்காக எங்கள் பிராஞ்சு போஸ்ட் மாஸ்டரே சுமந்துகிட்டு வேறே வழியாய்ப் போய் விட்டாரு. நான் ஒரு பழைய பையிலே கொஞ்சம் குப்பையை நிரப்பிச் சீல் வைத்து அந்தப் பாவி சந்திரகாசு ஆசைப் பட்டானேன்னு கொண்டு வந்தேன்...''

''ஓஹோ! ரொம்பத் திறமையா வேலை செய்திருக்கீங்க! நீங்களும் உங்கள் தபால் பையும் வாழ்க!'' என்றாள் திலகம்.

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam.

உங்கள் மனதிற்குகந்த பவுடர்

வசீகர நறுமணங் கமழ்வதான...

பியர்ஸ் டால்கம்



கொள்ளைகொள்ளும் நறுமணம், சருமத்தோடு குலவும் இன்பம், பியர்ஸ் மென்மை — இவ்வனைவையும் உங்களுக்கு அளித்திடுவது **பியர்ஸ் டால்கம்!** உன்னதமாக நறுமணமூட்டப் பெற்ற இந்தப் பவுடரை உபயோகித்தால் கோடையின் உச்சநிலையிலும் நீங்கள் மாறாத புது மலர்ச்சியுடன் நாள் முழுவதும் மிளிர முடியும். இள மஞ்சள் நிறமும் பச்சை நிறமும் எடுப்பாக அமையப்பெற்ற டின்களில் வரும் **பியர்ஸ் டால்கம்** பவுடரை வாங்குங்கள்.





மேனியின் பராமரிப்புக்கு, க்ளிஸரின் அடங்கிய **பியர்ஸ் சோப்** உபயோகியுங்கள். தூய்மையே உருவான சிறந்த சோப் பியர்ஸ் தான் என்பது உங்களுக்கே புலப்படும்!

லண்டனிலுள்ள ஏ. & எப். பியர்ஸ் லிமிடெட்டுக்காக இந்தியாவில் தயாரித்தது PSP. 2-60 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon